# பஞ்சாமிர்தம்

மணி 1 கதி 7

அக்டோபர் 1924

207650

கள், இதுவரை பொது ஜனங்களுக்குள் பரவாதிருப்பதற்கு, நாட்டுத் தலைவர்களின் சிரத்தைக் குறைவே காரணமாம். ஏழை ஜனங்களின் வறுமையும் அறியாமையும் நீங்காது அவர்கள் கிடந்துழலுவதற்கும், இவர்களின் உபேக்ஷையே பெரும்பாலும் காரணம் என்னலாம். இதனால்தான் பொது ஜனங்களுக்கும் தலைவர்களுக்கும் சம்பந்தமின்றி, அவர் ஒரு வழியும் இவர் ஒரு வழியுமாக நடக்கின்றனர்; நாடும் சீர்குலைந்து கிடக்கின்றது. ஜனங்களைத் தம் சொற்படி நடக்கச் செய்யும் திறமை யில்லாதவர் என்ன தலைவர்? இவர்கள் கூடிப் பேசி வாய்மூடுமுன் கொலையும் கலகமும் நடப்பதாயிருந்தால், இவர் தலைமையினால் யாருக்கு என்ன பயன்? இனியேனும், தலைக்கும் வாலுக்கும் இருக்க வேண்டிய சம்பந்தத்தைப் பலப்படுத்தி, இவர் உழைப்பாராக! கூடிக் கூடிப் பேசியது போதும். ஊர் ஊராய்த் தெருத் தெருவாய்ப் பிரசாரம் செய்ய ஏற்பாடு செய்து பாடுபட்டு, இராஜாங்கத்தாருடன் போராடுவது போலவே ஜனங்களுடனும் மன்றாடிப் போதித்து, தம் உள்ளன்பினாலும் உழைப்பினாலும் ஜனங்களின் மதிப்பையும் விசுவாசத்தையும் சம்பாதித்துக் கொண்டு, உண்மைத் தலைவராக விளங்குவாராக!

# விவாகமும் தனிவாழ்வும்.

(வெருலாம் பிரபு பிரான்ஸிஸ் பேகன் என்பவர் இங்கிலீஷில் எழுதியது)

(466-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீ. வே. நாராயணையர், M. A., M. L., மொழிபெயர்த்தது.

மனைவி மக்கள்களை யுடையவனான ஒவ்வொரு மனிதனும் அதிர்ஷ்டத்துக்கு ஜாமீன் கொடுத்தவன் போல் ஆகின்றான்; ஏனெனில், நல்ல வழியிலோ, கெட்டவழியிலோ, ஒருவன் பெருமுயற்சிகள் செய்வானாயின், அவனுடைய மனைவி மக்கள் அவற்றிற்குத் தடைசெய்வாராகின்றனர். உண்மையிலே, மிகப் பெரிய நற்காரியங்களெனவும், பொதுஜன நன்மையை அதிகம் தருவன வென

207650



வும் இறந்த [illegible]களெல்லாம், மனைவி யில்லாதாரிட மிருந்தோ, மக்களில்லா[illegible] மிருந்தோ உற்பவிப்பன வாகுகின்றன ; இவ் வகுப்பார் தமது உள்ளக் காதலாலும் பொருளாலும் பொது ஜன சமூகத்தையே மணந்தவராய், அவ்வழியே பொருளையும் செல விட்டு உதவுகின்றனர். ஆயினும், மக்களைப் படைத்தவர் தமது அரும் பெருஞ் செல்வங்களான அம்மக்களை, வருங்காலத்தினிடத் தே கையடையாக ஒப்புவித்துப்போகவேண்டியிருப்பதையுணர்ந்து, வருங்காலத்தைப் பற்றிய சிந்தனையே பெரிதும் கொண்டு, கவனத் துடனும் ஜாக்கிரதையுடனும் நடப்பது உசிதமும் அவசியமுமாகும்.

தனித்து வாழ்வோரிலும் ஒரு சிலர், தம்முடைய எண்ணங்க ளெல்லாம் தம்மளவிலேயே முற்றுப் பெறுவனவாக ஆக்கி, வருங் காலத்தை யொட்டிய சிந்தனையை வீண்கவலை யெனக் கொள்வர் ; வேறு சிலர், மனைவி மக்களைப் பணச் செலவிற்குக் காரணபூத ரென்றே கொள்வர். இவை மட்டுமோ? மக்களில்லாமையையே ஒருபெருமை யெனக்கொண்டு, தமக்கு மக்கள் இல்லாததினின்றும் பிறர் தம்மை அதிக தனவந்தரெனக் கொள்வரென்று நினைந்து, புணப்பேய் பிடித்து இறுமாப்புறும் பேதையரும் இருக்கின்றனர். "இவன் தனவந்தன்" என்று ஒருவன் சொல்ல, "என்றாலும் இவன் மக்கட் செலவுடையவனாயிற்றே" என்று மற்றொருவன் மக்கட் பேற்றை ஐசுவரியத்திற்கு ஓர் இழிவாகக் கருதி யுரைப் பதை, இவர் ஒருக்கால் கேட்டிருப்பர் போலும். மக்கட்பேறு பொருட் செல்வத்திற்கு ஓர் இழிவாகுமோ? நிற்க.

பொதுவாக, தனிவாழ்விற்குக் காரணமாவது, சுயேச்சையில் ஒருவனுக் குள்ள அபிமானமே ; முக்கியமாய், சொந்தச் சுகத் தையே நினைந்து சுயேச்சைப் பித்தம்பிடித்தவர்தான், எவ்விதமான கட்டுப்பாட்டிற்கு முட்படாதவராய், அரைஞாணையும் புனை யாடை யையுமே கட்டு விலங்குகளாகக் கொள்ளக் கூடியவரா யிருப்பர்.

விவாகமின்றித் தனிவாழ்வு வாழ்பவர், மிக நல்ல நண்பராகவும் மிக நல்ல தலைவராகவும் மிக நல்ல சேவகராகவும் இருப்பரேனும், பிறநாடு புகுந்தொளிவது அவருக்குச் சுலபமாதலின், அவரெல் லோரும் மிக நல்ல பிரஜைகளாக மாட்டார்கள் ; பிறநாடு புகுந்து திரிபவர் பலரும் இவ்வகுக்கத்தினரே யாவர்.

தனிவாழ்க்கை, கோயிற் குருக்களுக்கும் பொருத்த முடை யது ; தருமமாகிற ஊற்றானது, தானுதிக்கும் குட்டத்தை நிரப்பியே வெளியே பாய வேண்டுமென்றால், அது சிரமசாத்தியமன்றோ ? நியாயாதிபதி தண்டாதிபதிகளாவோர், தனிவாழ்வு வாழினும் வா ழா விடினும் ஒன்றே: சுலபராயின், கைக்கூலி வாங்குவோராயின், மனைவியினும் பல மடங்கு தவறிய வொழுக்கமுடைய சேவகர் அவரைச் சார்வாராதலின். மனைவி மக்களை நினைப்பூட்டி, போர்ச் சேவகர்களைத் தளகர்த்தர் வற்புறுத்தி யுற்சாகப் படுத்தும் வழக் கத்தை யான் அறிவேன். துருக்கர் விவாகத்தை ஒரு பொருட்டாக மதியாததினின்றுமே, அந்நாட்டுவீரர் நீச குணமுடையவராகின் றனர் என்று நினைக்கிறேன். உண்மையில், மனைவி மக்கள் மனி தரை நல்லவழியிற் புகுத்திப் பழக்கும் பயிற்சியைப் பயப்பவர் ;



தனிவாழும் மாந்தருக்கு அதிகப்பொருட் செலவிற்குக் காரண மில்லாததால், அவர் மற்றவரினும் பன்மடங்கு தருமவழிகளில் செலவிடக் கூடுமெனினும், அவருடைய மனது அடிக்கடி இளகி யுருகக் காரணமில்லாததால், கரையா மனதுடைய விசாரணை கர்த் தருக்குரிய கடின சித்தம் உடையவரா யிருப்பர்.

மனைவிமார், இளைஞருக்குக் காதற்பெண்டிராகவும், நடு வய துடையவருக்குத் தோழமை கொண்டவராகவும், முதிர் வய தினருக்குத் தாதியர்போன்றும் இருப்பராதலின், எவனும் தனக்கு இஷ்டமான வயதில், "இது தான் மணம் புரியும் வயது" என்று தர்க்கிக்கக் கூடும் ; ஆயினும், "எப்பொழுது மணம் புரி தல் தகும்?" என்ற வினவுக்கு, "இளையோனாயின், இப்பொழு தன்று ; முதியோனாயின், அப்பொழுது மன்று" என்று விடை பகர்ந்தவர், புத்திமான்களுள் முக்கியராகக் கருதப்படுகின்றார்.

கணவர் தம்மிடம் பிரியத்துடன் நடக்கும் காலம் வந்தால், அப்பொழுது அதை ஒரு பெருமையாகக் காட்டவேண்டுமென்று இம்மனைவியர் நினைப்பதாலோ, பொறுமை பெரிதுமுடையார் என்ற புகழ்ச்சியை விரும்புவதாலோ, எது காரணம் பற்றியோ, கெட்ட கணவருக்கு மிக நல்ல மனைவியர் வாய்த்திருப்பதை நாம் அடிக்கடி காண்கிறோம். நண்பரின் புத்திமதியை மேற்கொள்ளா மல் தாமே தேடியடைந்த கணவர் கெட்டவராயினும், தாம் செய்த பிசகிற்குப் பரிகாரமாக, அவருக்கு நன் மனைவியராக் இருந்து விளங்குவாரென்பது உண்மை. —தமிழர் நேசன்.


ஸ்ரீமத் வால்மீகி

இராமாயண வசனம்

பண்டித நடேச சாஸ்திரியாரால்
தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு
பிழையறப் பரிசோதித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.

ஸ்திரீகளும் சிறுவர்களும் கூட எளிதில் தெரிந்து கொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசன ரூபமாய் இவ்வால்மீகி ராமாயணம் எழுதப்பட் டிருக் கிறது. மிக விலையுயர்ந்த கனமான ஆண்டிக் காகிதத் தில் அச்சிட்டு நேர்த்தியான காலிகோவில் அழகாய் பயிண்டு செய்திருக்கிறது.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஆறு காண்டம் ஒரே செட்டு பாலகாண்டம் முதல் யுத்தகாண்டம் வரை | 15 | 0 | 0 |
| சுந்தரகாண்டம் பாராயணத்துக்கு | 2 | 4 | 0 |

கே. மஹாதேவன்,
1, ராமசாமி பிள்ளைத் தெரு
வேப்பேரி — மெட்ராஸ்.

## பல துறைப் பொறுக்கு மணிகள்
### பத்திரிகை ஆராய்ச்சி

(465-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

## I. கல்வி விஷயக் குறிப்புக்கள்.

(1) உபாத்தியாயர்— பின்வருவது Dr. ரவீந்திரநாத தாகூர் ஜப்பான் சென்றபொழுது, அந்நாட்டுப் போதகாசிரியர்கள் முன்பு செய்த பிரசங்கத்தின் சாராம்ச மாகும்:—

அறிவு வளருவதற்கு முக்கிய ஸ்தலம் கல்விச்சாலையாகும். "கற்றனைத்தூறும் அறிவு" என்பதால் இயல்பாய் அமைந்துள்ள அறிவு கற்கக்கற்க வளருமென்பது தெளியப்படும். ஆகவே, ஆசிரியர்கள், மாணவரிடமுள்ள அறிவு விளங்குவதற்குச் சாதனமேயல்லாமல், அறிவை உற்பத்தி செய்யச் சக்தர்கள் அல்லர். "Set them on the scent let them puzzle it out" என்று ஸ்காட் என்பவர் சொல்லிய பிரகாரம், மாணவரது அறிவின் போக்கினுக்குத் தக்கவாறு சூசிப்பித்தல் ஆசிரியர் கடமையாகும். ஆசிரியர் தம் சொந்தக் கருத்துக் கிணங்குமாறு மாணவர்கருத்தைக் கட்டாயம் செய்து திருப்புவது தவறாகும். ஒவ்வொரு மனிதனும் தான் அனுபவித்தறிந்த ஞான முதிர்ச்சியால் ஸ்திரமான அறிவைப் பெறுவானேயல்லாது, ஆசிரியரது கட்டாயத்தினாலும் பயத்தினாலும் அடைய மாட்டான். ஒவ்வொருவனும் உலகத்தில் காணும் புதுமைகளில் மனத்தைச் செலுத்திச் சித்தியும் தவறும் அடைந்து திடப்படல் வேண்டும். மனிதன் குழந்தைப் பருவத்தில் பின்வாழ்க்கையின் பயனைக் கருத மாட்டான். அந்த நிலைமையில், ஆசிரியர்கள், பிற்காலத்தில் அவனைக் குறிப்பிட்ட தொழிலுக்குத் தகுதியாக்கல் வேணுமென்று கருதி, தமது போக்கில் நடத்துவாரானால், அவன் அவரிடத்தில் பயமுற்று, அவர் படிப்பிக்கிற விஷயம் இன்னதென்றே உணராமல் மனப்பாடம் செய்து, கடைசி வருஷப்பரீக்ஷையில் தவறுண்டு பரிதாபம் அடைகின்றனன். சிறுவர்கள் புத்தியானது தன் போக்கிலே சென்று தட்டுத் தடைகளுக்குட்பட்டால், குண்டுக்கற்களில் மோதும் ஜலமானது தடைப்பட்டு அப்பால் அதிவேகமாகச் செல்வதுபோல, மிகுந்த வேகத்துடன் விரிவைப் பெறுவதாகின்றது. அப்படிக்கின்றி, மாணவனது இயற்கை தெரியாமல், ஆசிரியர், தமது முதிர்ந்த





கருத்தை அவனிடம் புகுத்தினால், அவனுடைய அறிவின் வளர்ச்சியைக் கெடுத்தவராவர். புஷ்பம் மலரும் பருவத்திலேயே கனியாக்க நினைப்பது நியாய மாகுமா? புஷ்பமானது தன்னைச் சூழ்ந்த பிரகிருதி வஸ்துக்களின் உபகாரத்தை, அஃதாவது சூரியவெளிச்சம், காற்றுக் கொள்கை, வண்டுகள் வரவேற்றல் முதலியவற்றைப் பெறுவதற்கு வாய்திறந்துவைத்து, அப்பால் வாய்மூடி விரைவைத்துக் கனியாவதே முறைமையாகும். அப்படிக்கின்றி புஷ்ப நிலைமையிலேயே அதனைக் கசக்கினால் பயனற்றுப் போவது போல, சிறுவர்களது பாலஞானத்தில் ஆசிரியர் தமது முதிர் அறிவைப் புகுத்தி, அதனை ஏற்றுக் கொள்ளாமைக்காக அடித்துத் துன்புறுத்துவதால், பாலர் படிப்புக் காலமும்பாழாகி, அறிவும் கெடுதல் அடைந்து, பயனிழந்து போகின்றனர். ஆனால் இந்த நிர்ப்பந்தத்துக் குட்படாமல், மீறி மேற்செல்வதற்கான துராகிருதமான இயல்பைக், குழந்தைகள் கூடவே வளர்ந்துவரும்படியான விதத்தைக் கடவுள் ஓர் அனுக்கிரகமாக அமைத்திருக்கிறார். இந்தத் துஷ்டத்தனத்தைத் தண்டித்து அடக்கவேண்டுமென்பது பெற்றோர் கருத்தாம்; இதனால் யாதொரு பயனும் உண்டாகமாட்டாது. இயற்கை அமைப்பே அவ்வாறு இருப்பதால், சிறுவர்களுக்குச் சுவாதீனம் அளிப்பதே அவரைத் திருத்தத்தக்க ஔஷதமாகும். சில ஆசிரியர்கள் தங்கள் அதிகார இச்சையை, எளிமையான இந்தச் சிறுவர்கள்மீது செலுத்துகின்றனர். தாம் மிகவும் கண்டிப்புக்காரராகவும் பெருமை பாராட்டிக்கொள்கின்றனர். இவர்கள் கொடியவர்களே. இவர்கள் ஆசிரியர் ஸ்தானத்துக்கு அருகரல்லர். கொலையாளிகள், சிறைகாவலர் முதலியோரது ஸ்தானத்தை வகிக்கத் தக்கவர். தாய்மாரும் குழந்தைகளும் ஒருவரோடொருவர் அன்பு பாராட்டி நடப்பதுபோல, ஆசிரியர்கள் குழந்தைகளுடன் குழந்தைகளாய் நடந்துவரல்வேண்டும். குழந்தைகளை வளர்க்க வேண்டுமானால், போதுமான இரக்கமும், அறிவும், யோசனையும் ஆசிரியருக்கு இருத்தல் வேண்டும். பையன்களை வேடிக்கை காட்டுவதற்கமைந்த காடிகள் குரங்குகளைப்போல நடத்தக்கூடாது; உண்மையான இரக்கமும் யோசனையுமில்லாத ஆசிரியரிடம் குழந்தைகளை ஏற்பித்தல் கூடாது.

கல்விச்சாலையானது ஆசிரியரும் குழந்தைகளும் கூடி உண்டாக்கிய ஸ்தலமாகக் கருதினால் மட்டும், குழந்தைகள் நிர்ப்பயமாய்ச் சொந்த இடத்தில் வசிப்பதுபோலக் கருதுவார்கள். கல்விச்சாலையைவிட்டு ஏகிய பின்னரும், கல்விச்சாலைக்குவந்து அக்கறையெடுத்துக் கொள்வார்கள். கல்விச்சாலையானது பக்ஷிகளைச் சிறை செய்யும் கூடுபோலன்றி, பக்ஷிகள்தாமே உண்டாக்கி வசிக்கும் கூடுபோ லாகவேண்டும். சிறுவர்களுக்கு மனச்சுவாதீனம், இருதயச் சுவாதீனம், சித்தச் சுவாதீனம் உண்டாகும்படி கல்விச்சாலையின் பயிற்சி முறைகள் ஏற்படல் வேண்டும். அவர்களுக்குப் புஸ்தகப்படிப்பைக் கொடாமல், பிரகிருதியைத் தாமே நேரிற் கண்டு தமக்குத்தாமே அறிவூட்டிக் கொள்ளும்படியான நிலைமையை உண்டாக்கல் வேண்டும். கடவுள் தாமே சிருஷ்டிகர்த்தர். அவர் தமது சிருஷ்டிப்பொருள்களுக்கும் அத்தகைய சுவாதீன

பாக்கியத்தையே அருளி யிருக்கின்றனர். பையன்களைத் தாம் கருதிய மாதிரிப்படியே வளர்க்க விரும்புகிற கொடிய உபாத்தியாயர்களுடைய கருத்துக்கு இது விரோதமே. —இ.போ.

(2) **தாய்மொழிப் பயிற்சி** :—நமது நாட்டிலேயுள்ள கலாசாலைகளில், கல்வி அந்நிய மொழி மூலமாகப் போதிக்கப்படுதலால், மாணவர்கள் தத்தம் தாய்மொழியைச் செவ்வையாய்ப் பேசவும் எழுதவும் அசக்தர்களாயிருப்பது, நாட்டின் முன்னேற்றத்துக்கு மிகப்பெருந் தடையா யிருக்கிறது. இத் தடை சிறிது சிறிதாக நீங்குங் காலம் நெருங்கி விட்டது. இதன் பொருட்டுச் சர்வ கலாசாலையார் செய்யும் ஏற்பாடுகளில், பி. ஏ. பட்டம் பெறும் வரை தாய்மொழியை ஒரு முக்கிய பாடமாக எடுத்துக்கொண்டு பயில இடந்தருவதோடு, அதற்குப் பதிலாக வடமொழி, லத்தீன், பிரஞ்ச் முதலிய பாஷைகளில் யாதானு மொன்றைப் பாடமாகப் பயிலும் மாணவரையும் கூட, தமது தாய்மொழியை எழுதிப்பழகும்படி கட்டாயப் படுத்துதல் தகும். இதுவுமன்றி, கீழ்த்தரப்படிப்பெல்லாம், கூடியவரை அவரவர் தாய்மொழியிலேயே போதிக்கப்படல்வேண்டும். இதை அரசாங்கத்தாரும் சர்வகலாசாலையாரும் கவனிப்பாராக. —மா

## II. மதவிஷயக் குறிப்புக்கள்.

**மதமும் ஜனசமூகக் குறிக்கோள்களும்** :—பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் புரோடெஸ்டன்ட் கிரிஸ்தவர்கள் ஜனசமூகச் சீர்திருத்த விஷயமாய் மிகவும் ஊக்கம் எடுத்துக்கொள்கின்றனர். ஆனால் இந்துக்களும் முகம்மதியர்களுமோ, முன்னோர் அனுஷ்டித்த கர்ணபரம்பரையான கதைகளையும் வழக்கங்களையுமே பின்பற்றி, அவர்களுடைய நெறியைவிட்டு விலகாமல் நடந்துவருகின்றனர். இவர்கள் தங்கள் முன்னேற்ற விஷயத்தில் உபேக்ஷையா யிருக்கின்றனர். அவர்களுடைய ஊக்கத்தையும் இவர்களுடைய உபேக்ஷையையும் கவனிப்பவர்களுக்கு மிகுந்த ஆச்சரியம் உண்டாகும்.

மேற்கூறிய கிரிஸ்தவர்கள் கீழ்க்கண்ட விஷயங்களை அனுசரித்து ஜனசமூகத்தைச் சீர்ப்படுத்த வேண்டுமென்று தீர்மானித்து, அந்தச் சீர்திருத்தங்களைப் பதினாறு பிரிவுகளாகப் பின்வருமாறு வகுத்திருக்கின்றனர்.

(1) ஆணோ பெண்ணோ, செல்வனோ ஏழையோ, சகல மனிதர்களுக்கும் உரிமையும் நீதியும் ஒரே மாதிரியாக ஏற்படுத்தி நடாத்தல் (2) கற்பு நிலையும் கலியாண பந்த விலக்குச் சட்டங்களும், இருபாலாருக்கும் ஒரே திட்டமா யிருக்கும்படிச் செய்து, வீட்டு வசதிகளைப் பெருக்கிக் குடும்பத்தைப் பாதுகாத்தல். (3) முக்கியமாய்ப் படிப்பித்தல், இளைப்பாறுவித்தல்களால் ஒவ்வொரு குழந்தையும் கூடியவரை சம்பூரண பரிபக்குவம் அடையும்படிச் செய்தல். (4) சிறிய குழந்தைகளை வேலைசெய்ய விடாமல் நீக்கல். (5) ஜனசமூகத்தினரின் சரீரசுகத்தையும் சன்மார்க்க சுகத்தையும் பேணத்தக்க விதமாய், ஸ்திரீகள் வேலை செய்யும் நிபந்தனைகளை ஒழுங்கு படுத்தல். (6) வறுமையைக் குறைத்தலும் தவிர்த்தலும். (7) மதுபானத்தினால் ஒவ்வொரு மனிதனும் ஜனசமூகமும் வரையறை யின்றிச் செலவிட்டுப் பொருளிலும் ஒழுக்கத்திலும் கெட்டுப் போகாமல் காத்தல். (8) சுகாதாரத்தைப் பேணுதல். (9) அபாயகரமான யந்திரங்களில் வேலை செய்வதையும், வேலையால் விளையும் பிணிகளையும், மரணத்தையும் தடுத்து, வேலையாட்களைப் பாதுகாத்தல். (10) வேலையாட்களை வேலை கிடையாமல் படும் கஷ்டத்தினின்றும் காத்து, ஜீவனப் பாதுகாப்புக்கு இடையூறான விதங்களை நீக்கி, அனுகுணமான சந்தர்ப்பங்களைச் சகலரும் அடைவதற் குரிய சமபாத்தியத்தைப் பெருக்குதல். (11) வேலைக்காரர்கள் முதுமை யடைந்த காலத்துக்கும், காயங்களுற்ற காலத்துக்கும், தக்க பாதுகாப்புப் பொருள்களை அமைத்தல். (12) எஜமானர்களுக்கும் வேலையாட்களுக்கும் ஒன்று போல ஒழுங்கு ஏற்படுத்தும் பாத்தியம் உண்டாக்கி, வேலைத்தர்க்கங்கள் ஏற்பட்ட காலத்தில் மத்தியஸ்தம் சமாதானம் உண்டாகத் தக்க வழிகள் ஏற்படுத்தல். (13) ஏழு நாளைக்கு ஒரு நாள் வேலை விடுமுறை ஏற்படுத்தல். (14) வேலை நேரங்களைக் குறைக்கக் கூடிய அளவிற்குப் படிப்படியாக நியாயமாய்க் குறைத்து, மேலான மனித வாழ்க்கைக்கு அவசியமான ஒழிவு நேரத்தையும் அம்மட்டில் அமைத்தல். (15) ஒவ்வொரு தொழிலுக்கும் ஜீவனாம்சத்திற்கு இன்றியமையாத கூலியும், அம்முயற்சி தரக்கூடிய உயர்ந்த கூலியும் அமைத்தல். (16) சொத்துச் சம்பாதிப்பதற்கும் உபயோகிப்பதற்கும் கிரிஸ்தவ விதிகளைப் புதுமையாக அழுத்துதலும், தொழிலின் வருமானங்களை முடிவிற் கண்டுபிடித்த மாதிரியில் நியாயமாய்ப் பங்கிடுதலும். இவைகள் அனைத்தும் முக்கியமும் முதன்மையுமான ஆராய்ச்சி விஷயங்களாம். இவற்றைப் பற்றி ஜனங்களுக்குத் தெளிவான வழிகாட்டுவதற்குக் கிறிஸ்தவர்கள் முயன்று வருகின்றனர். —இ. போ.



## III. சில்லறைக் கலம்பகம்

(1) **பத்திரிகைகள்**:—அறிவு விருத்திக்கும் நாகரிக விருத்திக்கும் பத்திரிகைகள் உற்ற சாதனங்கள் என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். எனினும் நம் நாட்டிலே பத்திரிகைகளை ஜனங்கள் அவற்றின் சிறப்புக் கேற்றபடி போஷிப்ப தில்லை யென்றே சொல்லவேண்டும். படிப்புக்குறைவும் பணமின்மையுமே இதன் முக்கிய காரணங்களாம். பதினாயிரம் சந்தாதாரர்களுக்கு மேற்கொண்ட பத்திரிகை நமக்குள் முயற்கொம்பு என்னலாம்; நானூறு ஐந்நூறு பேர்கூட இன்றிப் பல பத்திரிகைகள் தவிக்கின்றன. அமெரிக்காவிலே ஐக்கிய மாகாணங்களிலும், இங்கிலாந்திலு முள்ள சில பத்திரிகைகளின் சந்தாதார் கணக்கைக் கீழே காணலாம். இருபது லக்ஷம் முப்பது லக்ஷம் சந்தாதார்கள் என்றால், நம்மவர் நம்பவுமே மயங்குவார்கள்; எனினும் உண்மை அப்படியே இருக்கிறது:—

அமெரிக்காவிலுள்ள சில பத்திரிகைகளும் சந்தாதாரரும்:—

| | |
|---|---|
| சனிக்கிழமை ஈவினிங் போஸ்டு | 21,00,098 |
| லேடீஸ் ஹோம் ஜர்னல் | 17,99,002 |
| பிக்டோரியல் ரிவியூ | 17,65,430 |
| அமெரிக்கன் மகஸைன் | 16,04,433 |
| உமன்ஸ் ஹோம் கம்பானியன் | 14,67,509 |
| காஸ்மாபாலிடன் | 9,83,390 |
| லிடரரி டிஜஸ்ட் | 9,00,000 |
| கண்ட்ரி ஜெண்டில்மான் | 7,64,700 |
| நாஷனல் ஜியோக்ராபிக் மகஸைன் | 7,34,284 |
| ரெட்புக் மகஸைன் | 7,33,576 |

இங்கிலாந்திலுள்ள சில பத்திரிகைகளும் சந்தாதாரரும்:—

| | |
|---|---|
| டைம்ஸ் | 7,91,866 |
| நியூஸ் ஆப்தி ஒர்ல்டு | 30,00,000 |
| டெயிலி ஹெரால்டு | 2,00,000 |
| டெயிலி மிர்ரர் | 10,02,882 |
| டெயிலி கிரானிகில் | 10,00,000 |
| ஜான்புல் | 7,16,255 |
| ஆடோகார் | 41,353 |
| பஞ்ச் | 10,00,000 |
| பிக்சர் ஷோ | 2,68,380 |
| ஆன்ஸர்ஸ் | 4,78,621 |
| பாய்ஸ் மகஸைன் | 2,04,351 |
| குட் ஹௌஸ் கீபிங் | 1,44,479 |
| மை மகஸைன் | 1,09,101 |
| லேடீஸ் ஜர்னல் | 4,42,631 |
| இல்லஸ்ட்ரேடட் டிரஸ்மேகர் | 6,13,612 |

(2) **வீட்டுவேலைக்காரர்**—களவு, பொய், வாய்த்துடுக்கு முதலிய குற்றங்களில்லாத வேலைக்காரர் எங்கும் அருமையே. யோக்கியம் ஒருபுறமிருக்க, பர்மாதேசத்திலே வேலைக்காரர் கிடைப்பதே அருமையா யிருக்கிறதாம். வெள்ளைக்காரர் வீடுகளிலே யுள்ள வேலைக்காரர்களிற் பலர் ஜெயில் புள்ளிகளாம்; அதாவது குற்றப்பட்டுத் தண்டனையடைந்து, சிறையிருந்து, பிறகு தண்டனை முடிந்து வெளி வந்தவர். தேயிலைத்தோட்ட முதலாளியான ஒரு துரை, தன் வேலைக்காரர் எல்லோரும் ஜெயில் புள்ளிகளே என்றும்; அப்படி யிருந்தும், அவர்கள் வெகு திருப்திகரமாக நடக்கின்றனர், தன் பண்டங்களில் எதுவுமே இதுவரை திருட்டுப்போனதில்லை என்றும் சொல்லியிருக்கிறார்; எந்தப் பொருளையும் அவர் பூட்டி வைப்பதில்லையாம். குற்றவாளிகளைச் சீர்திருத்தும் பணிசெய்து வரும் இரக்ஷண்ய சேனைக்காரர்களில் ஒரு சீமாட்டி, கொலைக் குற்றவாளிகளே மிகச் சிறந்த வேலைக்காரரென்று கூறியிருக்கிறாள். இதன் காரணம், இவர்களில் பலர் நல்ல குடும்பங்களைச் சேர்ந்தவரும் மானஸ்தர்களும், ஏதோ கோபாவேசத்தில் செய்த குற்றத்துக்காகப் பின்பு மனம் வருந்துவோருமா யிருப்பதுமேயாம். இப்பொழுது குற்றவாளிகளை அண்டமானுக்குத் தீவாந்தரம் அனுப்பி



வரும் வழக்கம் நின்று, அண்டமானில் குற்றவாளிகளின்றிக் காலிச் செய்யப் போவதால், ஓராயிரம் குற்றவாளிகள்வரை பர்மாவுக்குத் திரும்புவர்; இவர்களுக்குச் சிறைச்சாலைகளில் இடம் போதாது; இவர்களில் பலர் கொலையாளிகளாகவு மிருப்பர். இவர்களில் சிலரை வீட்டு வேலைக்காரராக வைத்துக் கொள்ளலா மென்றும் ஆலோசனை செய்கின்றனர்.

(3) **செவ்வாயும் பூமியும்**—செவ்வாயின் குறுக்களவு 4260 மைல்; அது பூமியில் ஏழில் ஒரு பங்கு பருமனுள்ளது. நமக்கு 687 தினங்கள் கொண்டது அங்கே ஒரு வருஷம்; 24 மணி 40 நிமிஷம் கூடிய காலம் அங்கே ஒரு நாள். செவ்வாயைச் சுற்றியும், பூமியைச் சுற்றி யிருப்பதுபோல, விசாலமான வாயுமண்டலம் இருக்கின்றது; ஆயினும், நமது வாயுமண்டலத்திலும் இலேசானது. மேகங்கள், மூடுபனி, நீராவி முதலியன அங்குமுண்டு; பூமியிற்போல, உத்தரதுருவ பூர்வதுருவ பனிப் பிரதேசங்களுமுண்டு; ஆனால், உன்னதமான மலைகளும், நிலைமாறாத அலைகடல்களும் அங்கில்லை. செவ்வாயின் பெரும்பாகம் வெறும்பாழே; எனினும், மைதானங்களும், புல்தரைகளும், அடவிகளும்கூட இருக்கின்றன. அங்குள்ள பாழிடங்களிலும் மைதானங்களிலும் கால்வாய்கள் மாறிமாறிப் பின்னலுண்டு கிடப்பது தோற்றுகின்றது. இவை, இயற்கையில் அமையாது, செயற்கையால் வெட்டப்பட்டு உண்டானவை போலவே காண்கின்றன. இரண்டு மூன்று கால்வாய்கள் சந்திக்கு மிடங்களில், தோப்புக்கள் போன்ற காட்சிகளும் காணப்படுகின்றன. இவை இன்னவென்று இன்னும் உறுதியாய்த் தெரியவில்லை.

(4) **ஆதி மனிதர்**—மங்கோலியாவிலுள்ள கோபி வனாந்தரத்தைப் பரிசோதித்து வரும் அமெரிக்க சாஸ்திரஞ்ஞர்கள் அற்புதமான சில விஷயங்களைக் கண்டுபிடித் திருக்கின்றனர். ஆசியாவின் மத்தியபாகம்தான் ஆதி மனிதரின் ஜனன ஸ்தான மென்பது நாளுக்குநாள் விளங்குகின்றதாம். அமெரிக்காவின் வடபாகமும் ஆசியாவும் ஒருகாலத்திலே தொடர்ந்த நிலமாக விருந்தனவாம். இவர்கள் தோண்டிப் பார்த்துக் கண்ட அதிசயங்கள் பல: அவற்றில், டைனோஸார் என்னும் மிகப் பெரிய மிருகம், இப்பொழுது உலகத்தில் எங்கு மின்றி நசித்துப்போனது, ஒருகோடி வருஷங்களுக்கு முன் இட்டு வைத்த முட்டைகளில் 25, அப்படியே அகப்பட்டிருக்கின்றன. இந்த முட்டைகளில் சிலவற்றுக்குள் டைனோஸார் குஞ்சுகள் உருக்குலையாது காணப்படுகின்றனவாம்.

(5) **ஆதி ஜர்மனியரும் ஹிந்துக்களும்**—ஜனங்களுக்குள் வழங்கும் புராண கதைகள், பழைய சரித்திரங்கள், ஆதிகாலத்தில் நடைபெற்ற சட்டங்கள், பழக்க வழக்கங்கள் முதலிய பல துறைகளில் ஆராய்ந்து பார்த்தால், ஆதிஜெர்மானியர்களுக்குள் ஹிந்துக்களின் நாகரிகம் மேலிட்டு வியாபித்திருந்த தென்பது துலங்குகின்றதாம். ஹிந்துக்களைப்போலவே அவர்களும், இயற்கைச் சக்திகளையும் பெருந்தோற்றங்களையும் தேவதைகளாகப் பாவித்து வணங்கி வந்தது மன்றி; விதவைகள் புனர் விவாகம் செய்யாமை, உடன்கட்டை யேறுதல், இரவுதொட்டுப் பொழுது கணக்கிடுதல், கிராமப் பஞ்சாயத்து முதலிய வழக்கங்கள் சில அவர்களுக்குள்ளும்,

இருந்தனவாம். இவற்றைக் கொண்டு, ஆதி ஹிந்துக்கள் ஜெர்மனி வரை சென்று குடியேறி, அந்நாட்டிலே வியாபகம் பெற்றிருந்தனரென்று யூகிக்கப்படுகின்றது. ஆகஸ்டு மாதத்து "எடுகேஷனல் ரிவியூ" வில் இதைப்பற்றி விவரமாய்க் காணலாம். —மா.

(6) இராஜீய விஷயங்களில் ஸ்திரீ சுதந்தரம்:—பின் வருவது, ஐம்பது ஆண்டுகளுக்கு முன், 25–8–1874 ல், டாக்டர் ஆநி பெஸன்ட் அம்மையார் முதல்முதல் செய்த பிரசங்கத்தினின்றும் எடுத்தெழுதியது. இன்றுமே அது நம் நாட்டுக்குப் பொருந்தும்:—ஸ்திரீகளுக்கு அரசாங்க அதிகாரம் கொடுத்தால் அவர்களுக்கு ஏற்பட்ட குடும்ப வேலைக்குக் கெடுதல் உண்டாகுமென்று கூறுவது, மிகவும் பழமையான வசனம். ஆண்மக்கள் வக்கீல்களாயும், வைத்தியர்களாயும், வியாபாரிகளாயும் இருந்து கொண்டு, ஒவ்வொரு மணிநேரத்திற்கும வேலை ஏற்படுத்திக்கொண்டு, பெரிய ஆலோசனைகள் புரியவோ, மூளைகளைப் பிரயோகிக்கவோ, மனசில் பெரும் பெரும் காரியங்களை ஆராயவோ, புத்தியில் பெருங் கருத்துக்களை விருத்தியாக்கவோ செய்யாநிற்பர். அப்படிக்கிருந்தும் (வாக்குரிமை) வோட்டுக்குரியவரா யிருக்கின்றனர். வேறு வேலைகள் உள்ளவர்களாயிருப்பது வாக்குரிமைக்குத் தகுதியாகாதென்று சொல்வோமானால், சோம்பேறிகளே வோட்டுக்குத் தகுதியுடையவரென்று சட்டம் உண்டாக்குவோமாக. ஸ்திரீகள், மூடபக்தியும், குறுகிய அறிவும், துரபிமானமும், காரியம் செய்யும் தகுதியின்மையும் உடையவரென்று ஆண்மக்கள் ஏன் குறை கூறுகின்றனர்? விரிவான விஷயங்களில் அக்கறை யெடுக்கும்படி அவர்களுக்கு இடங்கொடுத்தால், மேற்குறித்த குறைகளுக்கு நிவர்த்தி உண்டாகும். உங்கள் மனைவிகளை உங்களுக்கு ஓர் விளையாட்டு விநோதச் சாமானாக ஆக்கிக் கொள்ள விரும்பினால், அவர்களுடைய கருத்துக்களை உங்கள் வீட்டு நான்கு சுவர்களுக்கும் வெளியே செல்லவொட்டாமல் தடுத்துக் கொள்வது புத்திசாலித்தனமே! மனைவிமார் உங்கள் வாழ்க்கையின் நல்ல சங்கதியிலோ அல்லது தீய சங்கதியிலோ உங்கள் இணைபிரியாதிருந்து, உங்கள் தொந்தரவு காலங்களில் ஆறுதல் அளிக்கத்தக்க பெரும் சித்தமுடையவராகவும், கஷ்டகாலங்களில் ஆலோசனை சொல்லத்தக்க புத்திசாலிகளாகவும், அபாயத்தில் ஆதரிக்கும் திறமையுள்ளவர்களாகவும், உங்கள் மக்களுக்குத் தகுதியான தாய்மாராகவும், உங்கள் மக்களை விவேகத்துடன் நடத்திப் பாதுகாக்கத் தக்கவர்களாகவும் செய்ய விரும்புவீர்களானால், உங்கள் பெருங் கருத்துக்களையும், ஆழ்ந்த யோசனைகளையும், நுணுகிய நோக்கங்களையும் அவர்களுடன் அளவளாவி, அவர்களுடைய புத்தி தத்துவங்களை விசாலப்படுத்தவும், அவர்களது சித்தத்தைப் பெருந்தன்மைப் படுத்தவும் வழிதேடுங்கள். உங்கள் மூளைகளையும் புத்திகளையும் இராஜதந்திர வெற்றிக்காக சண்டைசச்சரவுகளில் நுழைய விட்டு விட்டு, உங்கள் வீட்டுக் காரியங்களையும் மனைவிகளையும் ஒழிவு நேரங்களில் நீங்களாக தயவினாற்போலச் சிறிது கவனித்தும், மேலாடம்பரமான அன்பு செய்தும், அலட்சியம் செய்யாதேயுங்கள். ——இ. போ.

# ஸ்ரீராமாநுஜ சரிதம்




ரேவ். F. கிங்ஸ்பேரி, B.A., சென்னை.

ஆண்டுகளுக்கு முன்னே தமிழ் நாடெங்கும் சமண சமயமும் பௌத்த சமயமும் வளர்ந்தோங்கினமையினாலே, சிவ வணக்கமும் விஷ்ணு வணக்கமும் மிகக் குன்றினது மன்றி, முற்றிலும் அற்றுப் போகுமோ எனப் பலர் நினைக்கும்படியி லிருந்தன. அப்பொழுது பன்னீராழ்வார்களும், சமய குரவர் நால்வரும் தோன்றி, நாலாயிர திவ்விய பிரபந்தங்களையும் தேவார திருவாசகங்களையும் பாடிப் பரப்பவே, அவற்றின் மகிமையினாலே பௌத்தம் இருந்த இடமும் தெரியாமலும், சமணம் தன் வலியிழந்தும் போயின. விஷ்ணு வணக்கம் வைஷ்ணவ சமயமாகவும், சிவ வணக்கம் சைவ சமயமாகவும் வளர்ந்து, முன்னில்லாத வலியும் சிறப்பும் பெற்றன. இவை எல்லாம் கிறிஸ்தப்தம் ஏழு, எட்டு, ஒன்பது பத்தாம் நூற்றாண்டுகளில் என்க.

வேதியருக்குப் பின் உபநிடதகாரர் தோன்றியது போலவும், தீர்க்கதரிசிகளுக்குப் பின் இரபிமார் தோன்றியது போலவும், அப்போஸ்தலர்களுக்குப் பின் திருச்சபைப் பிதாக்கள் தோன்றியது போலவும், ஆழ்வார்களுக்குப்பின் ஆசாரிய சுவாமிகளும், சமயகுரவர்களுக்குப்பின் சந்தான குரவர்களும் தோன்றினது முறையே யாகும். ஆசாரிய சுவாமிகளுக்குள்ளே உயர்வொப் பில்லாதவர், உடையவர் எனப்படும் இராமாநுஜரே என்பது ஒருதலை. ஆயினும், இராமாநுஜர், நாதமுனிகள் எனப்படும் அரங்கநாதாசாரியர், புண்டரீகாக்ஷர், ஆளவந்தார் எனப்படும் யாமுனாசாரியர் முதலியவர்களுக்குப் பின்வந்தவரே. இராமாநுஜரது வம்மிச வரலாறு பின்வரும் வம்மிச மரம் காட்டும்.

- அரங்கநாத ஆசாரியர் (நாதமுனிகள்.)
  - ஈசுவரமுனிகள்
    - யாமுனாசாரியார் (ஆளவந்தார்)
      - தேவராசபூரணர் (தெய்வத்துக்கரசுநம்பி)
        - ஸ்ரீ சைலபூரணர் (திருமலை நம்பி)
        - காந்திமதி—கேசவபட்டர்
          - லக்ஷ்மணர் (இராமாநுஜர்)
        - ஸ்ரீதேவி—கமல நயன பட்டர்
          - கோவிந்தபட்டர்
      - பிள்ளையரசு
      - ஸ்தோத்திரபூரணர் (சோத்தநம்பி)
      - திருவரங்கப் பெருமாள் அரையர்



கிறிஸ்தப்தம் பதினோராம் நூற்றாண்டிலே, ஸ்ரீ சைல பூரணர் எனப்படும் வைணவப் பிராமணர், தமது பாட்டனார் ஆளவந்தாருக்குச் சிஷ்யராகி, அவருடைய ஆணையினாலே திருப்பதி எனப்படும் வேங்கடமலைக்குக் காந்திமதி, ஸ்ரீதேவி என்னும் தங்கையர் இருவரோடுஞ் சென்று, அங்கே வைணவ சமய உபதேசஞ் செய்து வந்த காலத்தில், ஸ்ரீ பெரும்பூதூர் வாசராகிய கேசவபட்டர் என்னும் மறையவர் திருப்பதிக்குச் சென்று, காந்திமதியம்மையாரைத் திருமணஞ்செய்து, அவரோடு தம்மூர் சென்று வாழ்ந்திருந்தனர். அங்கே அவர்களுக்கு ஒரு புதல்வர் பிறந்தனர். அவருக்குத் தாய்தந்தையர் இலக்குமணன் என்று பெயரிட்டார்கள். பிறந்தபிள்ளைக்கு அவ்வக் காலத்திலே செய்யவேண்டிய ஸம்ஸ்காரங்களெல்லாஞ் செய்யப்பட்டன. பிள்ளையார் "நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாக" உடலிலே மட்டுமன்று, உணர்விலும் நல்லொழுக்கத்திலும் வளர்ந்து வந்தனர். ஏற்ற பருவத்திலே உபநயனம் செய்யப்பெற்று யஜ்ஞோபவீதம் என்னும் பூணூல் தரித்துத் துவிஜத்துவம் அடைந்தார். ஆயினும் பாலிய பிராயத்திலே தந்தையாரை யிழந்தார் இலக்குமணர். இழப்பினும், "தந்தையொடு கல்வி போம்" என்ற வாக்கு அவர்பாற் பொய்த்தது. தாயார் காந்திமதியம்மையார், பிள்ளையாருக்கு எவ்வாற்றானும் எவ்வகைக் கல்வியும் கற்பிக்கவேண்டும் என நிருணயித்து, அதன்படியே ஸ்ரீ பெரும்பூதூரில் மகனார் கற்கக்கூடிய கல்வியெல்லாம் கற்றபின், சமய சாஸ்திரங்களெல்லாம் கற்று வரும்படி இலக்குமணரைக் காஞ்சீபுரத்திலுள்ள யாதவப் பிரகாசர் என்னும் ஸ்மார்த்தப்பிராமண சாஸ்திரஞ்ஞரிடம் அனுப்பி வைத்தார். மாணாக்கர் குருவின் வீட்டிற்றானே தங்கி, அவரோடு வாழ்ந்துவருவது பண்டைக் காலத்து மரபு ஆகையால், இலக்குமணரும் அவ்வாறே யாதவப் பிரகாசரோடு வாழ்ந்துவந்தார். அக்காலத்திற்றானே இலக்குமணரது சிற்றன்னை ஸ்ரீதேவியம்மையார் கேசவ பட்டரை மணந்து, அம்மன்றலின் பயனுயுதித்த கோவிந்தர் என்னும் பிராமண வாலிபரும் காஞ்சீபுரத்தில் யாதவப்பிரகாசரிடம் கல்வி கற்கும்படி வந்தார். வாலிபர் இருவரும் வேறு மாணாக்கரும் உடன்கற்று வந்தார்கள். இலக்குமணரைக் காணும்படி, அவரது பாட்டனாரது தந்தையார் ஆளவந்தார் ஸ்ரீ ரங்கத்திலிருந்து காஞ்சிக்கு வந்து, இலக்குமணர் தம்மை யறியாவண்ணம் மாறுவேடஞ

தரித்து அவரைக்கண்டு, வியந்து சென்றனர். இலக்குமணர்
கற்றுவரு நாளிலே, கல்வி, அறிவு, ஒழுக்கங்களிலே தமது
குருவாகிய யாதவப் பிரகாசரினும் அவர் சிறந்தவர் என்
கிற எண்ணம் மாணாக்கர்களுக்குப் பட்டது. பற்பல இடங்
களிலே உபநிடத வாக்கியங்களுக்குக் குரு சொன்ன அர்த்
தம் தப்பிதம் என்று இலக்குமணருக்குத் தோன்றியது.
அவைகளின் மெய்ப்பொருள் இவையென்று, இலக்குமணர்,
மாணாக்கர்கள் எல்லாரும் இருக்கும்பொழுது குருவுக்கு
எடுத்துக்காட்டினார். யாதவப் பிரகாசர் ஏகான்மவாதி;
ஏகான்மவாதம் தப்பிதம் என்பது, இலக்குமணர் கொள்
கை. இக்காரணங்களினாலே, குரு, இலக்குமணர் மேல்
அழுக்காறுற்றார். அதனால் இலக்குமணரைக் குரு கொல்ல
நினைத்து, அதற்கு உபாயஞ் செய்கையில், இது கோவிந்
தருக்குத் தெரியவந்தது. அவர் மூலமாய் இலக்குமண
ரும் அறிந்து, குருவின் எண்ணம் நிறைவேறாது தவறும்
படி ஓடிப்போய்விட்டார். ஆயினும் உடனே அவரிடம்
கல்விகற்பதை நிறுத்திவிடவில்லை. இக்காலத்திலே காஞ்சீ
புரத்திலிருந்த அரசன் மகளுக்குப் பேய் பிடித்திருந்த
தென்றும்; அப்பேயை ஓட்டும்படி அரசன் யாதவப் பிர
காசரை வேண்ட, அவர் சென்று பேயை அதட்டியும்,
பேய் இராஜகுமாரியை விட்டுப்போகாமல் யாதவப் பிர
காசரைப் பரிகாசஞ் செய்ததென்றும்; ஆயினும் குரு
வுடனே கூடச்சென்ற இலக்குமணரைப் பிசாசு கண்டு
தண்டஞ் செய்து, அவர் பெருமையை எடுத்துக்கூறி,
இராசகுமாரியைவிட்டு வெளியே போய்விட்டதென்றும்
ஒரு கதையுண்டு. பேய்க் கதைகளை நம்புவார் நம்புக.
பேய்க்கதைகளை நம்பாதாரும், இராஜகுமாரி ஏதோ ஒரு
சித்தப்பிரமை கொண்டிருந்தாளென்றும், அதனை மாற்ற
யாதவப் பிரகாசரால் முடியவில்லை யென்றும், இலக்கு
மணருடைய முகவிலாசத்தினாலோ, அருள் கூர்ந்தபார்வை
யினாலோ, இன் சொல்லினாலோ, வேறு எவ்வாறோ, இராஜ
குமாரி சித்தப்பிரமை தீர்ந்து சுகப்பட்டாளென்றும் நம்
பின், நம்பலாம். அதற்குத் தடையில்லை. இதன்பின் இலக்
குமணர் தம் குருவை விட்டு நீங்கினர்.

இதன்பின் போலும் இலக்குமணருக்கு அன்னையார்
விவாகஞ் செய்துவைத்தது. விவாகஞ் செய்த இலக்கு
மணர், மனைவியோடு காஞ்சீபுரத்திற்றானே வசித்தனர்.
ஆயினும், இவரது மனைவியி னெண்ணமும் இவரெண்ண



மும் பொருந்தாமையினாலே இல்லறம் நல்லறமாக இலக்கு
மணர் கண்டிலர்.

ஒருநாள் வறிஞனொருவன் பசியால் வருந்தி இலக்கு
மணரிடஞ் சென்றிரக்க, அவர் அவனிடம், "என் வீட்டுக்
குப்போய் என்மனைவியிடம் சோறுவாங்கிச் சாப்பிடு"
என்று சொல்லி யனுப்பிவைத்தார். மனைவி, பிச்சைக்
காரன் சூத்திரன் என்று கண்டு, சமைத்த சாதம் பிராம
ணர் சாப்பிடுவதற்கு முன் சூத்திரனுக்குக் கொடுப்பின்
சேஷமாகு மென்று பிச்சை கொடாது மறுத்து விட்
டாள்.

இலக்குமணர் என இயற் பெயருடைய இராமானுசர்
காஞ்சீபுரத்திலே வசித்து வந்த காலத்திலே, வரதராஜப்
பெருமாள் திருக்கோயிலிலே கைங்கரியஞ் செய்து வந்த
காஞ்சீ பூரணர் என்ற பாகவதோத்தமருக்கு நண்பரானார்.
திருக்கச்சி நம்பியார் (=காஞ்சீ பூரணர்) சதுர்த்த வருணத்
தினர். பத்தி கல்வி அறிவு ஒழுக்கங்களிலோ எவரினும்
குறைந்தவ ரல்லர். இவரிடம் பத்தி விஷயமாக அடிக்
கடி இராமானுசர் சம்பாஷித்து அனேக காரியங்களைக்
கற்றுக் கொண்டனர்.

இஃதிப்படி யிருக்க, ஸ்ரீரங்கத்திலே மிகவிருத்
தாப்பியராயிருந்த ஆளவந்தார், தாம் சாகுமுன்னே தம்மை
வந்து பார்க்கும்படி இராமானுசரைக் கூட்டிக் கொண்டு
வரும்படி, தமது மாணவருட் சிறந்தவராகிய பெரிய நம்பி
யார் எனப்படும் மகா பூரணரைக் காஞ்சீபுரத்துக்கு அனுப்பி
வைத்தார். மகா பூரணர் காஞ்சியை யடைந்து இராமா
னுசரைக்கண்டு, அவரைக் கூட்டிக்கொண்டு திருவரங்
கத்துக்குத் திரும்பினர். இருவரும் கொள்ளிட நதியின்
வடகரை சேர்ந்தபோது, திருவரங்கத்திலிருந்து இடு
காட்டுக்குக் கொண்டுவரப்பட்ட ஒரு பிரேதத்தைக் கண்
டார்கள். கிட்டிச்சென்று பார்த்தபொழுது, அஃது ஆள
வந்தாரது திருமேனி யென்றறிந்தார்கள். ஆளவந்தார்
உயிரோடிருந்த காலத்தில் அவர் மிகவிரும்பிய மூன்று
காரியங்களைச் செய்யவில்லையே என்ற விசனத்தோடிறந்தா
ரென்று இராமானுசர் அறிந்து, அவை எவையென
விசாரித்தார். அவை (1) விசிஷ்டாத்துவைதத்துக்குப்
பொருந்த வேதாந்த சூத்திரத்துக்கு ஒரு பேருரை (மகா
பாடியம்=ஸ்ரீபாஷ்யம்) எழுதப்பட வேண்டும், (2) பத்தி
யும் கல்வியு முடையானொருவனுக்குப் பராசரர் என்ற

பெயரிடல் வேண்டும், (3) பத்தியும் கல்வியுமுடையானொருவருக்குத் திருவாய்மொழி முதலிய பிரபந்தங்கள் செய்தருளிய நம்மாழ்வாரது திருப்பெயராகிய சடகோபர் என்றதைத் தரிக்க வேண்டும், என்பவைகளே. இவைகளைக்கேட்ட இராமானுசர், கடவுளுடைய திருவருளை முன்னிட்டு இம் மூன்றையும் தாம் செய்து முடிப்பதாக நிர்ணயம் பண்ணிக்கொண்டு, சிலதினங்களுக்குள்ளே புறப்பட்டு மீட்டும் காஞ்சிவந்து சேர்ந்தார். தாம் பிராமணராயிருந்தும், திருக்கச்சி நம்பியார் சூத்திரராக விருந்தும், பாகவதோத்தமரை எவ்வாற்றானும் பிராமணருக்குக் குறையாது மதித்துவந்த இராமானுசர், தம்வீட்டிற்கு வந்து போசனம் செய்தருள வேண்டுமென்று நம்பியாரை வேண்டினர். திருக்கச்சி நம்பியாரும் அதற்கிசைந்து ஒருநாள் இராமானுசர் வீட்டிற்குச் சென்றனர். அப்போது இராமானுசர் வீட்டிலில்லை. இராமானுசர் வருமட்டும் காத்திருக்க முடியாதென்றும், தமக்கு அவசியம் ஓருவல் இருந்ததென்றும் காஞ்சீ பூரணர் சொல்ல, இராமானுசர் மனைவி கேட்டு உடனே அவரைப் போஜனஞ் செய்வித்தனுப்பி விட்டு, அவருண்ட இலையை எடுத்தெறிந்துவிட்டு, சூத்திரர் இருந்த இடத்தைச் சுத்தி செய்து, பின் சூத்திரர் உண்ட எச்சிலிலையைத் தொட்டதும், அவர் இருந்த இடத்தைத்தொட்டுச் சுத்தம் செய்ததுமாகிய தீட்டுத் தீரும்படி ஸ்நானஞ் செய்யப் போகையில், இராமானுசர் வீடுவந்து சேர்ந்தார். இராமானுசர் எண்ணியிருந்தது என்னையெனின், நம்பியாரை இருத்தி, அவருக்குப் போசனம் முதலியவை தாமே இட்டு, அவருண்டபின் தாமுண்ண வேண்டும் என்பதே. திருமாலுக் கடியாரைத் திருவமுது செய்விப்பதனால் வரும் ஆனந்தம் தமக்குக் கிடைக்கும் என்று அவர் எண்ணிவர, அவர் மனைவியோ சூத்திரனெச்சிலைத்தொட்ட தீட்டுத் தொலைய ஸ்நானஞ் செய்யப் போவதைப் பார்த்த அவர்மனம், எப்படி யிருந்திருக்கும்? [இப்படிச் சொல்வதினால் அவர்மனைவியைக் குற்றப்படுத்துகின்றேனா?] இராமானுசர் மனைவியைக் கண்டித்துச் சில சொற்கள் மொழிந்தனர்.

பின்னொருநாள், இராமானுசர் தம்மைக் குறித்துத் திருமாலது திருவுளம் எதுவோ என்று கேட்டுத் தமக்குத் தெரிவிக்க வேண்டுமென்று காஞ்சீபூரணரை வேண்ட, அவரும் வரதராஜப் பெருமாள் திருக்கோயிலிற் சென்று, கடவுளைப் பிரார்த்தித்து, அவர் சித்த மின்னதென்று



தெளிந்து திரும்பிவந்து, 'இராமானுசர் திருவரங்கத்துக்குப் போவதே பெருமாள் திருவுளம்' என்று சொன்னார். இராமானுசர் வரதராசப் பெருமாளையும் திருக்கச்சி நம்பியாரையும் பிரிந்து திருவரங்கத்துக்குச் செல்ல மனம் இலகுவில் வராவிடினும், மனந்துணிந்து அவ்வாறே புறப்பட்டுப் போனார். இப்படியிருக்க, திருவரங்கத்திலுள்ள ஸ்ரீ.வைஷ்ணவர், ஆளவந்தார் பரமபத மடைந்த பின்பு, ஆசாரிய பீடத்துக்கு வரத்தக்கவர் இராமானுசரே யென்று துணிந்து, அவரை யழைத்து வரும்படி மீண்டும் பெரிய நம்பியாரையே அனுப்பி வைத்தனர். காஞ்சியினின்று தெற்கேபோன இராமானுசரும் திருவரங்கத்தினின்று வடக்கே வந்த மகா பூரணரும், தெய்வா தீனமாக மதுராந்தகத்திலே சந்தித்தனர். ஆசாரிய பீடத்திலெழுந்தருள இராமானுசர் சம்மதித்தாரேனும், தாம் உடனே யப்படிச் செய்வது முடியாதென்றும், தாம் ஆசாரிய பீடத்துக்கு வர இன்னந் தமக்குத் தகுதியில்லை யென்றும், தாம் கற்கவேண்டியவைகள் இன்னும் மிக உண்டென்றும், இராமானுசர் பெரிய நம்பியாருக்குச் சொன்னது மன்றி, உடனே விசிஷ்டாத் துவைத மார்க்கத்தைத் தமக்குப் போதிக்கும்படி பெரிய நம்பியாரை வேண்டினர். அவருடைய ஆவலைக்கண்ட பெரிய நம்பியார், மதுராந்தகத்திலேயே அவருக்குப் போதிக்கத் தொடங்கினர். பின்பு இராமானுசர் மகாபூரணரையும் அவரோடுடன் வந்த அவரது பத்தினியாரையும் காஞ்சீபுரத்துக்குத் தம்மோடுவரும்படி வேண்டினர். அவர்கள் இசையவே, அவர்களோடு காஞ்சி சேர்ந்து, மகா பூரணரைத் தமக்குக் குருவாகக் கொண்டு, குருவையும் குருபத்தினியாரையும் தம் இல்லத்திற்றானே யிருத்தி, மகா பூரணரிடம் கற்க வேண்டியவைகளைக் கற்று வந்தார். இப்படி நடந்து வருங் காலத்தில், ஒருநாள் இராமானுசர் மனைவியும் மகா பூரணர் மனைவியாரும் தங்களுக்குள்ளே வாய்ச் சண்டையிட்டு ஒருவரை யொருவர் ஏசினர். இவ்விஷயத்தை இராமானுசர் மனைவி தம் கணவனாருக்குச் சொல்லவில்லை. மகா பூரணர் மனைவியோ தம் பர்த்தாவுக்குச் சொல்லவே, பெண்டுகள் மூலமாய்த் தமக்கும் இராமானுசருக்கும் ஒரு வேளை வேறுபாடு வருவதற்கு முன்னே தாம் தம் மனைவியோடு திருவரங்கத்துக்குப் போவதே கடமையென்று துணிந்து, இராமானுசருக்குச் சொல்லாமலே, தம் மனைவியோடு மகா பூரணர் திரும்பிவிட்டனர். அவர்கள்

போன பின்பே, அவர்கள் போய்விட்டார்க ளென்றும் அதற்குக் காரணம் இன்னதென்றும் இராமானுசர் அறிந்து, தம்மனைவி இதுவரையிலும் செய்த பிழைகளை யெல்லாம் பொறுத்து வந்தும், இப்பிழையைப் பொறுக்க முடியாது, அவளை அவரது தாய் தந்தையர் வீட்டிற் கனுப்பிவிட்டு, யாதொன்றும் பேசாது திரும்பிக் காஞ்சிக்குவந்து, அங்கே துறவு பூண்டனர். துறவியாகிய இராமானுசருக்கு யதிராசர் என்ற பெயர் வழங்கிற்று. பின் இராமானுசர் திருவரங்கத்துக்குப்போய், அங்கே நாலாயிரப் பிரபந்தம் முதலிய நூல்கள் எல்லாம் கற்று வந்தார். ஆளவந்தாரது மாணாக்கருள் ஒருவராகிய திருக்கோட்டி நம்பியார் (கோஷ்டி பூரணர்) இராமாநுசருக்கு ஸ்ரீமந்திரார்த்தம் போதிக்கு முன்னே அவரைப் பதினெட்டு முறை சோதித்து, அவருக்குள்ள அதிதீவிர பக்குவத்தைக் கண்ட பின்னர், "இம்மந்திரத்தின் பொருளை அபக்குவர்களுக்கு நீ போதித்தால், நித்திய நரகமே உன்கதி" என்று சொல்ல, இராமானுசரும், "அப்படியே யாகுக" எனச் சம்மதித்துச் சத்தியம் பண்ணிக் கொடுத்தபின், அதை அவருக்கு உபதேசித்தார். அதன் பொருளைக் கேட்டுத் தெளிந்த வுடனே, இராமானுசர் அதை மறைத்து வைப்பது தப்பிதம் என்று உணர்ந்து, உடனே எவருக்கும் போதிப்பா ராயினர். இதைக்கண்ட கோஷ்டிபூரணர் மிகச் சினந்து, இவரை யழைத்து, "என் செய்தீர்?" என்று வினவ, யதிராசரோ, "ஐய, மந்திரார்த்தத்தை யுணர்ந்தவர்கள் எல்லாரும் உய்வார்களாதலால், அதனைச் சொன்ன எனக்கு நித்திய நரகமே கதியாயின் ஆகுக. மற்றவர்களை உய்விக்க, நான் மீளாநரகம் புகுவது எனது பாக்கியமே!" என்றார். இதனைக் கேட்ட திருக்கோட்டி நம்பியார் சீவர்களை யுய்விக்க இராமானுசருக்கிருந்த ஆவலைக் கண்டு வியந்தது மன்றித், தமது போலி யறிவுக்காக வெட்கமடைந்தார்.

இவ்வாறு கற்கவேண்டியவை யனைத்தும் கற்றபின், ஸ்ரீரங்கத்திலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும் வேண்ட, அவர் வேண்டுகோளுக் கிசைந்து, ஆசாரிய பீடத்திலே யமர்ந்தார். ஆயினும் அங்கே வெகுகாலந் தங்கினாரில்லை. வேதாந்த சூத்திரத்துக்குப் பேருரை செய்யும் எண்ணத்தை ஒருநாளும் மறந்தவரல்லர். அதைச் செய்து முடித்தற்கு வடதேசம் செல்வது அவசிய மென்று கண்டு, கூரத்தாழ்வார் என்னும் சீஷரும் வேறிரண்டொருவரும்



பின் செல்ல, வடக்கு நோக்கிச் சென்றார். வழியிலே திருவேங்கடத்தில் ஓராண்டு தங்கி, ஸ்ரீசைல பூரணரிடம் வால்மீகி ராமாயணத்தை ஐயந்திரிபற ஓதி யுணர்ந்தார். பின்பு வடதேசஞ் சென்று, அங்கே விசிஷ்டாத்துவைத வைஷ்ணவத்தைப் பற்பல இடங்களிலே போதித்து ஸ்தாபித்தது மன்றி; கூரத்தாழ்வார் உதவிசெய்ய, வேதாந்த சூத்ரத்துக்கு ஸ்ரீ பாஷ்யம் எனப்படும் பேருரையை, விசிஷ்டாத்துவைதத்துக் கிணங்கச் செய்து முடித்தது மன்றி; வேதார்த்த சங்கிரகம், வேதாந்த சாரம், வேதாந்த தீபம், என்னும் நூல்களையும் செய்து, பகவத்கீதைக்கு ஒருரையையும் எழுதினார். இவ்வுரைக்குக் கீதாபாஷ்யம் என்று பெயர். பின்பு தென்னாட்டுக்கு மீண்டார். வரும் வழியிலே பற்பல ஸ்தலங்களைச் சேவித்தது மன்றி, அங்கங்கு சமயோபதேசஞ் செய்து கொண்டும் வந்தார். பின்பு திருவேங்கடமலை யென்னும் திருப்பதிக்கு மீள, அங்கே சைவரும் வைஷ்ணவரும் தம்முள் மாறுபட்டு, "இது சிவஸ்தலம்"; "இல்லை, இது விஷ்ணு ஸ்தலம்" என்று தர்க்கித்தார்கள். இராமானுசர், சைவரை நோக்கி, "நீங்கள் உங்கள் சிவபெருமானது ஆயுதங்களை மங்கள விக்கிரகத்துக்கு முன்னே வையுங்கள். நான் மகாவிஷ்ணுவின் ஐம்படைகளையும் வைக்கிறேன். கோவிற் கதவைத் தாழிட்டுப் பூட்டிக்கொண்டு போவோம். நாளைக் காலையில் நீங்கள் வாருங்கள். நாங்களும் வருகிறோம். கோயிற் கதவைத் திறந்து பார்க்கையில், சிவனது ஆயுதங்களை விக்கிரகம் தரித்திருந்தால், இது சிவஸ்தலம் என்றும், விஷ்ணுவின் ஆயுதங்களைத் தரித்திருந்தால், விஷ்ணு ஸ்தலம் என்றும் அறிவோம்" என்றாராம். அவ்வாறே இருபக்கத்தாரும் செய்தார்களாம். அடுத்த நாள் கோயிற் கதவைத் திறந்து பார்க்கவே, மங்கள விக்கிரகம் விஷ்ணுவின் ஐம்படைகளையும் தரித்திருக்கக்கண்டு, இது விஷ்ணு ஸ்தலமே என்று நிச்சயிக்கப் பட்டதாம். இக்கதையை நம்புகிறவர்கள் நம்புக. எந்தையார் தாமோதரம் பிள்ளையவர்கள், தமது வீரசோழியப் பதிப்புரையில், "வஞ்சகச் சூதினால் வடவேங் கடத்தைக் கைப்பற்றியது போலவும்" என எழுதியது, வைஷ்ணவர்கள் பலருக்கு மனவருத்தம் விளைத்தது. அவர் சிவ பக்தரானதால், சைவத்தின் மேலுள்ள அபிமானத்தினால் வைஷ்ணவரை இகழ்ந்திருக்கலாம். ஆயினும் சைவம் வைஷ்ணவம் இரண்டும் கிரிஸ்தவனாகிய எனக்குச் சமமேயாகலின், என்சொல்லை அறி

வுடையார் இகழார் என எண்ணி, ஒரு மொழி சொல்லப் புகுந்தேன்: இரண்டாம் நூற்றாண்டிலே சிலப்பதிகாரஞ் செய்த இளங்கோவடிகள், "நெடியோன் குன்றம்" என வடவேங்கடத்தைக் கூறுவதினால், வேங்கடம் விஷ்ணு ஸ்தலமே என வைஷ்ணவர் கூறுவது சரியே. ஆயின் சைவர்கள் வேங்கடம் சிவஸ்தலம் என்று கூறுவது தப்பிதமோ எனின், அதுவும் தப்பிதமன்று. என்னை? ஹரிஹர ஸ்தலங்கள் சில உள என்பதும், அவற்றுள் வேங்கடமும் ஒன்று என்பதும் அறிஞர் அறிந்த விஷயம். வடவேங்கடத்திலிருந்த மங்கள விக்கிரகம் (இப்பொழுதுள்ள தெதுவோ அறியேன்) ஹரிஹர விக்கிரகம் என்பது பல அறிஞர் கூற்று.

"அரன், நாரணன், நாமம்; ஆன்விடை, புள், ஊர்தி;
உரைநூல்: மறை; உறையுங் கோயில்--வரை, நீர்;
கருமம்: அழிப்பளிப்பு; கையது:வேல், நேமி;
உருவம்: எரி, கார்மேனி யொன்று."

எனப் பொய்கை யாழ்வார் பாடியது ஹரிஹர விக்கிரகத்தை யன்றோ? ஆகவே, வடவேங்கடம் சிவஸ்தலம் எனச் சொல்வதும் தப்பித மன்றென்க.

இராமானுசர் திருவரங்கத்துக்குத் திரும்பிய பின், அங்கே பலபகல் வசித்திருந்தார். அங்கிருக்கையில் கூரத்தாழ்வாரது புதல்வர் மகா விஷ்ணுவின் ஆயிரந்திருநாமங்களுக்குப் பகவற்குண தர்ப்பணம் என்ற ஒரு சிறந்த உரையெழுதியதனால், அவருக்குப் பராசர பட்டர் என்று இராமானுசர் பெயர் கொடுத்தார். பிள்ளான் எனப்படும் குருகேசர், திருவாய் மொழிக்கு ஆறாயிரப்படி என்ற வியாக்கியானஞ் செய்தமையால், அவருக்குச் சடகோபர் என்ற பெயர் சூட்டினார் யதிராசர்.

இக்காலத்திலே, குலோத்துங்க சோழன் முதலாவான், தான் சைவனா யிருந்தபடியாலும், அவனை யடுத்திருந்தவர்கள் கொடுஞ் சைவரா யிருந்தபடியாலும், வைஷ்ணவரைத் துன்பஞ் செய்ய ஆரம்பித்தான். இதனை யறிந்த வைஷ்ணவர்கள், இராமானுசர் திருவரங்கத்திலிருப்பின் அவருக்கு அபாயம் நேரிடும் என அஞ்சி, அவரை மைசூர் ஸம்ஸ்தானத்துக் கனுப்பி விட்டனர். மகா பூரணரும், கூரத்தாழ்வாரும், குலோத்துங்கனிடம் கொண்டு போகப்பட்டனர். அவர்கள், விஷ்ணு சிவனில் தாழ்ந்தவர் என்று ஒத்துக் கொள்ளாததினால், இருவருடைய கண்களையும் பிடுங்கிவிட அரசன் கட்டளையிட்டான். அதனால் வயோதிபரான மகா பூரணர் வருத்தந்



தாங்காமல் இறந்து விட்டனர். கூரத்தாழ்வாரோ, கண்பார்வை யிழந்து வருந்தினும், இத்தீங்கு இராமானுசருக்கு வராமல் தமக்கு வந்ததினிமித்தம் மகிழ்ந்திருந்தார்.

இராமானுசர் மைசூருக்குப் போயிருந்த காலத்தில், அங்கே அரசாண்ட விடாலதேவன் என்னும் சமணராசனது மகளைப் "பிடித்திருந்த பேயைத் துரத்தி," அரசனையும் மகளையும் வைஷ்ணவப் பிரவேசம் செய்வித்து, அரசனுக்கு விஷ்ணுவர்த்தனன் என்று பெயருமிட்டார். பின்பு, மேலுகோட்டை என்ற இடத்தில் முன்னே யிருந்து பாழடைந்துபோன ஒரு விஷ்ணுகோயிலைப் புதுப்பித்து, அதன் விக்கிரகம் டில்லியில் முகம்மதிய பாஷாவின் அரமனையிலிருக்கிறதென்று கேள்வியுற்று அங்கே சென்று, உபாயத்தால் விக்கிரகத்தை எடுத்துக்கொண்டு திரும்பி வருகையில், டில்லி பாஷாவின் ஏவலாளர் இவரைப்பிடிக்கும்படி தொடர்ந்து வரவே, வைஷ்ணவப் பிராமண சந்நியாசியாகிய இவர், ஒரு புலைச்சேரியில் அடைக்கலம் புகுந்தார். அங்கிருந்த புலையர் இவரை மறைத்து வைத்துக் காப்பாற்றினார்கள். பாஷாவின் ஏவலாளர், புலைச்சேரிக்குள்ளே பிராமண சந்நியாசி போயிருப்பார் என்றதைக் கனவிலும் நினையாதவர்களாகையால், அங்கே போகாமல், மற்றைய விடங்களி லெல்லாந் தேடியுங் காணாது திரும்பினர். பின்பு, இராமாநுசர் மேலுகோட்டையை யடைந்து, தாம் கட்டிய கோயிலுக்குக் கும்பாபிஷேகஞ் செய்து தாம் மீட்டுவந்த விக்கிரகத்தைப் பிரதிஷ்டை பண்ணி, மேலுகோட்டைக்குத் திருநாராயணபுரமென்று பெயருமிட்டார். இராமாநுஜர், தாம் டில்லியிலிருந்து ஓடிவந்தபோது பறையர் சேரியில் அடைக்கலம் புகுந்தகாலத்தில் அவர்கள் பாராட்டின அன்பை மறவாது, ஒவ்வொரு வருஷத்திலும் ஒரு விசேஷநாளில், பறையர்கள் திருநாராயணபுரத்திலே யுள்ள விஷ்ணு கோயிலுக்குட் புகுந்து கடவுளை வணங்க ஏற்பாடு செய்தார். வைணவரைத் துன்புறுத்திய குலோத்துங்கன் செத்தான் என்று கேள்விப்பட்டு, இராமாநுசர் திருவரங்கத்துக்கு மீண்டனர். குலோத்துங்கசோழன் மகன் விக்கிரமசோழன் வைஷ்ணவனா யிருந்ததினாலே, இராமாநுசருக்கும் சீஷருக்கும் மிக்க மரியாதைகள் செய்து வந்தான். அவன்பின் வந்த இரண்டாங் குலோத்து[illegible] தன் பாட்டனைப் போலக் கொடிய [illegible] வத்தின்மேல் வெறுப்புற்றுத், தில்லை[illegible]சித்திரகூடத்தில

யிருந்த கோவிந்த ராஜராது விக்கிரகத்தைக் கடலிலிடுவித்தான். இதைக் கேள்வியுற்ற இராமாநுஜர், வயோதிபரா யிருந்தும், தாமே நேரிற் சென்று கடலி லெறியப் பட்ட விக்கிரகத்தை எடுப்பித்து, திருவேங்கடத்துக்குக் கொண்டுபோய், அங்கே கோவிந்த ராஜரைப் பிரதிஷ்டை செய்து, திருவரங்கத்துக்கு மீண்டார். பின் கிரிஸ்தப்தம் 1137-ம் வருஷத்தில் பரமபத மடைந்தனர். அவர் அடையு முன் அவரைப்போல மூன்று பிரதிமைகள் செம்பினாற்செய்து, ஒன்று திருவரங்கக் கோயிலிலும், ஒன்று ஸ்ரீ பெரும்பூதூர்க் கோயிலிலும், மற்றையது திருநாராயண புரத்திலுள்ள கோயிலிலும் வைக்கவேண்டுமென்று அவர் சிஷர்கள் வேண்டிக்கொள்ள, அதற்கிசைந்தார். இவர் காலத்திற்றானே திருவரங்கத் தமுதனார் இராமாநுஜர் நூற்றந்தாதி செய்து ஓத, அதனைக்கேட்டு அங்கீகாரஞ் செய்தார். இவர் பிறந்த வருஷம் 1017 என்பார்கள் ; அது சரியோ தவறோ அறியேன். அவர் அடைந்த வருஷம் 1137-என்பதில் ஐயம் சிறிதுமில்லை. ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# மௌன குருக்கள்

ஒரு சிறு கதை

சிர. மா. பாமணி, சென்னை.

“சின்னத் தம்பிக்குக் காய்ச்சல் ஏறியிருக்கு ; பண்டிதர் வந்து நாடிபார்த்து, மருந்துக்கு ஓடியிருக்கார். அது சும்மா உங்களையே கூப்பிடுது. ‘தாகம், தாகம், தண்ணி, தண்ணி ! என்று அலறுகிறது ” என்று, முருகப்ப முதலியார் வீட்டிற்குள் நுழையும் பொழுதே, அவர் பத்தினி நாகம்மாள் எதிர் கொண்டுபோய் அவரிடம் சொன்னாள். அவளுடைய வாடிய முகத்தையும் கண்ணீர் தேக்கிய கண்களையும் பார்த்தவுடன், முதலியார் திகிலடைந்தார். பதை[illegible]ன், கோட்டை அவசரமாகக் கழற்றி எறிந்துவிட்டு, தெருப்பக்கம் சன்னலுள்ள ஒரு சிறிய



அறைக்குள் சென்றார். அங்கே ஒரு நார்க்கட்டிலின் மேல், மெலிந்த சிறுவன் ஒருவன், (அவனுக்குப் பத்து வயதிருக்கலாம்), ‘அப்பா, அப்பா’ என்று கூவிக்கொண்டும், மாறிமாறிப் புரண்டுகொண்டும் கிடந்தான். அவன் கண்கள் மூடியே யிருந்தன ; ஆனால் ஒரு தரம் சிறிது விழித்தபொழுது, அவை ஒளிமங்கிப் போயிருப்பது தெரிந்தது. முதலியார், மெதுவாக அவன் காதில், “சின்னத் தம்பி ! நான் வந்து விட்டேன். வருத்தப்படாதே” என்று சொல்லியும், அவனுக்குப் பிரக்ஞை திரும்பினது போல் காணவில்லை. இதற்குள், வாசற்கதவைத் திறந்து கொண்டு, ஒரு வயோதிகப் பண்டிதர், கையில் சஞ்சியுடன் உள்ளே நுழைந்தார். அவர் ஒன்றும் பேசாமல், நாடியைப் பிடித்துப் பார்த்து, “ இதென்ன ! பலஹீனம் மிகுந்து விட்டதே. பிரக்ஞை திரும்பலாம் ; ஆனால் உயிர் இன்னும் நாலைந்து மணிநேரம் தான் தாளும். மருந்தினால் பலனில்லை ” என்றார்.

முதலியார் நடுங்கிப்போய் : “ என்ன, என்ன சொன்னீர்கள் ?” என்றார்.

பண்டிதர், “ஒன்றுமில்லை. ஈசுவர கிருபை யிருந்தால், தங்கள் பையன் பிழைப்பான். மனிதனால் ஆகிறதென்ன? ......ஏனம்மா அழுகிறீர்கள் ? விதிபோல் நடக்கிறது...... நான் போய் வருகிறேன் ” என்றார். முதலியார், கண்களில் நீர் பெருக, அவருக்குத் தெரிந்த மருந்து எதுவாகிலும் கொடுத்து, எப்படியாவது தன் அருமை மகனைப் பிழைப்பிக்கும்படி மன்றாடிக் கெஞ்சினார். ஆனால் பண்டிதர், தன் முயற்சிகள் இனிமேல் வியர்த்தமே என்று கூறி, கணவனையும் மனைவியையும் துக்க சாகரத்தில் ஆழ்த்திவிட்டு, போய் விட்டார்.

நாகம்மாள் :—“ சிவபுரியிலே ஒரு குருக்கள் வந்திருக்கிறாராம். அவர் மந்திரித்து விபூதிப் பிரசாதம் கொடுக்கிறாராம். அந்த விபூதியைத் தடவினால் பாம்பு விஷம் கூட இறங்கிவிடுகிறதாம். அடுத்த வீட்டு வள்ளியம்மை நேத்துச் சொன்னாள். நீங்கள் சிவபுரிக்காவது ஓடிப் போய், விபூதிப் பிரசாதம் வாங்கி வாருங்கள். பண்டிதர் தான் நாலைந்து மணிநேரம் சின்னத்தம்பி,—” என்றுகூறி, “ பிழைத்திருப்பான் ” என்று சொல்ல நாவெழாமல், தேம்பித் தேம்பி அழுதாள். முதலியார், ஆவலுடன் எழுந்து, மறுபடியும் கோட்டை மாட்டிக்கொண்டு, சிவபுரி நாலுமைல் தூரத்திலுள்ள தென்பதை மறந்தவராய்,

அதை அடுத்த வீடுபோல் நினைத்து, ஓடினார். அவர் போன பின், சின்னத்தம்பி பிரக்ஞையுற்றுக் கண்திறக்க, அவன் தாயார், "சின்னத்தம்பி! உனக்கு உடம்பு சீக்கிரம் குணமாகிவிடும், அப்பா! நாயினா குருக்கள் பிரசாதம் வாங்கப் போயிருக்கார்கள். பயப்படாதே" என்று தேற்றினாள். சின்னத்தம்பியும், மருந்து வருகிறதென்ற எண்ணத்துடன், சிறிது நிம்மதியாய்க் கண்ணை மூடினான். மௌன குருக்களின் பிராபல்யம், அவன் தாயார் நேற்று வள்ளியம்மையுடன் பேசியதிலிருந்து, அவனுக்கும் தெரியும்.

சிவபுரி செல்லும் முருகப்ப முதலியார், தமது ஓட்டத்தை மட்டுப்படுத்தி, வேகமாக நடந்து சென்றார். அவர் எண்ணங்களெல்லாம் ஒரே நோக்கத்தைப்பற்றியிருந்தன. தன் அருமை மகன் பிழைப்பானா? இந்தக் கேள்வியின் துன்பமே அவரைப் புண்படுத்தியது. உலகப் பற்றுக்கள் யாவற்றினும் மக்கட்பற்று மிகப் பெரிதன்றோ? "தொடர்ந்த மும்மல முருக்கி வெம்பவக்கடல் தொலையக் கடந்துளோர்களும் கடப்பரோ மக்கள்மேல் காதல்?" என்று, யோகியரைப்பற்றியே கூறியிருப்பின், சாதாரண மனிதர்களைப்பற்றிக் கேட்கவேண்டுமா?

ஒரு மைல் தாண்டியதும், சந்தைக்குப் போகும் இருவரை முதலியார் சந்தித்தார். ஒருவன் ஒரு காய்கறிக் கூடையையும், மற்றவன் ஒரு சிறிய ஆட்டுக்குட்டியையும் தூக்கிக்கொண்டு வந்தார்கள். முதலியார், சிவபுரியில் இருக்கும் குருக்களைப்பற்றி அவர்களுக்கு ஏதாவது தெரியுமா என்று கேட்டார்.

காய்கறிக் கூடைக்காரன், "அண்ணே, நம்ம குருக்கள் தெரியாது? அவர் ஒருவருஷமாப் பேசறதில்லே. அவர் விபூதி கொடுத்தா, எந்தப் பேயும் ஓடிப்பூடும். ஆனா, சாமி, அவர் இப்பம் சிவபுரிலே இருக்காரோ, இல்லேயோ, தெரியாது" என்றான். மற்றவன், "ஆமாண்டா, நேத்தே கருப்பண்ணன் சொன்னான். அவர் ராவோட ராவா, ஆம்பூர் பூட்டாராம். சாமி, அவர் சிவபுரிலே இப்பம் இல்லே." என்றான்.

இதைக்கேட்டதும், முதலியார்முகம் சோர்ந்துவிட்டது. ஆம்பூர் இருபது மைலுக்கு அப்பால் உள்ளது. அங்கு போய்த் திரும்புவதற்குள் தன் மகன் உயிர் போய்விடும். என்ன செய்வார், பாவம்! ஒற்றைமாட்டு வண்டியுமே அந்தப் பக்கம் கிடையாது. அவர்மனம் குழம்பியது. பித்



துப் பிடித்தவர் போல், "சின்னத்தம்பி!" என்று கூவிக்கொண்டே, போகும் திசைகூடத் தெரியாமல், நடந்தார்.

இப்படியே மூன்று மைல் நடந்தபின், சிவபுரி ஆலயம் தென்பட்டது. ஆனாலென்ன? சிவபுரிக்குள் சென்றாலும், தன் மகனைக் காப்பாற்றும் குருக்கள் அங்கில்லையே? முதலியாருடைய மனக் கசப்பைச் சொல்லி முடியாது.

முதலியார் நாற்புறமும்நோக்கித் தியங்கினார். திடீரென, நாலைந்து மரங்களுக்கு அப்பால், ஒரு பரதேசி, பாதையோரத்தில் நிஷ்டையில் வீற்றிருப்பதுபோல் அவருக்குத் தோன்றிற்று. பிரமையோ என்றெண்ணி, அவர் கண்ணைத் துடைத்துக்கொண்டு பார்த்தார். இல்லை, மௌன குருக்கள் தான், ஒரு சிஷ்யன் அருகிலிருந்து, சைத்யோபசாரங்கள் செய்ய, வீற்றிருந்தார்! களிப்பும், கைக்கெட்டிய பழம் வாய்க்கெட்டாமல் போய்விடக்கூடுமோ என்ற அச்சமும் மனத்தில் பொங்கியெழ, முதலியார், படபடத்துச் சென்று, சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார். மௌன குருக்கள், மெதுவாகக் கண்ணைத் திறந்து, "என்ன வேண்டும்?" என்று, சாடைகளால் கேட்டார்.

முதலியார், "சுவாமி! நீங்களே கதி! என் ஒரே மகன் காய்ச்சலால் மிகவும் அவஸ்தைப்படுகிறான். எந்த நேரம் பிராணன் போய்விடுமோ தெரியவில்லை. தாங்கள் மட்டும் ஆசீர்வதித்து விபூதிகொடுத்தால், பிழைப்பான். இந்தத் தறுவாயில் தங்களைத் தவிர வேறு கதியில்லை" என்றார். குருக்கள், ஒன்றும் கூறாது, சிஷ்யனிடமிருந்த பையிலிருந்து சிறிது விபூதியை எடுத்து முணுமுணுத்து மந்திரித்து, முதலியாரிடம் கொடுத்தார். முதலியார், ஐந்து வெள்ளி ரூபாய்களை எடுத்து நீட்ட, குருக்களின் சிஷ்யன்—"பணப்பிசாசை அங்குத்தி கையால் தொடாது; ஆனால், நீங்கள் கொடுப்பது ஏழைகளுக்கு உபகாரப்படும்; என்னிடம் கொடுங்கள்;" என்றுகூறி வாங்கிக்கொண்டான். முதலியார், வந்தனங்கள் செலுத்தி மறுபடியும் நமஸ்காரம் செய்து விட்டு, வீடு நோக்கித் திரும்பினார்.

வருகின்ற வழியெல்லாம், ஒருவேளை தான் வருமுன் உயிர்போய் விடுமோ என்ற எண்ணம், அவரைப் பிடித்தது. வீடு நெருங்கும்போது அவர் மனத்திலுள்ள கலக்கத்தைச் சொல்ல முடியாது. 'ஆ! அதென்ன? அழுகுரலா?' என்று மறுபடியும் எண்ணித் தியங்கினார். வாசல் வந்தவுடன், ஒரே பாய்ச்சலாக உள்ளே பாய்ந்தார். நாகம்மாள் முன்போலவே உட்கார்ந்து கொண்டிருந்தாள். சின்

னத்தம்பி எழுந்து, "அப்பா!" என்று சந்தோஷமாய்க் கூப்பிட்டான். அவனை வாரித் தழுவிக்கொண்டு, விபூதியைப் பூசிவிட்டு, முதலியார், ஒரு நாற்காலியில் சாய்ந்து குழந்தையைப்போல் தேம்பித் தேம்பி அழுதார். அவர் சோகம் அவ்வாறு வெளிப்பட, சிறிது ஆறுதலடைந்தார்.

மறுநாள் காலை, முத்தையமுதலி என்பவன் முருகப்ப முதலியாருடன் பேசிக்கொண்டிருந்தான். "சின்னத்தம்பி நிலை நேற்று அபாயமாய் இருந்ததாமே? பண்டிதர் சொன்னார். இப்பொழுது குணமானதுபற்றி, சந்தோஷம்" என்றான்.

முதலியார்: "எல்லாம் மௌன குருக்கள் பிரசாத பாக்கியம்."

முத்தையன்: "ஆனால் ஆம்பூர் போய்வந்தீர்களோ?"

முதலியார்: "இல்லை. குருக்களைச் சிவபுரியிலேயே கண்டுகொண்டேன்"

முத்தையன், விழுந்து விழுந்து சிரித்தான்.

முதலியார், கோபத்துடன், "அதற்கென்ன?" என்றார்.

முத்தையன்: "ஒன்றுமில்லை. குருக்கள் ஆம்பூர் சென்றது அநேகருக்குத் தெரியாது; வழக்கம்போல் நேற்றுச் சிவபுரிக்குப் போனார்கள். இதை அறிந்து, ஒரு பண்டாரம், குருக்கள் போல் நடித்து, பலரிடம் பணம் பறித்து விட்டான். பிறகு ஆஸாமி கம்பியை நீட்டி விட்டான். நீங்களும் ஏமாந்தீர்களா?" என்று சொல்லிச் சிரித்தான்.

முதலியாரால் பதில்பேச முடிய வில்லை.

## விகட விநோதம்.

(1) வழிப்போக்கன்.—என்ன தேடுகிறீர்?

மலையாளி.—ஒரு அணா கீழே விழுந்து விட்டது;

வழிப்போக்கன்.—இருட்டு; தீக்குச்சி யிருந்தால் கிழி, அந்த வெளிச்சத்தில் தேடும்.

மலையாளி.—நாலு குச்சிதான் இருந்தது, கிழிப்பார்த்தேன், அகப்படவில்லை. அணா கெட்டுப் போகாமல் இருந்தால், தேட ஒரு மெழுகுவர்த்தி வாங்கி யிருக்கலாம்!

(2) நியாயாதிபதி.—நீ குற்றவாளியா, இல்லையா?

கைதி.—இப்பொழுதே எப்படி எனக்குத் தெரியும்? சாக்ஷிகளை விசாரித் தானபின் சொல்லுகிறேன்.

(3) அதிகாரி.—(குமாஸ்தாவைப்பார்த்து) ஏன் லேட்டாய் வந்தீர்?

குமாஸ்தா.—மன்னிக்கவேணும்; அதற்குப்பதிலாக, சாயங்காலம் சீக்கிரம் வீட்டுக்குப் போய்விடுகிறேன்.

# பண்டைத்தமிழர் நீதிமுறை

ஸ்ரீ ரா. வாசுதேவ சர்மா, M. A., B. L.,
திருப்பாதிரிப்புலியூர்



பண்டைக் காலத்தே நம் தமிழ் முன்னோர், மிகச் சிறந்த நீதிமான்களாகவும், தூய சிந்தையும் தரும நினைவு முடையவர்களாகவும், லௌகிக வியவகாரங்களில் மிகுந்த எச்சரிக்கையை யுடையவர்களாகவும், சத்திய நெறியினின்றும் சிறிதும் விலகாதவர்களாகவும் இருந்தனர். சந்தேகாஸ்பதமான விஷயங்களில் விட்டுக் கொடுத்து சமாதானம் நாடவும் அவர் முற்படுவர். இத்தகை நிறைகுணமாந்தரை,

"பண்டுந்
தாமறி செம்மைச் சான்றோர் கண்ட
கடனறி மாக்கள்—"

எனக் குறுந்தொகை (குறுந்-265)ப் பாட்டுக் குறிப்பிடும்.

பொய், களவு, வஞ்சகம் முதலிய தீச்செயல்களுக்கே ஆதாரம் எனக் கருதப்படும் வியாபாரத்திலே ஈடுபட்டுப் பொருளீட்ட முற்பட்ட வணிக மாக்களே நடுநிலை நின்று, பொய் மொழியாது, தாம் கொடுப்பதும் அதிகம் கொடாது, பெறுவதிலும் அதிகம் பெறாது சரிநிலையாக விற்று வந்தாரெனின், அக்காலத்திலே வழங்கிவந்த மக்கள் தூய்மை எவ்வளவு சிலாக்கியமாகும்! இவ் வணிகரைப் பின்வருமாறு வருணிக்கிறது பட்டினப் பாலை.

"நடுவு நின்ற நன் னெஞ்சினோர்
வடு வஞ்சி வாய் மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடிக்
கொள்வதூஉ மிகக்கொளாது கொடுப்பதூஉங் குறைபடாது
பல்பண்டம் பகர்ந்து வீசுந்
தொல் கொண்டித் துவன் றிருக்கை."

(பட்டின. 207-212)

ஆயினும், ‘முழுச்சத்தியமேதான் அந்நாளில் நிகழ்ந்தது, கடவுள் தனது அபாரவலிமையால் இன்பகரமாகச் சமைத்த இவ்வுலகத்தைக் கொடுநரகமாக ஆக்கி நம் ஆயுளைப் பாழாக்கிவைக்கும் அழுக்காறுகள் அந் நாளில் தோன்றி யிருக்கவில்லை’ என்று, நாம் கூற ஒண்ணாது. அக்காலத்திலேயும் நகர்களில் தீயோர் குடிகொண் டிருந்தனர் என்பதற்குச் சான்றாக, இடைக்குன்றூர் கிழார்,

“ஒருவனை யொருவ னடுதலுந் தொலைதலும்
புதுவ தன்றில் வுலகத் தியற்கை”

என்று (புறம்-76) பாடிச் செல்கிறார். இக்காலத்தில் நிகழ்வதுபோலவே ஊர்க்காவலதிகாரிகள் (போலீசார்) கண்டதைக் காணேமென்றும், காணாத ஒன்றைக் கண்டேமென்றுங் கூறிப் பொய்ச் சாக்ஷியமும் குற்றமும் ஏற்படுத்த முயலுவதும் வழக்கிலிருந்தது. கலித்தொகையுடையார் இவர்களை யுவமையாக்கிப் பாடுகிறார்:—

“ஏதப்பா டெண்ணிப் புரிசை வீயலுள்ளோர்
கள்வரைக் காணாது கண்டேமென் பார்போல.—”
(கலித்-81)

ஆனால், எந்த நாட்டிலேதான் எந்தக் காலத்திலேயும் சத்தியமே நிலையாயிருந்தது என்று நாம் உறுதியாகக் கூறமுடியும்? ஆகவே ஒத்திட்டுச் சீர் தூக்கிப் பார்க்கும்போது, எந் நாட்டினரையும் விட நம் தமிழ் நாட்டிலே அப் பண்டையோர் நாளிலே, உண்மைக்குக் கௌரவம் அதிகம் வைக்கப் பட்டிருந்தது என்பது மட்டும் நாம் திடமாகக் கூறலாம்.

எல்லாப் பண்டைய அரசாங்கங்களைப் போலவே நம் தமிழ் நாட்டிலும், நியாய விதிகளும் சட்டங்களும் தொகுத்து வைக்கப்படவில்லை. எதேச்சையாக அரசன் முரசறைந்து அறிவித்தவை யாவும் சட்டமாயின. அரசன் ஆணை சட்டம்; அவனே நியாயாதீசன்; தண்டிக்கவும் மன்னிக்கவும் வல்லவன்.

நியாய மன்றங்களும் அக்காலத்திருந்தன. இந் நீதி மன்றங்களில் நீதிபதி ஒருவித தலைப்பாகையையும், அங்கியையும் முடித்துத், தன் ஆதனத்தில் அமர்ந்து, நியாய முறைகளை ஒத்திட்டுச் சீர் தூக்கி ஆராய்ந்து தீர்ப்புச் சொல்லுவான். மதுரைக் காஞ்சியிலே,

“அவிர்துகின் முடித்து
நன்றுந் தீதுங் கண்டாய்ந் தடக்கி



யன்பு மறனு மொழியாது காத்துப்
பழியொரீஇ யுயர்ந்து பாய்புகழ் நிறைந்த
செம்மை சான்ற காவிதி மாக்களை” (மதுரை-494-498)

வருணித்திருக்கிறது.

தொகுக்கப் பெறாது இங்ஙனம் நிச்சித மில்லாது கிடந்த நியாய நிலையில், மாந்தர் மனச்சாக்ஷியே நன்றுந் தீதும், நியாயா நியாயமும், கண்டறிதற்குக் கரி நின்றன. இவை இவை குற்றம், இவற்றைச் செய்தல் அடாது, இவை புரிவார்க்கு இவ்வகைத் தண்டம் விதிக்கப்படும் எனத் தொகை செய்து, நியாய வரை ஏற்படுத்தப்பட வில்லை. என்றாலும், குற்றங்கள் ஒரு சிலவும் அதிகப்பட்டுத் தோன்றி நில்லாதவாறு தடுக்க அவற்றிற்கு ஏற்படுத்தப் பட்ட தண்டனைகளும் தெரிந்திருந்தன. உதாரணமாகக் களவு செய்வாருக்குக் கொலைத்தண்டனை விதிக்கப்பட்டு வந்தது. தமிழ் நூல் வல்லார், செஞ்சொல் வளஞ்சிறந்த சிலப்பதிகாரத்தே, காவலன் தேவியினது காற்சிலம்பைக் கவர்ந்து சென்றான் கோவலன் என்று, அவனைக் கொன்றுவிட மன்னன் உத்தரவளித்ததை, நிச்சயம் மறக்க வியலாது. கண்ணகி, பின்னர் மன்னன் கோயிலடைந்து வழக்குரைத்துக் கடிந்த காலத்திலும்,

“கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று
வெள்வேற் கொற்றங் காண்!” (சிலப். xx-63)

என்றே யன்றோ மன்னன் விடையிறுத்தான். கள்வனுக்குக் கொலைத்தண்டம் என்றதொரு விதியிருந்தமை யானன்றோ ஏழில் மன்னன் நன்னனும், தன் தோப்பிலிருந்து கனிகளைக் கவர்ந்து சென்ற பெண்ணவா ளொருத்தியை, யானைத்திரளும், பொற்பாவை யொன்றும் தண்டமாகத் தருவேம் பெண் கொலை தவிர்தல் வேண்டுமென்று இரந்து மன்றாடியும், அவை மறுத்து, தான் விதித்த தண்டனையை நிறைவேற்றித், தான் நிரபராதியே யாயினும், பெரும் பழியைப் பூண்டனன். இச்சம்பவத்தைச் சாற்றும் பின்வரும் குறுந் தொகைச் செய்யுள்:

“மண்ணிய சென்ற வொண்ணுத லரிவை
புனறரு பசுங்காய் தின்றதன் றப்பற்
கொன்பதிற் றொன்பது களிற்றொ டவணிறை
பொன் செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்
பெண் கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரையத்துச் செலீஇ யரோவன்னை—”
(குறுந்-292)

இந்தப் பாட்டிலே நிச்சயம் அந்தப் பேதைப் பெண்ணுக்கு அனுகூலமாகச் சொல்லக் கூடிய எல்லா வித சமாதானங்கள் பொய் மெய்யாவும் விரவிப் பாடப் பட்டிருக்கிறது யாவருக்கும் விசதமாம். அதோடும் பரணர் தேர்ந்த நியாயவாதி - பெண்கள் மாட்டுப் பரிந்து பேசும் இயல்பும் உடையவர். (இவர் பேகனால் துறக்கப் பட்டிருந்த அவன் மனைவி கண்ணகி காரணம் பாடிய பாட்டுக்களைப் புறநானூற்றிற் காண்க) கனிகள் சிலவற்றைத் திருடியதற்காகக் கொலைத் தண்டனை விதிக்கப்பட்டது அதிகமில்லையா என்று அதன் கொடுமையைப் பற்றிய விசாரணை ஒருபுற மிருப்பினும், அந்தப் பண்டைய காலத்திலே மறுபடியும் இத்தகைய குற்றங்களே தோன்றாத வண்ணம் வேரறுக்க, இக்கொடுமையான தண்டனைகளும், இலஞ்சம் வாங்க முற்படாத மன்னனும், இன்றியமையாதவை யன்றோ?

நிறைவேறிய தொரு குற்றச் செய்கைக்கும் குற்றம் புரிய ஆயத்தஞ் செய்வதற்கும் உள்ள வித்தியாசம் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. சிலப்பதிகாரத்திலே வெள்ளிடை மன்ற வருணனையில்,

"கட்போ ருளரெனிற் கடுப்பத் தலையேற்றிக்
கொட்பி னல்லது கொடுத்த லீயா
துள்ளுநர்ப் பனிக்கும் வெள்ளிடை மன்றம்"
(சிலப் v. 115-117)

என்று பாடிப்போகிறார் இளங்கோவடிகள். துறைமுகச்சாலைகளிலே மூட்டைகளைப் பறித்துச் செல்லுவான் புகுந்த ஒருவனை, அவன் களவிட வெண்ணிய மூட்டைப் பொதிகளையே அவன் கழுத்திறுந்த ஏற்றி ஊரைச் சுற்றிலும் நடப்பித்துக் கடைசியில் தூக்கிவிடுவதைக் காட்டிலும் உயர்ந்த தண்டனை ஏது?

கடன்களும், பெற்ற பொருளைத் திரும்பத் தரவேண்டிய கடமையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். கொடுக்க வேண்ட கடனைத் திரும்பத் தரமாட்டாதவர் பொருள்களைப் பிடித்து விலைபேசி வட்டிக்காகவும், முதலுக்காகவும் வரவுவைத்துக் கொள்வது வழக்கத்திலிருந்தது. இது கலித்தொகையுடையார் நமக் கறிவிக்கிறார்.

"கண்ட பொழுதே கடவரைப் போலநீ
பண்டம் வினாய படிற்றாற் றொடீஇய நிற்
கொண்ட தெவ னெல்லா யான்" (கலத்-108)



உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் அதற்கு இங்ஙன் உரை கூறிச் செல்கின்றார். "தனிசு கட்வாரிடத்துக் கொடுத்தவர்கள் அவர்களுக்குள்ள பண்டங்களை உசாவுமாறுபோல நீயும் என்னிடத்திலுள்ள பண்டங்களை இவை யாவை என்று வினாவின வஞ்சனையினாலே எனது வட்டியைப் பிடித்தற்கு ஏடா! நின்னிடத்து யாம் வாங்கிக் கொண்ட பொருள் எப்பொருள்? என்றாள்."

சோரம்புகும் காமுக மாக்கட்கும் கொலைத்தண்டனையே ஊட்டப் பட்டது.

"காணிற் குடிப்பழியாங் கையுறிற் கால்குறையு
மாணின்மை செய்யுங்கா லச்சமாம்—" (நாலடி-84)
"அச்சம் பெரிதா லதற்கின்பஞ் சிற்றளவால்
நிச்ச நினையுங்கால் கோக்கொலையால், பிறன்றாரம்
நம்பற்க நாணுடையார்—" (நாலடி-81)

என்ற அடிகளால் நாலடியார் இதற்குரிய தண்டனையை நமக் கறிவிக்கிறது.

இங்ஙனம் நம் பண்டைத் தமிழ் சமூகத்திய நீதிமுறை விசாலித்ததாகவும், நிச்சிதமாகவும் இல்லாது போயினும், அக்காலத்திய நீதிபதிகளும், மன்னரும் மிகவும் நியாயஸ்தர்களாகவும், பக்ஷபாத மில்லாதவர்களாகவும் இருந்தனர் என்பதை நிரூபிக்கப் போதிய சான்றுகள் தமிழ் இலக்கியத்திலே மலிந்து கிடக்கின்றன. பொன்னும் பரியும் கரித்திரளும் அளிப்பதாகக் கூறியும் மனஞ்சலியாது தன்னெறி நின்று தண்டம் நிறுவிய மன்னன் நன்னன் கதை நாமறிவோம். தான் இளைஞன் என்ற காரணத்தினாலே தன்னிடம் நீதி பிசகுதல் கூடும் என அஞ்சினர் குடிமக்கள் சிலர் என்பதைச் செவியுற்றுத் தான் மாறுவேடம் பூண்டு நரைமுடித்துக் கிழவன் போல நடித்து விவகாரம் கேட்டு முதுமக்கள் மனமகிழ முடிவு கண்ட சோழன் கரிகாற் பெருவளத்தானைப் பற்றி,

இளமை நாணி முதுமை யெய்தி
உரை முடிவு காட்டிய உரவோன்"

என மணிமேகலையும்,

"உரை முடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறை செய்தான் சோழன்" (பழமொழி-6)

எனப் பழமொழியும் வியந்து பாடுகின்றன.

முடிவு கண்ட மன்னரிடத்தும், தாம் கண்டது சத்தியம், கொண்டதே முடிவு, என்ற வீண் பிடிவாதம் காணப்படவில்லை. மன்னர்கூடத் தாம் தவறிழைத்தது புலனானதும், தம்மாலியன்றவரை நீதி செய்து தம் தவறைச் சரிப்படுத்த முயன்றனர் என்பதும், அங்ஙனம் இயலாத போது பெரிதும் பச்சாத்தாபமுற்று வருந்தினர் என்பதும், கண்ணகி சரித்திரத்தில் அறியாதிழைத்த அபராதத்தின் பயனாக உயிர் துறந்த மதுரை மன்னன் முடிவால் நாமறிகிறோம். தன் காற்சிலம்பிற் பதித்திருந்தவை வைரமணிகள் என்று கூறித் தன் மறுபாதத்திருந்த நூபுரத்தைக் கழற்றிக் காட்டிச் சோதிக்கச் செய்தபோது மன்னவன் என்ன செய்தான்? செய்துவிட்டேன்; இனி என்ன செய்ய? என்று செருக்குடன் புகன்றானா? அல்லது அறியாது நிகழ்ந்தது அம்மணி, மன்னிப்பாய்! என்று நயவுரை வஞ்சகத்துடன் நிகழ்த்தி நின்றானா? இல்லை. இளங்கோவடிகள் கூறுகிறார்:

தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்
மணிகண்டு பொன்செய் கொல்லன் றன்சொற் கேட்ட
யானோ வரசன்? யானே கள்வன்!
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது! கெடுகவென் னாயுளென
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே! (சிலப். xx. 72-78)

சட்ட முறைகளும், சாத்திரங்களும் தொகைபெற்றேறாத அப்பண்டை நாட்களிலே, இதனிடமாக மாந்தரிடையே வழுவிலே புகட்டப்பட்டுவந்த நீதிகளை நமக்கு அறிவிக்கும் ஒரு சில அடிகளை மட்டும் இங்கே எடுத்துக் காட்டி, இக்கட்டுரையை முடிப்பேன். இந்த நீதி வசனங்களே யன்றோ அந்நாள் தருமசாத்திரத் தொகுதிகள். இது இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தின் முப்பதாவது காதையின் முடிவில் வருகிறது.

"தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்!
பரிவு மிடுக்கணும் பாங்குற நீங்குமின்,
தெய்வந் தெளிமின், தெளிந்தோர்ப் பேணுமின்,
பொய்யுரை யஞ்சுமின், புறஞ்சொற் போற்றுமின்,
ஊனூண் துறமின், உயிர்க்கொலை நீங்குமின்,
தானஞ் செய்மின், தவம்பல தாங்குமின்,
செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட்பு இகழ்மின்,
பொய்க்கரி போகன்மின், பொருண்மொழி நீங்கன்மின்,
அறவோ ரவைக்களம் அகலா தணுகுமின்,
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்,



பிறர்மனை யஞ்சுமின், பிழையுயி ரோம்புமின்,
அறமனை காமின், அல்லவை கடிமின்,
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமின்,
இளமையுஞ் செல்வமும் யாக்கையு நிலையா,
உளநாள் வரையா தொல்லுவ தொழியாது,
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்,
மல்லன்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென—"

இவ்வடிகளை நாம் கண்ணுறுங் காலத்து, "சத்யாந் நப்ரமதிதவ்யம்: தர்மாந் நப்ரமதிதவ்யம்:" என்றாரம்பிக்கும் தைத்திரீய உபநிடத வாக்கியங்களும், பண்டைச் சினைமலைப்பிர (Mount Sinai) தேசத்தே ஈசன் மோசே என்ற யூதர் பெருமகனுக்கு அருளிச் செய்த ஆதேச தசவாக்கியங்களும் நம் மனத்தே பிரதியொலி செய்கின்றன. மானிட சமூகம் இவ்வளவு நாள் வளர்ந்து ஓங்கி நிற்றற்கு இவ் வறவுரைகளன்றோ ஆதிபீடம்.


## தாருல் இஸ்லாம்

இஃது இனிய தமிழில் உயர்ந்தநடையில்அதிரஸத்துடன் ஆனந்தமயமாய் எழுதப்பட்ட அநேக அருமையான வியாசங்களையுடையது. தமிழ் நாட்டுச் சோதர சோதரிகளுக்குத் தக்க அறிவை யூட்டுவது. இஸ்லாத்தின் உயரிய தன்மையை உரைத்து விளக்குவது. ஸமரஸ நோக்கங் கொண்டது. இஸ்லாத்தின் ராஜீய தேசீய ஞானத்தை எடுத்துணர்த்துவது. தமிழ் மொழி வளர்ச்சியில் மிகஊக்கங் கொண்டது.

வருஷசந்தா ரூ 3. தான்.
வெளி நாட்டுக்கு ரூ 4.

## ஜவாஹிருல் 'புர்: கான்

(குர்ஆன் ஷரீபின் தமிழ் மொழி பெயர்ப்பும் அதன் விரிவான வியாக்யானமும் ஒருங்கே கூடியது.)

இதுவரை 1000 பிரதிகள் விலையாய் விட்டன. இன்னும் சில பிரதிகளே எஞ்சியிருக்கின்றன. இன்றே எழுதுங்கள்! ஏமாந்து போக வேண்டாம்!!

160 பக்கங்களுள்ள முதல் வெளியீட்டின் கிரயம் ரூ 1-8.

"தாருல் இஸ்லாம்" ஆபீஸ்
தபால் பெட்டி நெ. 15, சென்னை.

# விகடப்பா

(531-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

**கிறள் ஐந்து.**

1. கூழையும் உட்பக்கம் காண்பேன், குறடா
மிளகாய்த் துவையல் பெறின்.

2. யாதனின் யாதனின் வீங்கியான், நோதல்
அதனின் அதனின் உளன்.

3. எட்டுக பட்ட மரக்கொம்பை, அக்கொம்பை
வெட்டுக வேண்டின் விறகு.

4. தன்மயிர் போயினும் செய்யற்க, தான்பிறி
தின்மயிர் பூணும் வினை.

5. ஒன்றாக நல்லது சாராயம், மற்றதன்
பின்சாரத் தென்னங்கள் நன்று.

**கீள வெண்பா**

1. போவாய், வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குவாய் - ஆ! ஆ!
விருந்தினைமே வென்போல வீழ்கடலே நீயும்
அருந்தினைகொல் அளவில்கள் இன்று.

2. காபிதனைக் காலையிலே காணாது கஷ்டமுறும்
பாபிதனைப் பார்க்கப் படாதென்றோ - கூபக்
கரையருகே நண்டினங்கள் கண்டென்னை அஞ்சி
விரைகின் றனவோ விளம்பு.

3. இந்தியரின் சந்ததியார் தம்தரணி தோற்றிங்க்லிஷ்
மந்திரியை மண்ணுரிமை தந்திடெனச் - சொந்தம்
அளிப்பதுபோல் ஆட்சி இருதலையா ஈந்தான்
களிப்படைந்தார் காணார் கரவு.

—மா.



# இனிப் பிழைக்கும் வழி *

இப்பொழுது ஐரோப்பிய நாகரிகம் அடியோடு சீர் குலைந்து போயிருக்கிற தென்பதற்குச் சந்தேக மில்லை. அநேக வருஷங்களாக, ஆழ்ந்த யோசனையுள்ள ஐரோப்பியர் பலர், இவ்விதச் சீர்குலைவு வருநாள் கிட்டி விட்ட தென்று ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்து கொண்டே யிருந்தார்கள். அவர்கள் வார்த்தை பழுதாக வில்லை; நாகரிகத்திலும், செல்வத்திலும், வலிமையிலும் சிறந்த தேசங்களுக்குள் முதலில் மகாயுத்தம் நேர்ந்தது; அது முடியவே, வியாதியினும் மருந்து கொடியதாய், அதன்பின் ஏற்பட்ட சமாதான நிலைமையின் கஷ்டங்களைப் பொறுக்க மாட்டாமல், ஜனங்கள் இப்பொழுது தவிக்கிறார்கள்.

மகாயுத்தத்தின் அடிப்படைக் காரணம் வியாபாரப் போட்டியே. வலிய விற்கும் பாத்தியதைக்காகத்தான் பல தேசத்தாரும் போராடினர். யுத்தச் செலவினால் ஒவ்வொரு தேசத்திலும் கடன் அதிகரிக்கவே, இப்பொழுது எங்கும் பஞ்சம் பரவி யிருக்கிறது.

தற்கால நாகரிகத்தில், சாஸ்திர ஞானமும், அதைப் பலவிதங்களிலும் உபயோகப்படுத்தும் பயிற்சியும், நாளுக்குநாள் அதிசய விருத்தி யடைந்து வருவதையும், ஜனசமூக வாழ்க்கையில் பணவாசையும், கொலை யாவேசமும், தரித்திரமும் ஓங்கி வளர்வதையும் கண்டவர் சிலர், அவை ஒன்றுக்கொன்று துணை என்று நினைத்து, சாஸ்திரப் பயிற்சியையே பழிக்கவும் செய்கின்றனர். சாஸ்திரப் பயிற்சி, பண்டங்களை விருத்தி செய்யும்; அதன் முடிவு பொதுநன்மையே. ஒரு சிறு வயலி லிருந்து ஒரு கலம் தானியத்துக்குப் பதிலாகப் பதின்கலம் தானியம் பலன

* Abridgement by *Srimati M. Lakshmi Ammal* (*B.A. Hons.*) *London*, of a lecture on *The Future of Economics and Scientific Thought* delivered by Prof. Soddy (M. A., F.R. S.) as one of " The World of To-morrow " series of lectures.

டையும்படி உரனிடும் வகைகளையும், நூற்றுவர் வேலையை ஒருவன் செய்து முடிக்கும்படித் துணை செய்யும் யந்திரக் கருவிகளையும், சாஸ்திர ஞானத்தால் தெரிந்து உபயோகிக்கலாம். 'நைட்ரேட்ஸ்', உரனுக்கும் உபயோகப்படும், வெடி மருந்துக்கும் உபயோகப்படும். சாஸ்திரப் பயிற்சி, நாம் கையாளும் பண்டங்களைச் சுலபமாய் அடையும் விதங்களைக் கற்பிக்கிறது. வேறு தடைகள் இல்லாமற் போனால், இதனால், உலகமெங்கும் செல்வம் விருத்தியாகி, ஜனங்கள் சுகஜீவியம் செய்வார்கள். சுகஜீவியம் ஆத்மசாதனத்துக்கு (Material prosperity and Moral progress) விரோதமென்று நினைப்பது தப்பு. தரித்திரமும், அறியாமையும், கெட்ட குணங்களும் எங்கும் ஒன்று சேர்ந்து காணப்படுவன. சாஸ்திரப்பயிற்சி விருத்தியானதால், பொது ஜனங்கள் அடையக்கூடிய நன்மைகள் எல்லாம், அறியாமையாலும் அநியாயமாயும் ஏற்படுத்தி நாம் போற்றிவரும் சில பழைய நாளைச் சட்டங்களால், வீணாகி விடுகின்றன. பிழைக்கும் வழியில்லாமல் ஜனங்கள் எங்கும் கஷ்டப்படுகிறார்கள். இந்த வறுமையின் காரணமென்ன? பண்டங்களில் குறை வில்லை. யுத்தத்தின்போது, லக்ஷக்கணக்கான ஜனங்கள் பிழைப்புக் காதாரமான தொழில்களை விட்டுக் கொலைத்தொழிலைக் கைக்கொண்டிருந்தபோது, மிகுந்த ஜனங்களின் முயற்சியாலேயே, அனைவரும் உண்டு, உடுத்து, ஜீவனம் செய்தல் சாத்தியமாயிருந்தது. இன்று கண்டபடி, உலகத்தார் அனைவருக்கும் வேண்டிய பொருள்கள் உலகத்தில் இருக்கின்றன வென்பது, யுத்தத்தின்போது ருசுவாயிற்று. ஆயின், இவ்வறுமையின் காரணம் சோம்பலோ? அதுவுமில்லை. ஆயிரக்கணக்கான ஜனங்கள் வேலை செய்யக் காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை யகப்படவில்லை. வாஸ்தவமாய், பண்டங்களிற் குறைவிருந்தால், அதை மனுஷ முயற்சியால் நிவர்த்திக்கலாம்; ஜனங்களின் உழைப்புத் தளர்ச்சி யடைந்தால், அதற்கு வறுமை ஒரு தூண்டுகோலாகும். ஆனால் நாம் இப்பொழுது மாயவறுமையால் வருந்துகிறோம். கடைகள் நிறையச் சோடுகள் இருக்கின்றன; சக்கிலியர்களுக்கு வேலை யகப்படவில்லை; ஏழைகள் கிழிந்த சோடுகளுடன் நடந்து, குளிராலும் வியாதியாலும் கஷ்டப்படுகிறார்கள்! நமக்கு வேண்டிய செல்வம் செழித்துக் கிடக்கிறது; ஜனங்களிற் பெரும்பாலர் தரித்திரத்தால் வருந்துகிறார்கள்; அவர்கள் கையில் பணமில்லை.



ஒரு காலத்தில் மனிதர்கள் பணமில்லாமல் ஜீவித்து வந்தார்கள். பிறகு பண்ட மாற்றுக்குப் பதிலாகப் பணம் வழங்கிற்று. இப்பொழுது பணம் சிலருடைய சொந்தச் சொத்தாக மாறி, மற்றவர்களெல்லாரும் தங்களை யறியாமலே அவர்களுக்குக் கடன் பட்டவர்களாய், அவர்களின் அதிகாரத்துக் குட்பட்டு உழலுகிறார்கள். பண்டம் மலிந்தாலும், அவற்றால், முதலாளிகளைத் தவிர, வேறெவரும் லாப மடைவ தில்லை. 'நோட்டுக்களை' அதிகரித்தோ, குறைத்தோ, அவர்கள், தங்கள் இஷ்டப்படி, பண்டத்தின் விலையையும், வேலையின் கூலியையும், பொன்னின் மதிப்பையும், தீர்மானிக்கக்கூடும்.

இத் தேசத்துக்கு ஜர்மனி கடன்பட்ட தேசம் - கடனுக்கு ஈடாக ஜர்மானியர்கள் பண்டங்களைக் கொடுத்தால், நாம் (அதாவது நம்மை ஆட்டுவிக்கும் முதலாளிகள்) "எங்களுக்குப் பண்டங்கள் தேவையில்லை; பணந்தான் வேண்டு"மென்று சொல்கிறார்கள். தெய்வானுக்கிரகத்தால் ஓர் அற்புதச் சுரங்கம் அகப்பட்டு, நமக்கு வேண்டிய பொன்னை ஜர்மனி கொடுக்கக் கூடுமானால், அப்பொழுது அப்பொன் விலைமலிந்து, வேண்டுவாரில்லாமற் போய்விடும். ஆகவே, கடன்காரர் போக்கு இரண்டுங்கெட்டான் வழி. கடன் தீர்ந்து மற்றவர்களுடன் சமமாய் வாழ்வதே அவர்களுக்கு வேண்டும். சாதாரண ஜனங்கள் பண்டமாற்றுக்குப் பதிலாகப் பணம் மாற்றிக் கொள்ளும் பொழுதெல்லாம், கடன்சீட்டைத்தான் மாற்றிக்கொள்கிறார்கள். யாருக்கு யார் எந்தக் காலத்தில் எதற்காகப்பட்ட கடன் இது? இது தீராவிட்டால், நம் நாகரிகத்தில் பெருங்குழப்பங்கள் ஏற்பட்டு, அடியோடு நாசமாய்ப் போனாலும் போகும். இதற்குள்ள ஒரே நிவர்த்தி :—பணமென்று இப்பொழுது வழங்கும் நாணயங்களையும், நோட்டுக்களையும் அழித்து விட்டு, ஒரு சாதாரணவேலையாளின் நாட்கூலி அவன் தேவைகளுக்குப் போதுமானதா யிருக்கும்படி கணக்கிட்டு ஸ்தாபிக்கப்பட்ட புது ப்ராமிஸரி நோட்டுக்கள் துரைத்தனத்தாரால் மட்டும் வெளியிடப் பட்டால், ஜனங்களின் அடிமைத்தனம் நீங்கி, சுதந்திரத்தையும், பொருளையும் பெறுவார்கள்; குடியாட்சியின் கருத்தும் நிறைவேறும்.

# பாவலர் விருந்து

(412-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீமத் விபுலாநந்த ஸ்வாமிகள், மயிலை

**நக்கீரனார்:**—விக்கல் ஒருவகைப் பொருந்தாமை; தும்மல் மற்றொருவகைப் பொருந்தாமை; தும்மல் உண்டாக விக்கல் நின்று விட்டது; ஆதலால், ஒரு பொருந்தாமையை மற்றொரு பொருந்தாமை யழிக்கு மென்பது எனக்குப் புலப்படுகின்றது; வைத்திய சாஸ்திரத்துக்கும் இது உடம்பாடோ அறியேன்.

**மருத்துவன் தாமோதரனார்:**—குற்றங்காணுதலையே சிறந்த கொள்கையாக வுடைய நண்பரே! நீவிர் காட்டிய "பொருந் தாமை" இலக்கணத்துக்கு, நீவிர் தாமே இலக்கியமு மாயினீர்; இனிப், பொருந்தும் வழியறிந்து கூறினால், பொருந்தும் பொருளை யாம் பொருந்தவைத்து நோக்கிக் கொள்வோம், பொருந்தாப் பொருளையும் பொருந்தவைத்து நோக்கிக் கொள்வோம்.

**நக்கீரனார்:**—நல்லது ஐயா தாமோதரனாரே! தாங்களும் பா ணரும் கூறிய முடிபுகளுட்பல பொருந்தா முடிபுகளாக எனக்குப் புலப்படுகின்றன. ஒருவனுக்கும் ஒருத்திக்கும் இடையிலுள்ள அன்பின் தன்மையை ஆராய்ந்தறிவதற்கு முதலிலே மனித வியற்கையை யாராய்ந்தறிதல் வேண்டும். சிருஷ்டி யாரம்பத் திலே, கடவுள், மக்களை ஒரு பக்கம் ஆண்பிள்ளை வடிவமும் ஒரு பக்கம் பெண்பிள்ளை வடிவமும் ஒருங்கு பொருந்திய வடிவமாகப் படைத்தார். இங்ஙனம் படைக்கப்பட்ட மக்கள் எல்லோரும் ஒரே தன்மையராக விருந்தமையால், அவர்களிடத்து விருப்பு வெறுப்புத் தோற்றவில்லை. எல்லோரும் ஞானமார்க்கத்தில் தவஞ்செய்துகொண் டிருந்தார்கள். இதைக்கண்ட தேவராஜ னாகிய இந்திரன், இவர்களை இந்நிலையில் விட்டால் உலகத்தில் விருத்தியுண்டாகா தென்றறிந்து, வாளினால் இரண்டுகூறு செய் திட்டான். அங்ஙனம் கூறு செய்யப்பட்ட பாகங்கள் ஆணும் பெண்ணுமாய் ஒன்றை யொன்று நாடுவனவாயின; அதனாற் சந் ததிவிருத்தி யுண்டாயிற்று. இந்த உண்மையை யறியாது தனித் திருப்போர் மரபுகடந்தவ ராவார்; இத்தகையோரைத் தேவர்கள் கடிந்து பின்னும் இருகூறு செய்து விடுவாரெனின், இன்னார்கதி அதோகதிதான். இந்த ஒரு குறிப்புத்தான் நான் சொல்ல வேண் டியது; தாமோதரனார் கொள்ளினுங் கொள்ளுக, தள்ளினுந் தள் ளுக. இனி அரசரும், சாத்தனாரும் கூறுவனவற்றைக் கேட்டுப், பொருந்தும் உரை இது, பொருந்தாவுரை யிது என்று அறிவோ மாக. நான் கூறிய குறிப்பினைச் சற்றுவிரித்துச் சொல்லுவதா யின், தலைவனுக்குந் தலைவிக்கு மிடையிலுள்ள தொடர்பு, சொல் லுக்கும் பொருளுக்கும் இடையிலுள்ள தொடர்பினையும், அமிழ் தூக்குஞ் சுவைக்கு மிடையிலுள்ள தொடர்பினையும் நிகர்த்தது.





அன்புடையா ரிருவர் இருவேறு உடலினராக உலகத்தாருக்குக் காணப்படினும், உண்மையில் அவர் உயிர் ஒன்றேயாகும். "பொன்னம்பாவை யிரண்டினைப் பொற்கொல்லனானவன் ஒன்று சேர்த்துருக்கி ஒரு பாவையாக்கி விடுதல்போல, அன்புடையோ ராகிய நும்மிருவரையும் ஒன்று சேர்த்துருக்கி ஒருருவ மாக்கி விடு கின்றேன்" என்று ஒரு தெய்வங் கூறுமாயின், அன்புடையாரிரு வர், இதனினும் மிக்க பெரும்பேறில்லை யெனவறிந்து, ஒருருவ மாவதற்கு உடன்பட்டு நிற்பார். அன்புடையார், தாம் அன்பு செய் யும் பொருளைச் சிந்தித்துச் சிந்தித்துத் தம்வயமிழந்து அதன்வய மாதற்கு விழைவாரே யன்றித் தனித்திருப்பதற்கு விழைய மாட் டார். ஆன்மாவுக்கும் தனிப்பெருந் தலைவனுக்கும் இடையி லுள்ள தொடர்பும் இந்நீர்மையதென உண்மைநூ லுரைக்கும். "தானேயவள்; அவளேதான்," எனநிற்கும் நிலையே தலையாய அன்பின் நிலை. அன்பர் தமக்கென ஒன்றும் வேண்டார். உற்றார், ஊர், பேர், சுற்றம், புகழ், பொருள், நட்பு, கற்றோர்ச் சேர்தல் என்னும் இவையனைத்தினையும் பற்றறத்துறந்து, கன்றை நினைத்தல றும் புனிற்றாவைப்போலக் கருத்தழிந்து, தலைவனை நினைந்து இரங் குதல், உண்மையன்பாது இயல்பாகும். ஊன், உணர்வு, உள்ளமாகிய அனைத்துங் கெட்டு வெறும் பாழாகி, "நான்" என்னும் எண்ண முங் கெட்ட பின்பன்றி, அன்பு நிலை கைகூடாது. நானும் அவ னும் வேறல்ல வெனின், நானென்ப தெங்கே, அவனென்ப தெங் கே? ஒன்றாயிருந்து பிரிந்தோர் ஒன்றுதற்கு விரும்பி நிற்பது போல, இறைவனோடு ஒன்றாயிருந்து பிரிந்த உயிரும் அவனோடு ஒன்றுபட்ட பின்பன்றிப் பேரின்ப முறாது. அன்பின் மேன வாக யான் கூறவிரும்பியன இவையே.

**மருத்துவன் தாமோதரனார்:**—நக்கீரனாருரை அறிவுடை யோர் உள்ளத்துக்குப் பெருமகிழ்வினை யளிப்பது. இதுவரையும் யாங்கேட்டவையேயன்றி, அன்பின் மேனவாகிய பொருண்முடிபு கள் பிறவுளவென் றெண்ணுதற் கிடமில்லை. அங்ஙனமாயினும், அரசரும், சாத்தனாரும் அகத்திணையில் நிரம்பிய புலமை வாய்ந்தவ ராதலினால், அவருரை அகன்ற நீர்மையதாகு மென்பதற்கும் ஐயப் பாடில்லை.

**சாத்தனார்:**—ஆமாம் தாமோதரனாரே! நீவி ரெல்லாம் நல் வினையாளர்; அரசருரைக்குப் பின்பு உரை தொடுக்க வேண்டிய யான் தீவினையாளன்; சொல்ல வேண்டிய பொருண் முடிபுகளை யெல்லாம் உத்தமப் புலவராகிய நீவிர் ஆராய்ந்து சொல்லிவிட்டீர்; எஞ்சியவற்றை அரசர் சொல்லிவிடுவார், என்பாடு அல்லல்தான்.

**நன்மாறன்:**—ஐய! புலவரேறே! என்னுரை சிறக்கு மென்று கூறினீர்; அது சிறவாது என யானறிவேன். சிறப்பிலது தோற்று முன் சிறப்புளது எனப் புகழப்படுமாயின், சிறப்பிலதற்கு உள்ள சிற்றளவு சிறப்புத்தானும் குன்றி, அற்றுப் போகுமே யென அஞ்சுகிறேன்.

**சாத்தனார்:**—பெருவிறன் மன்ன! பல்லாயிரவர் கூடிய அரங் கங்களில் நின் புயவலியும் உரைவலியும் சிறந்து விளங்கினதை யான் அறியேனா? இங்கு கூடியிருக்கும் சில நண்பராகிய எங்க ளது முன்னிலையிலா நீ நாணியொதுங்கப் போகின்றாய்?

நன்மாறன் :—புல்லியோர் பலர் முன்னிலையில் பெருக வுரையாடும் நாவானது, நல்லா ரவைக்களத்தில் நாணி யொடுங்குதலும் இயல்பு தானே.

சாத்தனார் :—செய்யுஞ் செயல் நற் செயலாயின் நல்லா ரவையிலும், புல்லியோர் கூட்டத்திலும் நாணுது செய்யலாம்; தீச் செயலாயின் புல்லியோர் கூட்டத்துக்கும் நாணுதல் வேண்டும். புல்லியோர் புல்லியராயின், அவரை இழுக்கமுற நடாத்தி மேன் மேலும் புல்லியோ ராக்குதல் மாபாமோ?

காரிக்கண்ணனார் :—புலமை மிக்கோரிருவர் உரையாடத் தொடங்கினால் அவ்வுரை யெல்லையற்றுப் பெருகும். அன்பினைப் பற்றி யறிய யாமெல்லாம் ஆவலோ டிருக்கின்றோ மாதலினால், சொல்லவேண்டிய வற்றைச் சொல்லி முடித்து விட்டுப் பின்பு உரையாடும்படி அரசரையும் சாத்தனாரையும் யான் பணிவொடு வேண்டிக் கொள்ளுகிறேன்.

நன்மாறன் :—நல்லது நண்பரே! உமது சொற்படி இனித் தடையின்றி யான் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லுகிறேன்.

(தொடரும்)

# ஏற்ற உபாயம்

ஸ்ரீலஸ்ரீ இலக்குமணப் போற்றிகள், தச்சநல்லூர்

“தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்தது, உண்ணலின் ஊங்கு இனியது இல்”—திருக்குறள்.

ஒருவன் தானே முயன்று தேடிய பொருள் அற்பமாயினும், அது கொண்டு ஜீவித்தலின் மேலான இன்பம் வேறில்லை என்பதாம்.

நமது இந்தியா தேசம் இப்பொழுது அடைந்துள்ள குறைந்த நிலைமையை மாற்றுவதற்கு உரிய உபதேசமாக இக்குறளை மதித்து ஒழுகல் வேண்டும். “இடிபுரிந்து எள்ளுஞ் சொற் கேட்பதும்”, “ஒன்னார்க்கு அடிமை புகுவதும்,” மடி (சோம்பல்) யினால் என்பதை, எவரும் மறுக்க மாட்டார்கள். நாம் அயல்நாடுகளுக்குச் சென்று இகழ்ச்சி அடைவதும், நமது நாட்டிலேயே அடிமைகள் போல



இருப்பதும் மடியினால் அல்லவா? தன் முயற்சி செய்வதால் தனக்குச் சுவாதீனமும், தன்முயற்சியின் பயனையே உண்ணல் வேண்டு மென்பதால் பிறர் பொருளை இச்சியாமையும், அழுக்காறு, அவா, வெகுளி, முதலிய மனக்குற்றங்களின் நீக்கமும் உண்டாகின்றன. தன் முயற்சியின் பயன் இவ்வா றிருப்பதுபற்றி, “ஊங்கு இனியது இல்” என்று, திருவள்ளுவர் அழுத்தமாகச் சிறப்பித்துக் கூறினார். ஒவ்வொருவனும் தான் செய்ய வேண்டிய காரியங்களைக் கடமையாகக் கருதிச்செய்து முடிப்பானாகில், கெடாத இன்பமுற்றவ னாகின்றான். கடமையை நிறைவேற்றிய மனசானது ஆறுதல் அமைந்தே நிகழும். நமது முன்னோர்களாகிய பெரியாரும், “கைம்மாறு வேண்டாக் கடப்பாடு”, “கடன் என்ப நல்லவை யெல்லாம்”, “என்கடன் பணி செய்து கிடப்பதே”, “கர்மண்யேவ அதிகாரஸ்தே” எனப் பகர்ந்திருக்கின்றனர். பயன் அடைவிக்கும் சுதந்தரம் நமக்கு இல்லாமையால், நாம் ஒரு வினையைச்செய்து, நாம் கருதியபடி அது நிறைவேறப் பெறாவிட்டால், மன உறுதி தளர்வடையும் என்பது நோக்கி, பலனை எதிர்பாராமல் கர்மங்களைச் செய்யவேண்டு மென்றார்கள். உலகத்தில் நாம் செய்கிற ஒவ்வொரு கருமமும் அதன் அதன்பயனை அடையாமற் போகிறதில்லை யென்பது உறுதி. நாம் கருதிய காலத்திலோ வேறு காலத்திலோ, நமது முயற்சிக்குத் தக்கபயன் உண்டாகும். ஆதலால், நாம் எக்காலமும் முயற்சி செய்வதையே பெருமையாகக் கொள்ளல் வேண்டும். கடமை உணர்ச்சியுடன் முயற்சி செய்த நாட்டாரே உயர்வை அடைவார்கள். நமது ஆங்கில மக்களுக்கு மூல மந்திரம் போன்ற உறுதிமொழி கடமையேயாம். ஆதலால், அவர்கள், தொகையில் சொற்ப எண்ணிக்கை உடையவர்களாயிருந்தும், அவர்களைவிட அதிகமான ஜன சமூகங்களையுடைய பெரும் பெரும் தேசங்களை ஆட்சி புரிந்து வருகின்றனர். அவர்கள் வேலை செய்வதை இகழ்கிறதில்லை. நமது மன்னர் பெருமானுமே இளமையில் கப்பலில் வேலையாளாக இருந்து, ஓர் உத்தியோகஸ்தனுக்குக் கீழ் அடங்கி நடந்தா ரென்றால், அவர்களுடைய புத்திசாலித்தனத்தைக் கவனியுங்கள். அவர்கள் இந்த நிலைமையில் இன்னும் எத்தனையோ தேசங்களைக் கையாளுவார்கள். ஆனால் இந்தியர்களாகிய நாம், அவர்களைவிட மூளை பலம் தேகபலம் இவற்றில் குறையுடையோமா? அல்ல. நமது தேசத்தின் சீதோஷ்ணஸ்திதியின் தன்மையினாலோ, விவசாயத்தொழி லில் விதைக்கிற காலத்திலும் அறுக்கிற

காலத்திலுமட்டும் வேலை செய்ய நேரிடுவதினாலோ, சோம்பலை வளர்க்கும்படி அமைந்ததென்று யூகிக்கலாம். ஆனாலும், தற்காலத்தில் பிறதேசத்தார் பல விதத்திலும் நம்முடைய விளைவு பொருள்களை உறிஞ்சுவதால், நாம் ஜாக்கிரதைப்படல் வேண்டும். நமது ஆகாரத்தை நமக்கு உழைத்துக் கொடுக்கிற பள் பறைகள் கூலியாட்கள் முதலியோரை, நமது மக்களைப்போல பாவிக்கவேண்டும். அசுசி பற்றி ஒருவரைத் தீண்டக் கூடாதேயன்றி, தொழில் புரியும் காரணம் பற்றி யாரையும் இழிவாக நினைத்தல் கூடாது. நல்லதொழிலாளிகளைக் கண்டால், சக்கரவர்த்தியாயிருந்த நெபோலியனும் தலைகுனிந்து வணங்குவாராம். சென்ற் ஹெலினாவில் அவர் நடந்துபோகும் பொழுது, எதிரே வந்த ஓர் சுமைகாரனை, அவர் கூடவந்த ஓர் மாது விலகும்படி சொன்னதைப் பொறுக்காமல், அப்படிச் சொல்வது தவறு என்றும், அந்தச்சுமைகாரன் உலகோபகாரி என்றும், மிகவும் அற்பமான வேலையும் ஜனசமூகத்திற்கு உபகாரமாகிறதென்றும் சொன்னாராம். அன்றியும், ஓர் ஆண்மகன் வேலை செய்யாதிருந்தால், இராஜ்யத்தில் யாராவது ஒருவர் பசிப்பிணியால் வருந்துவார் என்றும்; பெண்மகள் ஒருத்தி வேலைசெய்யா திருந்தால, ஆடையின்றி யாராவது ஒருவர் குளிரினால் வருந்துவார் என்றும், சைனா தேசத்துச் சக்கரவர்த்தி ஒருவர் வெகு விவேகத்துடன் கூறினாராம். இவ்வாறு அந்நிய நாடுகளெல்லாம் வேலைக்கு மரியாதை கொடுத்தும் வேலையாளர்களைச் சமமாகப்பாவித்தும் நடத்தி வந்திருக்கின்றன; அவ்வாறே நாமும் நடக்கவேண்டும். நம்மிடத்திலுள்ள குறைகளைப் பிறரைப் பார்த்து நிவர்த்தி செய்துக் கொள்வதுதான் அறிவுடைமைக்கு அறிகுறியாகும். "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டிற் பரந்து கெடுக உலகியற்றியான்" என்று திருவள்ளுவ நாயனார் கூறியிருப்பதை நன்றாய் ஆலோசியுங்கள். 'உத்யோகம் புருஷ லக்ஷணம்' என்பதன் கருத்து என்ன? உத்யோகம் என்றால் அரசாங்கத்தில் அடிமைத்தொழில் புரிவதென்பதல்ல; முயற்சி என்பதே அதன் பொருள். முயற்சியுடையவனே மனுஷன் என்பதுகருத்து. ஆதலால் ஒவ்வொருவனும் முயற்சியையே பெருமையாக நினைத்து, முயற்சி யுடையவர்களை நன்குமதித்து, தான் முயன்று தேடிய பொருளைக் கொண்டே ஜீவிப்பதென்னும் கொள்கை பூண்டால், அவனுடைய குடும்பமும், அவனையுடைய ஜனசமூகமும், அவன் வசிக்கும் நாடும், எல்லாம் பெருமை அடையும்.

---

# அரசன் அஸ்ஸர்ஹாதன்*

ஸ்ரீ. K. விசுவநாதையர், B.A., L.T., சித்தூர்.

அஸ்ஸிரியா தேசத்து அரசனான அஸ்ஸர்ஹாதன், லெய்லீ ராஜனுடைய ராஜாங்கத்தை வென்று, பட்டணங்கள் எல்லாவற்றையும் நாசஞ் செய்து, எரித்து, குடிகள் எல்லோரையும் தன்னாட்டிற்குள் துரத்தி, யுத்த வீரர்களைக் கொன்று, தளகர்த்தர்களைச் சிரச்சேதஞ் செய்து, சிலரைக் கழுவேற்றி, மற்றுஞ் சிலரை உயிரோடு தோலை உரித்து, அரசன் லெய்லீயையும், கூட்டிற்குள் போட்டான்.

இரவில் தன் படுக்கையில் படுத்துக்கொண்டு, லெய்லீயை எவ்விதம் சிரச்சேதம் செய்வது என்று, ஆலோஜனை செய்து கொண்டிருக்கும்போது, திடீரென்று அவன் பக்கத்தில் சலசல வென்ற ஒரு சப்தம் கேட்டது. கண்ணைத்திறந்து பார்க்கையில், நரைத்துள்ள நீண்ட தாடியையும், சாந்தமான கண்களையும் உடைய ஒரு கிழவரைத் தன்னெதிரில் அஸ்ஸர்ஹாதன் கண்டான்.

அவ்வயோதிகர், "லெய்லீயைச் சிரச்சேதஞ் செய்ய நீ விருப்பங் கொண்டிருக்கிறாயல்லவா?" என்று கேட்டார்.

அரசன், "ஆம், அவனைச் சிரச்சேதஞ் செய்யும் விதத்தை மாத்திரம் இன்னங் கண்டுபிடிக்கவில்லை," என்று பதிலளித்தான்.

"ஆனால், லெய்லீ நீயே தான் என்று அறியாயோ?" எனக் கிழவர் வினவினார்.

"அது உண்மையாகாது, நான் நான் தான், லெய்லீ லெய்லீ தான்," என்று அரசன் மறுத்தான்.

கிழவர், "நீயும் லெய்லீயும் ஒன்றே, நீ லெய்லீ இல்லை யென்றும், லெய்லீ நீ யில்லையென்றும் உனக்குக் காணப்படுகிறதே தவிர வேறில்லை" என்று திரும்பவும் பகர்ந்தார்.

அரசன் கிழவரை நோக்கி, "அது எவ்விதமாகப் பிரமைத் தோற்றமாகும்? இதோ நான் மிருதுவான படுக்கையில் சயனித்துக் கொண்டிருக்கிறேன். இதோ என்னைச்சுற்றி, ஸ்திரீ, புருஷ

---

* மகாத்மா காந்தியின் குருவெனத்தகும் ருஷிய மஹான் லியோ டால்ஸ்டாய் எழுதிய கதையைத் தமிழில் அமைத்தெழுதியது.

அடிமைகள், இட்ட வேலைகளைச் செய்ய, அடக்கத் தோடிருக்கிறார்கள். இன்றையதினம் நான் எவ்விதம் சந்தோஷத்தோடு என் நண்பர்களுடன் புஜித்தேனோ, அவ்விதமே நாளைக்கும் புஜிப்பேன். ஆனால் லெய்லீயோ கூட்டில் பறவையைப் போல் உட்கார்ந்து கொண்டிருக்கிறான்; இன்னும், நாளைக்குக் கழுவேற்றப்பட்டு, வாயினின்று நாக்குத் தொங்கவும், உயிர் படபடத்துப் போகவும், சரீரமானது நாய்களால் கிழிக்கப்படவும் போகிறான்," என்று சொன்னான்.

கிழவர், "அவன் ஜீவனை உன்னால் அழிக்கலாகாது" என்று சொன்னார்.

அரசன், "நான் கொன்ற பதினான்காயிரம் யுத்த வீரர்களைப் பற்றி என்ன சொல்லுகிறீர்? அவர்கள் சரீரங்கள் மலைகளாகக் குவிந்திருக்கின்றன. நானோ உயிரோடிருக்கிறேன். அவர்களோ இறந்து போய்விட்டார்கள். ஆகையால், நான் ஜீவனைக்கொல்ல முடியும்," என்றான்.

"அவர்கள் இனி இல்லை என்பது உனக்கு எவ்விதம் தெரியும்?" என்று கேட்டார் கிழவர்.

அரசன், "அவர்கள் என் கண்களுக்குப் புலப்படவில்லை. இன்னும், எனக்கு ஓர் அவஸ்தையும் இல்லாதிருக்க, அவர்களோ சித்திரவதையை அனுபவித்தார்கள். எனக்கு எல்லாம் நன்மையாக விருக்க, அவர்களுக்கு எல்லாம் தீமையாக இருந்தது," என்றான்.

கிழவர், "இது கூட உனக்குத் தோற்றமே; நீ அவர்களைச் சித்திரவதை செய்யவில்லை. உன்னையே தான் சித்திரவதை செய்து கொண்டாய்," என்றார்.

அரசன், "நீர் சொல்லுவது எனக்கு விளங்கவில்லை," என்றான்.

கிழவர், "நீ விளக்கமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறாயா?" என்று கேட்டார்.

"ஆம், எனக்கு இஷ்டமே," என்றான் அரசன்.

கிழவர், நீர் நிறைந்த ஒரு தொட்டியை அரசனுக்குக் காண்பித்து, "இங்கேவா," என்றார். அரசன் படுக்கையை விட்டெழுந்து, நீரின் சமீபத்திற்கு வந்தான்.

"உடைகளைக் களைந்து, அதன் உள்ளே நுழை" என்றார்.

கிழவர் சொல்லிய வண்ணமே, அஸ்ஸர்ஹாதன் செய்தான்.

"நான் இந்த ஜலத்தை உன்மேல் ஊற்றும்பொழுது, உடனே நன்றாக முழுகிவிடு," என்று அவர் சொன்னார்.



கிழவர் அரசன் தலையில் ஜலத்தை ஊற்றவும், அரசன் முழுகினான்.

அரசனாகிய அஸ்ஸர்ஹாதன், முழுகினவுடனே, தான் அஸ்ஸர்ஹாதனில்லாது வேறொரு மனிதனாகத் தனக்கே தோன்றினான். தான் உயர்ந்த படுக்கையில் படுத்துக்கொண்டிருப்பதும், தன் பக்கத்தில் ஓர் அழகிய ஸ்திரீ சயனித்துக்கொண்டிருப்பதும் தெரிந்தது. இந்த ஸ்திரீ எழுந்து, அவனைப் பார்த்து, "என்னருமை நாயகனே! லெய்லீயே! நேற்றுச் செய்த உழைப்பான வேலைகளால், மிகக் களைத்திருக்கிறீர்கள் போலும். அது காரணம் பற்றியே வழக்கத்தைக் காட்டிலும் அதிக காலம் அயர்ந்து விட்டீர்கள். நானும் தங்கள் நித்திரைக்குப் பங்கம் வராவண்ணம், இது காறும் பாது காத்திருந்தேன். இப்பொழுது விசாலமான மாளிகைக் கூடத்தின் கண் இளவரசர்கள் தங்களுக்காகக் காத்திருக்கிறார்கள். ஆகையால் தாங்கள் உடைகளைச் சீர்செய்து வரவும்," என்று உரைத்தாள்.

அஸ்ஸர்ஹாதன், தன்னை லெய்லீயாக எண்ணிக்கொண்டும், தான் லெய்லீயாக மாறினதற்கு ஆச்சரியப்பட வேண்டியிருக்க, அவ்விதம் ஆச்சரியப்படாது, தான் "லெய்லீ" என்பதை இது காறும் தெரிந்து கொள்ளாததற்காகவே, ஆச்சரியப்பட்டுக் கொண்டும், எழுந்து, உடைகளை உடுத்து, இளவரசர்கள் காத்திருக்கும் மாளிகைக் கூடத்திற்குச் சென்றான்.

இளவரசர்கள் தங்கள் மன்னனான இந்த லெய்லீக்கு, வந்தனமளித்து, சாஷ்டாங்கமாக வணங்கி, அரசன் உத்தரவின் பேரில், அவரவர்களுக்கு நியமிக்கப்பட்ட ஆசனங்களில் அமர்ந்தார்கள்.

இளவரசர்களில் மூத்தவன் எழுந்து, கொடிய அரசனான அஸ்ஸர்ஹாதன் செய்யும் அவமானங்கள் இனிமேல் பொறுக்க முடியாதென்றும், இனித்தாமதமின்றி யுத்தஞ் செய்ய வேண்டுமென்றும், சொல்லலானான். ஆனால், லெய்லீ, அவ்விளவரசன் வார்த்தைக்கு இணங்காது, அஸ்ஸர்ஹாதனோடு சமாதானஞ் செய்து கொள்ளத் தூதர்களை அனுப்புவதே உத்தமம் என்று தீர்மானித்து, இளவரசர்களை அனுப்பிவிட்டான்.

பிறகு பூஜிக்கத் தகுந்த மனிதர்களை அழைத்து, அவர்களைத் தூதர்களாக நியமித்து, அரசன் அஸ்ஸர்ஹாதனோடு, எவ்விதம் விஷயங்களைப் பேச வேண்டுமோ அவைகளை விஸ்தாரமாக அவர்களுக்கு விளம்பினான். இவ்விவஹாரங்களை முடித்த பிறகு, இன்னும் தன்னை லெய்லீ யென்றே உணர்ந்த வண்ணமாக, காட்டுக் கழுதைகளை வேட்டை யாடும் பொருட்டு, மலைகளை நோக்கிச்

சென்றான். வேட்டை மிகவும் நன்றாக ஜயத்தோடு நடைபெற்றது. தானே இரண்டு கழுதைகளைக் கொன்றான். பின்னர், வீட்டிற்குத் திரும்பித் தன் நண்பர்களோடு விருந்துண்டு, அடிமை ஸ்திரீகளின் நாட்டியத்தைக் கண்ணுற்றான்.

மறுநாளில், வழக்கம்போல், குற்றவாளிகளும், வழக்காளிகளும் நிறைந்த நியாய சபைக்குச் சென்று, வியாஜ்ஜிய விவஹாரங்களை விசாரித்து, தீர்மானங்கள் அளித்தான்.

இவ்விவஹாரங்கள் முடிந்த பிறகு, மறுபடியும், தன்னுடைய பிரியமான ஆட்டமாகிய வேட்டைக்குப் புறப்பட்டான். அன்றைய தினம் ஒரு கிழப் பெண்சிங்கத்தைக் கொன்று, ஜயத்தோடு அதன் இரண்டு குட்டிகளையும் பிடித்தான். இதற்குப் பின்னர், தன் நண்பர்களோடு, உற்சாகத்துடன் விருந்துண்டு, நாட்டியங்களிலும், பாட்டுக்களிலும் களிப்படைந்து, இரவைத் தன் நேச மனைவியுடன் கழித்தான்.

இவ்விதமாக ராஜ்ஜிய பாரங்களிலும், ஆனந்தம் விளைவிக்கும் ஆட்டங்களிலும், காலத்தை சமமாகவே கழித்து, முன்பு அஸ்ஸர்ஹாதன் தானாகவேயிருந்ததுவும், இப்பொழுது வேறுபட்டுத் தோன்றுகிறதுவுமான இவன், அஸ்ஸர்ஹாதனுக்கு என்று அனுப்பின தூதர்களின் வரவை, நாளுக்கு நாள், வாரத்திற்கு வாரம் எதிர்பார்த்து வந்தான். தூதர்கள் ஒரு மாதகாலமான பின்னர், மூக்குக்களும் காதுகளும் அறுக்கப்பட்டுத் திரும்பினார்கள்.

குறிக்கப்பட்ட வெள்ளி, பொன், 'ஸைப்ரஸ்' கட்டைகள், முதலானவைகளை, நேரில் வந்து தானே வணக்கத்துடன் கப்பமாகக் கட்டாவிடில், தூதர்களுக்கு நடந்தவைகள் லெய்லீக்கும் நடந்துவிடுமென்று தெரிவிக்கும்படி, தூதர்களுக்கு, அரசன் அஸ்ஸர்ஹாதன் கட்டளையிட்டு அனுப்பினான்.

முன்பு அஸ்ஸர்ஹாதனாக இருந்த லெய்லீ, இளவரசர்களை வரவழைத்து, இனிச் செய்யவேண்டியவற்றிற்குச் சதியாலோசனை செய்யலுற்றான்.

எல்லோரும்,ஒரு மிக்கச்சம்மதித்து,'அஸ்ஸர்ஹாதன் எதிர்த்து வருமுன் நாமே அவன் மீது படையெடுக்கவேண்டும்' என்று முடிவு செய்து கொண்டார்கள். அரசனும்அதற்கிணங்கி, தானே தன் சேனைகளுக்குத் தலைவனாக இருப்பதாக ஒப்புக்கொண்டு, யுத்தத்திற்கு ஆரம்பித்தான். ஒவ்வொருநாளும் அரசன் தன் சேனைகளை நேரில் பரிசோதித்து, யுத்தவீரர்களுக்கு மனந்தளரா வண்ணம் தைரிய வசனங்கள்கூறி, அவர்களுக்கு ஊக்கம் மேலும் மேலும் விருத்தியாகும் வண்ணமாகச் செய்தான். இவ்விதம் ஏழுநாட்கள் சென்றன. எட்டாவது நாளில், இவன் சேனை, ஒரு நதியோரத்திலுள்ள ஒரு பெரிய பள்ளத்தாக்கில், அஸ்ஸர்ஹாதன் சேனையைச் சந்தித்தது.



லெய்லீயின் சேனைகள் மிகுந்த பாரக்கிரமத்தோடு யுத்தஞ் செய்தன. ஆனால், முந்து அஸ்ஸர்ஹாதனாக இருந்த இல் லெய்லீ, தன் விரோதியின் சேனை குன்றினின்று எறும்புச்சாரிகள் போல் கூட்டங் கூட்டமாக அதிவேகத்துடன் பள்ளத்தாக்கின் மேல் வருவதையும், வந்து தன்சேனைகளை முறியடிப்பதையும் நோக்கி, களத்திற்குள் பரபரப்போடு ஓடிச் சேனைகளின் நடுவிற் சென்று, தன் உடைவாளினால், எதிர்ச்சேனை யுத்தவீரர்களைக் கொன்று சின்னா பின்னமாக அலசினான். ஆனால் லெய்லீயின் சேனைகள் நூற்றுக்கணக்கிலும், அஸ்ஸர்ஹாதன் சேனைகள் ஆயிரக்கணக்கிலும் இருந்தன. கடைசியில், லெய்லீ இரணகளத்தில் காயப்பட்டுக் கைதியாகக் கொண்டு போகப்படுவதை உணர்ந்தான்.

ஒன்பது நாட்களாக, அஸ்ஸர்ஹாதன் வீரர்கள் சூழ, மற்றக் கைதிகளோடு, இவனும் கட்டப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டவனானான். பத்தாவது நாளில் இவனை நைநேவயிக்குக் கொண்டு வந்து, கூட்டில் போட்டார்கள். இவனுக்குப் பசியினாலும், காயத்தினாலும், எவ்வளவு அதிகமாகத் துன்பமுண்டான் போதிலும், அது அவனுக்குப் பொறுக்க இயலாததாகத் தோற்றவில்லை. ஆனால் தனக்கு உண்டான அவமானத்தினாலும், செலுத்துதற்கு முடியாத அடங்கா உக்கிரத்தினாலும், சகிக்க முடியாத மனத்துன்பத்தை அடைந்தான். அவனால் ஆகக்கூடியது இனி என்னவெனின், தன் இடுக்கண்களை எதிரிகள் கண்ணுற்று, ஆனந்தப்படுவதற்கு இடங்கொடுக்காம லிருப்பதே யென்பதுதான். ஆகவே, அவன் தனக்குச் சம்பவிக்கும் தீங்குகளை, ஒருவிதமான முணுமுணுப்புமில்லாமல், தைரியத்தோடும், உறுதியோடும், பொறுக்கவேண்டுமென்று தீர்மானித்தான். இருபது நாட்களாக இவ்விதமே கூட்டிலிருந்து கொண்டு, தன்னைத் தூக்கிலிடுங் காலத்தை எதிர்பார்த்திருந்தான்.

தன் உறவினர்களையும் சிநேகிதர்களையும், சிரச்சேதஞ் செய்ய அழைத்துப்போவதைக் கண்ணுற்றும், அவர்கள் சிரச்சேதஞ் செய்யப்படும்போது கதறுவதைச் செவியுற்றும், சிலர்களுக்குக் கால்களும் கைகளும் வெட்டுண்டு போவதையும், மற்றுஞ் சிலர்களுக்கு உயிரோடு தோல் உரிக்கப்பட்டுப் போவதையும் உணர்ந்தும், அவன் ஒருவிதமான துக்கத்தையும், பரிதாபத்தையும் பயத்தையும், வெளிப்படுத்தாதவனாக இருந்தான்.

இரண்டு கரு நிறமுள்ள அலிகள், தன் அழகிய மனைவியைக் கயிற்றால் கட்டி இழுத்துப்போவதைப் பார்த்து, அஸ்ஸர்ஹாதனிடத்திற்கு அவளை அடிமை செய்து அழைத்துப் போகிறார்கள் என்று தெரிந்தும், ஒன்றும் பேசாமல் பொறுமையோடிருந்தான்.

அப்பொழுது, இவன் பக்கத்தில் காவலாக இருந்த ஒருவன், இவனை நோக்கி, "ஓ! லெய்லீயே! உன்னைப்பார்க்க எனக்கு மிகவும் பரிதாபமாக இருக்கிறது. நீயோ அரசனாக இருந்தாய்; இப்பொழுது உன் கதி யென்ன?" என்று கேட்டான். இவ்வார்த்தைகள் லெய்லீயின் காதில் விழுந்து, தனக்குச் சம்பவித்த கஷ்ட நஷ்டங்களை யெல்லாம் மனதிற்குக் கொண்டுவரவே, கூட்டின் இரும்புக்கம்பிகளைக் கைகளால் இறுகப்பிடித்து, தற்கொலை செய்து கொள்ளும் பொருட்டு, அவைகளின் மேல் தலையை யிடித்து மோதினான், தன் னெண்ணம் நிறைவேறத்தகுந்த பலமில்லாததினால் ஒன்றுந் தோன்றாது, உறுமிக் கொண்டு கூட்டின் தரையில் விழுந்தான். அப்பொழுது இரண்டு கொலையாளிகள் கூட்டைத் திறந்தார்கள். பின்பு இவன்கைகளை பின் கட்டாக இறுகக் கட்டி, உதிரம் பிரவாஹமாகப் போய்க்கொண்டிருக்கும் கொலைக்களத்திற்கு அழைத்துச் சென்றார்கள். தன் நண்பன் ஒருவனைக் கொலைசெய்து, அவன் சரீரத்தினின்றும் விடுவிக்கப்பட்ட, இரத்தந் தோய்ந்த கூர்மையான கழுவொன்றைக் கண்ணுற்று, தன்னைக் கொலைசெய்யும் பொருட்டுக் காலிசெய்யப்பட்ட கழுவாயுதமே அது என்று தெரிந்து கொண்டான். உடனே இவன் உடைகள் களையப்பட்டன. அழகும் வளமுமுள்ள சரீரம், மிகவும் வாடியிருப்பதைக் கண்டு திகிலடைந்தான். கொலையாளிகள் இருவர்கள் இவன் சரீரத்தை யுயர்த்திக் கழுவின் மேல்வைக்க யத்தனஞ் செய்து கொண்டிருந்தார்கள்.

எதற்கும் அலக்ஷியமாக தைரியத்தோடு இருக்கவேண்டுமென்று தீர்மானித்த மனவுறுதி நழுவ, "ஐயோ! இது மரணமல்லவா?" என்று விம்மி அழுது, "எனக்கு இரங்குங்கள்" என்று, பிரார்த்திக்கலானான். ஆனால் இவன் வார்த்தைகளை ஒருவரும் இலக்ஷியம் செய்யவில்லை.

"இது மிகவும் அஸம்பாவிதம். ஒரு வேளை நான் தூக்கத்திலிருக்கலாம். இது கனவுபோலும்." என்று எண்ணி விழித்துக் கொள்ளப் பிரயத்தனம் செய்தான்.

'நான் லெய்லீ அல்லவே அஸ்ஸர்ஹாதன் அல்லவா?' என்று எண்ணி விழித்துக்கொள்ளுகையில், தான் அஸ்ஸர்ஹாதனுமல்



லாது, லெய்லீயு மல்லாது, ஒருவிதமான மிருகமாயிருப்பதைக் கண்டான்.

தான் மிருகமாயிருக்கிறதைப்பற்றி ஆச்சரியப்பட்டதுமன்றி, இதுகாறும் தான் மிருகமாயிருக்கும் விஷயம் தெரியாததற்காக விளைந்த ஆச்சரியம், மேலும் அதிகமானது.

ஒரு பள்ளத்தாக்கில் பற்களால் புற்களைக்கடித்து மேய்ந்துகொண்டும், தன் நீண்டவாலை அசைத்து ஈக்களை ஓட்டிக்கொண்டும், தன் மடுக்களில் ஒருவிதமான கனத்தை உணர்ந்து கொண்டுமிருக்கலானான்.

நீண்டகால்களும், கறுத்த நிறமும், வரிகளமைந்த முதுகும் உள்ள ஒரு கழுதைக்குட்டி, துள்ளி விளையாடிக் கொண்டு இவன் சமீபத்தில் நாற்காற்பாய்ச்சலில் வந்து, இவன் வயிற்றின் மீது தாக்கி, மடுவிருக்குமிடத்தைத் தேடிக் கடைசியில் கண்டுபிடித்துப், பாலை அருந்திக்கொண்டு, நிதானமாக நின்று கொண்டிருந்தது. அஸ்ஸர்ஹாதன் தன்னை ஒரு பெண் கழுதையாக உணர்ந்தும் தானே அக்குட்டியின் தாயென்று தெரிந்தும், ஆச்சரியமும் துக்கமுமின்றி, ஒரு வாறு சந்தோஷமடைந்தான்.

தன்னிடத்திலும், தன் குட்டியினிடத்திலும், ஒரே ஜீவன் ஓடுவதை உணர்ந்து களிப்புற்றிருக்கையில், ஏதோ ஒன்று 'விஸ்' என்ற சப்தம் செய்து கொண்டு, தன்னருகில் பறந்து வந்து, தன் பக்கத்தில் கூரிய நுனியால் குத்தித், தன் தோலிலும் தசையிலும் ஊடுருவி நுழைந்தது. அக்கினி பொடித்தாற் போன்ற வலியைப் பெற்று, கழுதையாக விருக்கும் அஸ்ஸர்ஹாதன் குட்டியின் பற்கள் சிதறும் வண்ணம் தன் மடுவை உதறிப் பிடுங்கிக் கொண்டு, செவிகளைப் பின் தள்ளி, கழுதை மர்தையை நோக்கி, நாலுகாற்பாய்ச்சலில் ஓடினான். குட்டி கூட, அவன் பக்கமே துள்ளி, கால்களின் அருகாமையில் ஓடினது.

கழுதை மந்தையைச் சமீபிக்கையில், பின்னும் ஓர் அம்பு, அதிவேகத்தோடு, குட்டியின் மீது தாக்கி, அதன் சரீரத்திற்குள் ஊடுருவிச் சென்றது. குட்டி, இரக்கம் வரும் வண்ணம் கதறித் தாயின் கால்களில் விழுந்தது. அஸ்ஸர்ஹாதன் அதை விட்டு அகல முடியாது, அதன் பக்கத்தில் நின்ற வண்ணமாகவே யிருந்தான். குட்டி யெழுந்து, தன் நீண்டு மெலிந்த கால்களின் மீது நிற்க முயன்று, மறுபடியும் கீழே விழுந்தது.

பயங்கரமான இரண்டுகால் ஜெந்து ஒன்று (மனிதன்) வந்து, குட்டியின் கழுத்தை அறுத்தது.

"இது அஸம்பாவிதம்! இது மறுபடியும் கனவாகவே யிருக்க வேண்டும்" என்றெண்ணி, விழித்துக் கொள்ளக் கடைசியாகப் பிரயத்தனஞ் செய்தான்.

அவன், ஹீனமான அழுகையோடு, ஸ்நானம் செய்யும் தொட்டியிலிருந்து, தலையை நிமிர்த்திப் பார்க்கையில், கிழவர் தன் தலையில் ஜலத்தை ஊற்றிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

"ஆஹா! எவ்வளவு காலமாக நான் கஷ்டப்பட்டேன்! என்ன விதமான கஷ்டங்கள்!" என்று, அஸ்ஸர்ஹாதன் சொல்லிப் பிரமித்தான்.

"அஃதெப்படி யிருக்கும்? நீ இப்பொழுது தான் ஜலத்தில் முழுகினாய்; இப்பொழுதே நீ ஜலத்தினின்றும் உன் தலையை நிமிர்த்தி விட்டாய். ஜாடியிலுள்ள ஜலத்தை இன்னும் ஊற்றியாக வில்லையே. உனக்கு இப்பொழுது விளங்கியதா?" என்று கிழவர் கேட்டார்.

அஸ்ஸர்ஹாதன், கிழவரைத் திகிலோடு நோக்கினனே யொழிய, வேறொரு பதிலும் சொல்லவில்லை.

கிழவர், மறுபடியும், "லெய்லீ உன்னைத்தவிர வேறில்லை என்பது தெரிந்ததா? நீ கொன்ற யுத்தவீரர்களும், வேட்டையில் கொன்றவும், விருந்தில் உண்டவுமான மிருகங்களும், உன்னைத் தவிர வேறில்லை யென்று உணர்ந்தாயா? ஜீவன் உன்னிடத்திலேயே அடங்கியுள்ளதாக எண்ணினாய். அவ்விதப் பிரமையான அஞ்ஞானம் உன்னை மூடிக்கொண்டிருப்பதை விலக்கினேன். பிறருக்குத் தீங்கு விளைவிப்பதனால், உனக்கே தீங்கு விளைவித்துக் கொள்ளுவதைப் பார்த்தாய். எல்லாரிடத்திலு மிருக்கும் ஜீவன் ஒன்றே. உன்னிடத்தில் ஒருபாகமே பிரதிபலித்திருக்கிறது. உன்னிடத்தில் விளங்கும் இந்தச் சிறுபாகமாகிய ஜீவனுக்கு, நன்மையோ, தீமையோ, அபிவிருத்தியோ, குறைவோ தான், உன்னால் செய்ய இயலும்.

"நீ மற்ற ஜீவராசிகளினின்று வேறுபட்டிருக்கிறதாகிய எண்ணமான அஞ்ஞான வரம்பை எப்பொழுது நாசஞ் செய்து கொள்ளுகிறாயோ; அதாவது, பிறரும் நீயும் வேறுபட்டவர்களில்லை, ஒருவரேதான் என்று உறுதியாக எண்ணி, அவர்களையும் தானாகவே நேசித்து நடந்து கொள்ளுகிறாயோ, அப்பொழுதே உன் ஜீவனுக்கு நன்மை செய்தவனாவாய்; அவ்விதந்தான் உன் ஜீவனையும் அபிவிருத்தி செய்ய வல்லவனாவாய்.



"உன் ஜீவனே ஜீவனென்று எண்ணிப் பிறரின் க்ஷேமத்திற்கு இடையூறு விளைவித்து, உன் க்ஷேமத்தை விருத்தி செய்ய முயலின், உனக்கே தீங்கு விளைவித்துக் கொள்ளுகிறாய். இவ்விதமாக உன் ஜீவன் க்ஷீணமடைகிறது.

"பிறரிடத்திலிருக்கும் ஜீவனை நாசஞ் செய்ய உன்னால் இயலாது. பிறரைக்கொல்லுவதால், அவர்கள் ஜீவன் உன்கண்களுக்கு மறைந்து போய் விட்டதே யொழிய, நாசமாகவில்லை. பிறர் ஜீவிய காலத்தைக் குறைக்கவும் உன் ஜீவிய காலத்தை அதிகப்படுத்தவும் இயலுமென்று எண்ணினாய்; அது உன்னால் ஆகாதது. ஜீவனுக்குக் காலமு மில்லை தேசமு மில்லை. ஒரு நிமிஷ ஜீவியமும், ஆயிரவருஷகாலத்து ஜீவியமும் உன்னுடைய சொந்த ஜீவியமும், உலகில் காணப்பட்டும் காணப்படாது மிருக்கும் ஜீவராசிகளின் ஜீவியமும், சமானமே. ஜீவனை மாற்றவாவது, நாசஞ் செய்யவாவது, ஒருவராலும் இயலாது. ஏனெனில், ஜீவனென்றே சாச்வதம்; மற்றவைகள் அப்படிக் காணப்படுபனவே தவிர வேறில்லை." என்றுசொல்லி விட்டு, வயோதிகர் மறைந்து விட்டார்.

மறுநாட்காலையில், அரசன் அஸ்ஸர்ஹாதன், லெய்லீயையும், மற்றக் கைதிகளையும், விடுவிக்கும்படி உத்தரவளித்தான்.

மூன்றாவது நாளில், தன் குமாரனை அஸ்ஸர்பானி பாலனை யழைத்து, ராஜ்ஜியத்தை அவனிடத்தில் ஒப்புவித்துவிட்டு, தான் கற்றவைகளை மனத்தில் தியானித்துக் கொண்டு, அடவியிற் சென்று காலங்கழிக்கலானான்.

கடைசிக் காலத்தில், தீர்த்த யாத்திரிபோல் வேடம்பூண்டு, கிராமங்களுக்கும் பட்டணங்களுக்குஞ் சென்று, 'எல்லா மனிதர்களுக்கும் ஜீவன் ஒன்றே' என்றும், 'மனிதர்கள் பிறருக்குத் தீங்கு விளைவிக்க எண்ணில் தமக்கே தீங்கு விளைவித்துக் கொள்ளுகிறார்கள்' என்றும் உபந்நியாசங்கள் செய்து காலங் கழித்தான்.

குசிகர் குட்டிக் கதைகள்
படிக்கப் படிக்கத் திகட்டாதன!
இடித்து இடித்துப் புத்திகூறுவன!
வெடிக்க வெடிக்கச் சிரிக்கச்செய்வன!

| | | | |
|---|---|---|---|
| முதல் எட்டுக்கதைகள் | 0 | 10 | 0 |
| இரண்டாம் ,, | 0 | 10 | 0 |
| இரண்டையும் சேர்த்து வாங்கினால் | 1 | 0 | 0 |

பஞ்சாமிர்தம் ஆபீசு - மயிலாப்பூர் - சென்னை.

# கவலமகள் பஞ்சகம்

6-10-1924

1. தூமணி, தோமில் குணமணி, தொன்மா மறைதுலக்கு
நாமணி, நாவலர் நாளும் பணிந்திடும் ஞானமணி,
பாமணி, பாமரர் உள்ளிருள் சீக்கும் பகல்மணி, வெண்
பூமணி, எம்மவர் கண்மணி, நன்மணி, பொன்மணியே!

2. அறியாமை போக்கி, அகந்தையை நீக்கி, அகவிருளை
எறியா விளங்கும் எழில்மணியே! இகற்புந்தியெனும்
வெறியார் கமலம் விரிதர ஓங்குறும் விண்மணியே!
சிறியார் பெரியார் அனைவரும் போற்றும் சிகாமணியே!

3. நானே இவ்வாறுனை ஏத்துகின்றேனோ, நளினமலர்
தானே தவித்திட, என்நாத் தவழ்ந்து தனிஒரு நீ
தேனே நிகர்கவி செப்புகின்றாயோ, தெரிகிலன் யான்;
ஊனே யுயிர்தான் உனையன்றி ஓர்பயன் உற்றிடுமே!

4. யாதாயினுமுண்மை, நீயருள்புந்தித்தெளிவினில், யான்
'தா! தா!' என உனைவேண்டுவ தொன்றுண்டு: தாரணி
மீதா ரையுமினி நாதாஎனுதுறை மேன்மையினை, [யின்
மாதா! எமக்கருள் வாய் இன்று நீதான் மனமகிழ்ந்தே.

5. நீயருள் பாலித்து நீளறிவோங்கிடின், நிர்ப்பயமாய்த்
தாயருள் பாலுண்டு தானே வளர்ந்து தளதளத்த
சேயென யாமும் செழித்திடுவேம், கலிதீர்ந்திடுவேம்,
மாய விலங்குகள் நீங்கிச்சுயேச்சையில் வாழ்குவமே!

(1) தூமணி - பரிசுத்தமான மணி; தோமில் - குற்றமற்ற; மறைதுலக்குநா - பிரமனது நாவு; சீக்குதல் - நீக்குதல்; பகல் - சூரியன். (2) எறியா - எறிந்து, போக்கி; எழில் - அழகு; இகற்புந்தி - வலிமிக்கபுத்தி; வெறி - வாசனை, தேன்; விண்மணி - சூரியன். (3) நளினம் - தாமரை; ஊனேயுயிர் - ஸ்தூல சரீரத்தொடு கூடிய ஆத்மா. (4) தாரணி - பூமி; உறைதல் - தங்கிவாழ்தல். (5) சேய் - குழந்தை.



# பூர்வீக ஆரியரின் நாகரிகம்

(342-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

[ஸ்ரீ காவியகண்ட கணபதி சாஸ்திரிகளின் பிரசங்கச் சுருக்கம்]

பண்டிதர் வி. சுப்பிரமணிய ஐயர்,
திருவண்ணாமலை.



ர்வீக ஆரியர்கள் உத்தர துருவ மண்டலத்திலிருந்து ருக்வேதங்களைப் பாடினாரென்றும், அவர்கள் சூர்யரச்மி பொருந்திய நாடுகளில் வசிக்க எண்ணி அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, எதிர்ப்பட்ட பல தேசத்தார்களுடனும் சண்டை செய்து கொண்டு ஜய சீலராய் இந்திய தேசம் வந்து சேர்ந்தாரென்றும் சொன்னோம்.

.. இவர்கள் உத்தர துருவ மண்டலத்தி லிருந்தபோது சுமார் ஆறாயிரம் வருஷங்களுக்கு முன்னால் என்ன நிலைமையிலிருந்தார்கள்? இவர்களுக்கு உண்ண நல்ல உணவு கிடைத்துச் சுகமாய் ஜீவித்திருந்தார்களா? இவர்களுக்கு உடுக்க உடைகள் கிடைத்தனவா? இவர்கள், சில ஜனங்கள் சொல்லும் மாதிரி, காய் கிழங்குகள் பலாதிகளைப் புசித்துக் காட்டு மிருண்டிகளாயும், அநாகரீகர்களாயுமிருந்தார்களா? இந்தப் பூர்வீக ஆரியர்களுக்கு அந்தக் கால முதல் ஏதாவது மதாபிமான மென்பதொன்றுண்டா என்று ஆராய்ந்து பார்த்தல் முக்கியமானதொரு விஷயமாகும்.

பூர்வீக ஆரியர்கள் உத்தர துருவ மண்டலத்தில் வசித்திருந்தபோது ருக்வேதத்தைக் கண்டு பிடித்தார்களென்று சொல்லுகையில், சில மேனாட்டு நாகரீகர்கள், இவர்கள் சுமார் கி. மு. இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னால் உத்தர துருவ மண்டலத்தில் வசித்து வந்தார்

கள்; ஆகவே, ருக்வேதம் அப்போதுதான் கண்டு பிடித்துச்சொன்னார்கள்; ஆகவே, ருக்வேத காலம் கிறிஸ்துவிற்கு முன் இரண்டாயிர வருஷங்களுக்கு முந்தித்தான் என்று சொல்வது தவறாகுமாதலினால், அத்தவறைப் பரிகரிக்க ருக்வேத காலத்தைப்பற்றி இரண்டொரு அம்சங்களை இங்கு சொல்லி, அக்காலத்திய ஆரியர்களின் சாங்கிக தர்மத்தைப் பற்றி விஸ்தாரமாய் ஆராய்வோம்.

ருக்வேதத்திய மஹரிஷிகளில் விருஷாகபி என்றவர் இடைக்கால ரிஷியென்று சொல்லப்பெறுபவர். இவர் மிருகசிரோ நக்ஷத்திரம் பசக்கிரம்(?) விஷூவத்தி லிருக்கையில் இருந்தவர். இந்தியாவில் சைத்திர விஷூவம், துலா விஷூவங்களாகிய இரண்டு விஷூக்கள் வருஷத்தில் இரண்டு தினங்களில் முறையே கொண்டாடப் பெறுகின்றன. பகல் 30 நாழிகை இரவு முப்பது நாழிகையும் சரியாக வருங்காலமாகிய பங்குனி 10-ந் தேதியும், புரட்டாசி மாதத்திய 10-ந் தேதியும் இந்தியா தேசத்து இரண்டு விஷூவ தினங்களாகின்றன.

இதே போல் உத்தர துருவ மண்டலத்தில் மிருகசீரிஷத்திற்கு இராசி மண்டலத்தில் சூரியன் வந்தபோது விஷூவம் வந்தது. அப்போது விருஷாகபி என்ற மஹரிஷி யிருந்து ருக்வேத சூக்தமொன்று பாடி யிருக்கிறார். ஆகவே, அவர் மிருகசீரிஷ விஷூவத்தில் ஆரம்பித்துப் பாடியதிலிருந்து 72-வருஷங்களுக்கு ஒரு டிகிரியாகக் கணக்குப் பண்ணிப் பார்த்தால், இன்றைக்கு விருஷாகபியின் காலம் ஆறாயிரம் வருஷங்களாகின்றன என்பது தெளிவாகிறது. ருக்வேதத்தில் பத்து மண்டலங்கள் உள்ளன. யஜூர் வேதம், ராசி மண்டலத்தில் கிருத்திகை நக்ஷத்திரம் விஷூவத்தி லிருந்தபோது பாட ஆரம்பித்துப் பரணியில் ருக்வேத காலத்திற்கு மூவாயிரம் வருஷங்களுக்குப் பிறகு முடிக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஆகவே ருக்வேத காலம் இன்றைக்குச் சுமார் ஆறாயிரம் வருஷங்களுக்கு முந்தி யென்று தெளிவாகிறது.

சுமார் ஆறாயிர வருஷங்களுக்கு முந்தி யிருந்த ஆரியர்களின் நாகரீகம், மதம், சங்கம், மரியாதைகள் முதலியன எவ்வாறிருந்தன என்பன ஆராயத்தக்கன.

அக்காலத்திய ரிஷிகள் ஸப்த மரியாதைகள் என்ற ஏழு எல்லைகளை அக்காலத்திய மனிதர்களுக்கென் றேற்படுத்தி, அவற்றின்படி அக்காலத்திய மனிதர்கள் நடந்தே



தீரவேண்டுமென்று கட்டளையிட்டிருந்தனர். இத் தர்ம கட்டளைகளில் முதலாவது 'ஹத்தியா' என்று சொல்லப் பட்ட கொலைத் தொழிலை எவரும் செய்யக்கூடாதென்ற நியமம். ஆறாயிரம் வருஷங்களுக்கு முன்னால் முதல் ஆரியர்களுள் இது அனுஷ்டானத்திலிருந்ததென்று ருக்வேதம் கூறுகிறது. திருட்டுத்தொழில், வியபிசாரம், கட்குடித்தல், பிறரை அநியாயமாய் வைதல் சபித்தல் கொடுஞ் சொற் கூறல், பொய் சொல்லுதல், பிறர்மேல் துரோக சிந்தனை கொள்ளுதல் ஆகிய இந்த ஏழு எல்லைகளை அக்காலத்திலேயே மகரிஷிகள் ஏற்படுத்தி யிருந்தார்கள். ருக்வேதத்தில் மற்றோர் இடத்தில், ஸ்ரீகண்ணுவ ரிஷி என்பவர், மந்திர தரிசனத்தில் இவற்றையே தொகுத்து, மனோ வாக்குக் காயங்களால் செய்யப்படும் பாவங்களைச் செய்யக்கூடாது என்று சொல்லுகிறார். இப்படிப் பலவிடங்களில் ருக்வேதத்தில் மேற்கூறிய ஒழுங்குகளையே அனுவாதம் செய்து பல முறையிற் சொல்லி யிருந்தாலும், அவையெல்லாம் மேற்கூறிய ஏழு வகை எல்லையிலேயே அடங்கியுள்ளன.

**பூர்வ ஆசாரம், வேதகாலத்து ஸ்திரீகள்** :—பிறகு பூர்வ காலத்து ஆரியர்களின் ஆசாரத்தில் ஸ்திரீகள் எப்படி நடத்தப் பெற்றார்கள் என்பதைப்பற்றிக் கவனிப்போம். மந்திர த்ருஷ்டாவான மகரிஷி யொருவர், ருக்வேதத்தில் ஸ்திரீகளைப்பற்றிச் சொல்லும்போது, "வீட்டில் அலங்காரமாயிருப்பவரான அக்கினி, உபஸ்தானத்திற்கும் ஹோமம் செய்வதற்கும் எவ்வளவு உபயோகமா யிருக்கிறாரோ, அதே போல் பாரியை வீட்டுக்கு அலங்காரத்தைச் செய்பவள்." இரண்டுபேர் தம்பதிகள் ஸ்திரீக்குப் பின்னால் புருஷன் போவதுபோல், உஷஸின் பின்னால் சூரியன் வருவதுபோல், என்று சொல்லியிருக்கிறார். இதிலிருந்தும் ஸ்திரீகளை அந்தக் காலத்தில் வெகுமரியாதையாக நடத்தியும் பந்தோபஸ்தாகக் காப்பாற்றியும் வந்தார்கள் அக்காலத்தவர்கள் என்பது ஏற்படுகிறது. ருக்வேதம் 8-வது மண்டலத்தில், 'இவளைமீறி அவனும், அவளைமீறி இவனும் எந்தக்காரியமும் செய்வதில்லை' யென்று கண்டிருக்கிறது. அந்தச் சம்பிரதாயம் ஒவ்வொரு ஹிந்து வீட்டிலும் அனுஷ்டானத்தில், ஸ்திரீ புருஷர்களின் ஒற்றுமையில், இல்லாமல், கிரகஸ்தாசிரம தர்மம் தற்போதும் நடவாதென்பதை நிதர்சனமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

மேற்கூறியபடி ஸ்திரீகளை நடத்தும் விதத்தில் கண்டிருக்கும் அக்னி, உபஸ்தானத்திற்கும் ஹோமத்திற்கும் என்று சொன்னதிலிருந்து, பூர்வீக ஆரியர்கள், அக்கினி உபாஸனையைச் செய்து வந்தவர்களென்பதும், வேறெந்த உபாஸனையையும் அக்காலத்தில் சிறந்ததாகக் கொள்ளவில்லை யென்பதும் நிரூபணமாகின்றது.

வேதகாலக் கல்வி :—ஆறாயிரம் வருஷங்களுக்கு முந்திய ஆரியர்காலத்தில் கல்வி எப்படி யிருந்தது? ஆரிய ஸ்திரீகளுக்கும் கல்வி கற்பிக்கப்பட்டதா? என்பவற்றைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். வேதமந்திர த்ருஷ்டாக்களாகிய ருக்வேத ரிஷிகளின் சங்கியையைக் கணக்கிட்டுப் பார்த்தால், 267-ரிஷிகளின் பெயர்கள் நமக்குக் கிடைக்கின்றன. அவற்றில் ஸ்திரீகளின் சங்கியையை நோக்கினால், மந்திர த்ருஷ்டாக்களாக வேதங்களைக் கண்டுபிடித்த ஸ்திரீரிஷிகளில் பன்னிருவர்கள் காணப்படுகின்றார்கள். இதிலிருந்து, அக்காலத்து ஸ்திரீகளுக்கும், கல்வி கற்கும் சுதந்திரமும் மந்திர த்ருஷ்டாவாகி மேன்மை பெறும் சந்தர்ப்பமும், அக்காலத்திலே கொடுக்கப் பட்டிருந்தனவென்பது புலனாகின்றது. இந்தக் காலத்தில் திருவாய்மொழிப் பிரபந்தம் பாடின ஆழ்வார் பன்னிருவர்களில் ஆண்டாள் என்ற பெண்பால் ஒருத்தியே காணப்பட்டு, அவ்வம்மையின் பாசுரங்கள் போற்றிக் கொண்டாடப்படும் தன்மையைக் காட்டிலும், முற்காலத்தில் பன்னிரண்டு பெண்மணிகளிருந்து ருக்வேத மந்திர த்ருஷ்டாக்களான பெருமையை நோக்கும்போது, ஆதிகாலத்திய பெருமையையே நாம் மிகுதியும் கொண்டாட வேண்டி யிருக்கிறதென்பது தெளிவாய்த் தெரிகிறது.* முற்காலத்திய ருக்வேத மகரிஷிகள் 267-பேர்களில், 'ஸூர்யா' என்ற ஸ்திரீ மட்டும் தற்போது விவாக காலத்தில் ஓதப்பட வேண்டிய சிறந்ததான எல்லா மந்திரங்களையும் செய்து கொடுத்திருக்கிறாள். என்றால், அப்பெண்மணியின் பெருமையைப் பற்றிப் பின்னும் யாது உயர்த்திக் கூறவேண்டும்? அவள் செய்து கொடுத்த மந்திரம்தான் விவாகத்தில் இப்போது முக்கியமாய் உபயோகிக்கத் தகும் மந்திரங்களாம். இன்னும், 'ஆம்பிரிணி' என்ற மற்றொரு மந்திர த்ருஷ்டா செய்திருக்கும் 'ஆம்பிரிணி ஸூக்தம்' என்னும் மந்திரங்கள், 'தேவிதிரிசதி' என்ற பாராயண கிரந்தத்தில் அனுபந்தமாக அப்படியப்படியே காணப்படும். இந்த ஸூக்தத்தை ஆம்பிரிணியென்பவள், உலக மாதாவாகிய பராதேவதை என்ற ஸ்தானத்திலிலே மகா ஞானியாக விருந்து சொல்லிய ஸூக்தத்தின் காம்பீரியத்தையும் அழகையும் சாதாரணமாய் வர்ணிக்க முடியாது. அந்த ஸூக்தத்தின் பெருமை, அவ்வம்மை பிராண சக்தியுடன் லயமாகி, பரா என்ற ஞானத்திலிருந்து சொன்னமையால், அது மிகுதியும் போற்றத் தக்கதா யிருக்கிறது. 'சிவோஹம்' என்று சொல்லிக் கொண்ட ஸ்ரீ சங்கரர், திருவிருத்தம் சொல்லிய ஸ்ரீ ஆண்டாளம்மை, ஸ்ரீ பகவத்கீதையுபதேசம் செய்த ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா முதலியோர்களைக்கூட இந்த அம்மைக்கு நிகராக எப்படிச்சொல்லலாம்? இந்த அம்மை தனது அந்தராத்துமாவான பிராண சக்தியின் பிரேரணையினாலே, 'நானே பராதேவதையாகி யான் இங்கு மிருப்பேன், எங்கு மிருப்பேன், எவன் என் சொல்லைக் கேட்கவில்லையோ பூஜிக்க வில்லையோ அவன் நாசமாய்ப் போவான்' என்று தைரியமாய்ச் சொல்லுகிற உள்ளம்போல் மேற்கூறியவர்கள் படைக்கவில்லை என்பதிலிருந்து, இந்த அம்மையின் பிராபல்யம் இப்படிப் பட்டதென விளங்கா நிற்கின்றது. இதிலிருந்து ஆறாயிரம் வருஷகாலத்திற்கு முன்னால், ஆரியர்களின் வம்சத்தில் வந்துள்ள நாரீமணிகள் எவ்வளவு ஞானவான்களாயும் படித்தவர்களாயு மிருந்தார்களென்பதும், அக்காலத்தில் ஸ்திரீவித்தை இன்ன தன்மையிலிருந்ததென்பதும், அக்காலத்துச் சபைகளின் நாகரீகம் இன்னபடி யிருந்ததென்பதும் தெளிவாகின்றன. இப்படிப்பட்ட கல்வியை ஸ்திரீகள் உடையவர்களாக விருந்ததாகக் கிடைக்கும் வேத ஸம்பந்தமான ஆதாரங்களிலிருந்தும், ஸ்திரீகளுக்கும் உபநயனம், அந்தக் காலத்திலிருக்க வேண்டுமென்றும் தெரிகிறது.

* 267-ல் 12 ; 12-ல் ஒன்று—ப-ம் ப-ர்.




## திருக்குறள் நானூறு

பல பண்டிதர்களும் அறிவாளர்களும் கூடிச் சாமானிய ஜனங்களுக்காகத் திரட்டியுதவிய நூல்; சிறிய எளிய இனிய உரையுடன் விரைவில் வெளிவரும் - விலை நாலணாதான். இப்பொழுதே ஆர்டர் செய்யுங்கள்.

பஞ்சாமிர்தம் ஆபீசு - மயிலாப்பூர்.

# சர்வ சமய சமரச தர்சநி

(492-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பின்வருவன, மகாத்மா காந்தி உபவாசம் நீங்கிய பொழுது ஓதக்கேட்டு உவந்தவற்றுள் சிலவாம்:—

36. "ஸர்வ ஜீவ தயாபரனும் உலக பிதாவும் ரக்ஷகருமான ஆண்டவனைத் தொழுவதால் மாத்திரந்தான் மனித வர்க்கம் உஜ்ஜீவிக்கும்; ஆண்டவனுடைய கிருபைக்குப் பாத்திரரானவர்களின் வழியே சரியான வழியாகையால், அந்த வழியை எங்களுக்கு ஆண்டவன் காட்ட வேண்டும். தப்பான வழியில் நடந்து, ஆண்டவன் அப்பிரீதிக்கு ஆளானவரின் வழி வேண்டாம்."

37. "மற்றவர்களுடைய துக்கங்களை யறிந்து, தனது துக்கம்போல் அதைப் பாவித்து, ஆடம்பரம் தற்புகழ்ச்சி முதலியன இல்லாமல், மற்றவர்களுக்குத் தொண்டுபுரியத் தயாரா யிருப்பவர்தான் உண்மையான வைஷ்ணவர்கள். அத்தகையோர், எவரிடத்திலும் மரியாதையாக நடந்து கொண்டு, பேச்சிலும் காரியத்திலும் சுத்தமாயிருப்பர். அப்படிப்பட்ட உத்தமரைப் பெற்றெடுக்கும் தாயின் பாக்கியமே பாக்கியம். ஒவ்வொரு ஸ்திரீயையும் தனது தாய் போல் பாவிக்கும் சுபாவமுடையவர்களாக அவர்கள் இருப்பார்கள். பொய் சொல்லி வாயை அசுத்தப்படுத்திக் கொள்ள மாட்டார்கள். மற்றவர்களுடைய சொத்துக்கு ஆசைப்பட மாட்டார்கள். ஒன்றிலும் பற்றிராது. ராம நாமமே அவருக்கு ஆனந்தம். அவரிடத்திலேயே பரமாத்மா நிறைந்திருக்கிறார். ஆசை, கோபம் முதலியவற்றிலிருந்து விடுபட்டவரே உண்மையான வைஷ்ணவர்."

38. "ஓ தெய்வமே, எனது கௌரவமானது உன் கைவசத்தி லிருக்கின்றது. நின்னை யன்றி எனக்கு வேறு கதி எதுவுமில்லை. ஏனென்னில், நீ தான் அநாத ரக்ஷகன். பாவிகளுடைய அழுகையைக் கேட்பதாக நீ வாக்களித்திருக்கிறாய். நான் நெடுநாட் பாவி. அஞ்ஞான மென்னும் இந்த சாகரத்தைக் கடக்க எனக்கு உதவுவாயாக! மானிடரது பாவத்தையும் துன்பங்களையும் நீக்குதல் நின் கடனல்லவோ? துளசிதாஸிடம் கிருபை காட்டி, அவனை நினது பக்தனாகச் செய்வாயாக!"







ருஷ்ய மகான் லியோ டால்ஸ்டாய்

(5[illegible]-ம் பக்கத்தைப் பார்க்க)

# இலங்கையும் இலங்கையரும்*

(452-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

Rev. F. கிங்ஸ்பேரி, B. A., சென்னை.

## இலங்கைத் தமிழர்.

இலங்கையி லுள்ள தமிழர் இருவகைப் படுவர்:—(1) இலங்கையே தமக்குச் சொந்த நாடாயுள்ளவர். (2) வியாபாரம், உத்தியோகம் முதலிய அலுவல் நிமித்தம் அங்கே தற்காலம் குடியிருந்து, பின் தங்கள் சொந்த நாடாகிய இந்தியாவுக்குத் திரும்பி விடுவோர்.

மேற்கூறிய இருவகுப்பாருள், இரண்டாம் வகுப்பினர், தேயிலைத் தோட்டம், காப்பித் தோட்டம், இறப்பர் (Rubber) தோட்டம் முதலியவைகளில் வேலை செய்யும் பல்லாயிரவரான கூலியாட்கள்; நாகபட்டணம, தொண்டி, கீழைக்கரை முதலிய ஊர்களிலிருந்து வந்து வியாபாரம் செய்யும் சோனகர், நாட்டுக்கோட்டைச் செட்டிகள் முதலானவர்களான முதல் வகுப்பினரே இலங்கைத் தமிழர் என்று பெயர் பெறுவர்.

வடமாகாணம் கீழ் மாகாணங்களிலே யாழ்ப்பாணம், திரிகோணமலை, மட்டுக்களப்பு முதலிய இடங்களே இவர்களுக்கு உறைவிடம். மணிமேகலை என்னும் நூலிலே மணிபல்லவம் என்று சொல்லப்படுவது யாழ்ப்பாணமே என்பது பலர் துணிபு. யாழ்ப்பாணம் இலங்கைத் தீவின் வடபாகத்தி லுள்ளது. இது முன்னே மனுஷர் வசியாத ஒரு மணல் திடராயிருந்ததாம். ஒரு காலத்திற் பாண்டி நாட்டிலிருந்து ஓர் யாழ்ப்பாடி கண்டி நகருக்குச் சென்று, அங்கே இராஜ சமுகத்தில் யாழ் வாசித்தானாம். அவனுக்குப் பரிசாக வடக்கே யிருந்த

* The blocks illustrating this article were kindly lent by the Secretary, C. L. S. Madras. *Ed P-M.*





மணல்திடரை அரசன் கொடுக்க, யாழ்ப்பாடி மதுரைக்குத் திரும்பிவந்து, பாண்டியனுடைய உத்தரவினால் பல்லாயிரவரைக் கூட்டிக்கொண்டு வந்து, கண்டியரசன் தனக்குக் கொடுத்த மணல்திடரிலே குடியேற்றி, அதற்கு யாழ்ப்பாணம் எனப் பெயரிட்டானாம். இது பாரம்பரியம். யாழ்ப்பாணத்திலே யுள்ள தமிழரது முன்னோர், சேர சோழ பாண்டியர் நாடுகளி லிருந்து சென்று குடியேறினவர்கள் என்பது நிச்சயம். அதாவது, தஞ்சை, மதுரை திருநெல்வேலி, திருவாழ்கோடு, மலையாளம் என்னும் ஜில்லாக்களி



ஒரு சிங்களவப் பையன்



கண்டிநகரம்



விருந்து சென்றவர்களே. யாழ்ப்பாணத்துத் தமிழர் ஹிந்துக்களே யாயினும், அவர்களில் வைஷ்ணவர் யாரும் இல்லை; எல்லாரும் சிவ சமயத்தவரே. விஷ்ணுகோயில் ஒன்று உண்டு. ஆயினும் அருச்சகர் சிவப்பிராமணராம். பிராமணர்கள் வெகு சிலரே. இவர்களும், அருச்சகர்



பேய்க்கூத்தாடுவோர்



பேய்க்கூத்தர் பொய்முகம்

களாயும் புரோகிதர்களாயும் உள்ளவர்களே. வேறு பிராமணரைக் காண்பது அரிது. பிராமணர்கள் மட்டுமே பூணூல் தரிப்பார்கள். செட்டிகள், தட்டார், தச்சர், கொல்லர் ஒருவரும் பூணூல் தரிப்பது இல்லை. தென்னிந்தியாவிற் காணப்படும் நூற்றுக் கணக்காம் ஜாதிகள் எல்லாம் யாழ்ப்பாணத்திலே யில்லை, முக்காலே மூன்று வீசம் பங்கு வேளாளராம். பிராமணர் வெகுசிலர். செட்டிகளும் வேளாளருக் குட்படுவர். தச்சர், கொல்லர், தட்டார், குயவர், பறையர் என்பவர்களும் உண்டு நளவர் என்று ஒரு சாதியாருண்டு. இவர்கள் எல்லாரும் மரமேறிகள். பறையரிலும் தாழ்ந்தவர்களாய் மதிக்கப்படுகிறார்கள். ஒரு காலத்தில் அடிமைகளாயிருந்த வேளாளருக்குக் கோவியர் என்று பெயர். கோவியர் வேளாளரல்லர், இடையரே என்று சொல்பவர்களுமுண்டு.

திருக்கோணமலை, திருக்கேதீச்சரம் என்னும் இரண்டும் (தேவாரப்) பாடல் பெற்ற சிவஸ்தலங்கள். தெற்கேயுள்ள கதிர்காமம், திருப்புகழ் பெற்ற சுப்பிரமணிய ஸ்தலம்.



கண்டித்தலைவர்களில் ஒருவன்

யாழ்ப்பாணம் கிழக்கு வடக்கு மேற்கு திசைகளிற் கடலாலும், தெற்கில் காட்டினாலுஞ் சூழப்பட்டிருப்பதினால், யாழ்ப்பாணத்துத் தமிழர் வேறு மனுஷரோடு கலவாமல், கடந்த ஈராயிரம் வருஷம் வாழ்ந்து வந்தனர். ஆகவே சில விஷயங்களில் அவர்கள் நடை உடை பாவனைகள்



நூதனம் போலத் தோன்றுமாயினும், உள்ளபடி யோசிக்கின், சேர சோழ பாண்டியர் காலத்து நடையுடை பாவனைகளே யாழ்ப்பாணத்தாரிடம் காணப்படுபவைகள்



திரிகோணமலை

என்பது பொதுவாய்ச் சரி என்னலாம்; முற்றுஞ் சரி யென்னல் முடியாது. போர்த்துக்கீசர் உலாந்தர் அங்கிலேயர் அரசாட்சிகளினூலே எத்தனையோ மாறுபாடுகள் நுழைந்திருக்கின்றன.

யாழ்ப்பாணத்துத் தமிழ்—தாங்கள் பேசும் தமிழ் மிகத் திருந்திய தமிழ் என்பது யாழ்ப்பாணத்தார் பலருக்கு எண்ணம். தமிழ் முற்றுந் திருத்தமாகப் பேசப்படும் இடம் எங்குமேயில்லை. நாட்டுப்புறத்திலே "எனக்கு" "உனக்கு" எனச் சொல்லத் தெரியாமல் "நேக்கு" "நோக்கு" என்பதை எடுத்துச் சொல்லல் நியாயமல்லவாயினும், வாழைப்பழத்தை 'வாளைப்பளம்' என்று பாமரர் மட்டுமல்ல, பண்டிதருமே சொல்லுவர். ஆயினும் யாழ்ப்பாணத்தாரிடம் இந்தியத் தமிழர் காணக்கூடிய சில திருத்தங்களுண்டு. பாஷை விஷயத்தில், (1) ரகர றகர பேதங்களைக் கல்லாதவரும் மிக நுட்பமாய் உச்சரிப்பார்கள். (2) றகர ஒற்று, ஆங்கிலத்தில் t போல உச்சரிக்கப்படும். (3) இகர, ஈகாரங்கள், ட், ண், ர், ள், ற-ன என்னும் எழுத்துக்களுக்கு முன் குற்றியலுகரம்போல உச்சரிக்கப்படும். (4) அப்படியே எகர, ஏகாரங்கள் க், ங், ட், ண், ப், ம், வ், ழ், ள், ற-ன என்னும் எழுத்துக்களுக்கு முன்னே ஒகர, ஓகாரத்தைச் சிறிது நாடும். (5) இந்தியாவிலே, அகர, இகர மென்னும் இரண்டு சுட்டெழுத்தே தற்காலத்தில் வழக்கிலுண்டு. யாழ்ப்பாணத்திலோ உகரமும் வழங்குகிறது.

இங்கே..................நானிருக்குமிடம்

உங்கே..................நீயிருக்குமிடம்

அங்கே..................அவனிருக்குமிடம்

(6) ஏகாரம் ஈற்றிலே வினாவெழுத்தாக இன்னும் உபயோகிக்கப்பட்டு வருகிறது.

(உ-ம்) கந்தன் உன் தம்பியே? (தம்பியோ)—உங்கே முருகன் வந்தானே? (வந்தானோ)

யாழ்ப்பாணத்துத் தமிழ் சுத்தத் தமிழோ?—சுத்தத் தமிழ் என்பது வேறு பாஷைச் சொற்கள் சேராத தனித்தமிழ். அப்படிப்பட்ட தமிழ் இப்போது எங்கும் வழக்கிலில்லை. சங்கத்து நூல்களிலும், நூற்றுக்கு நாலைந்து சொற்கள் ஸம்ஸ்கிருதச் சொற்களாயிருக்கும். ஆயினும், யாழ்ப்பாணத்துத் தமிழ் இந்தியத் தமிழைப்போல அவ்வளவதி



கம் சமஸ்கிருத பதங்கள் கலந்ததல்ல. உள்ள வடமொழிகளும், வடமொழிபோல உச்சரிக்கப்படாமல், நற்றமிழ் மொழிகள் போலவே உச்சரிக்கப்படும்.

ராஜா என்பதை இராசா என்றும், குரு (Guru) என்பதைக் Kuru என்றும், இவை போலவே பிறவற்றையும் உச்சரிப்பார்கள்.

(இன்னும் வரும்).

## இயற்கை ஆராய்ச்சி.

(406-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இரட்டைப் பிள்ளைகள்—ஒரே தாய் வயிற்றில் ஏக காலத்தில் பிறக்கும் இரட்டைக் குழந்தைகள் ஒருவரை ஒருவர் நெருங்கி ஒத்திருப்பதைப் பலரறிவர். ஆர்மடில்லோ என்னும் நகமிருகம் பிரசவம் தோறும் நாலு குட்டிகளைப் பெறும். இதைப் பல ஆண்டுகளாகக் கவனித்தவர் ஒருவர், இந்நான்கு குட்டிகளும் ஒரே பீஜத்திலிருந்து ஜனித்து ஒரே பைக்குள் வளரின், ஒரே பாலாக


## The "Hindu Nesan"

(THE LEADING TAMIL WEEKLY.)

Commands a decent circulation-stands as a best medium for advertising.

News of varied interest a special feature.

"இந்து நேசன்"

வாரப்பதிப்பு-சந்தா விவரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-வருஷத்திற்கு | ... | ரூ. | 6 | 0 | 0 |
| 6-மாதத்திற்கு | ... | ,, | 3 | 8 | 0 |
| 3-மாதத்திற்கு | ... | ,, | 1 | 12 | 0 |

மலாய், மோரீஸ், நெட்டால், முதலிய வெளிநாடுகளுக்கு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-வருஷத்திற்கு | ... | ,, | 10 | 0 | 0 |
| தனிப்பிரதி | ... | ,, | 0 | 2 | 0 |

*For particulars apply to:*

THE MANAGER

THE "HINDU NESAN"

65, Armenian Street,

MADRAS.

வே—அதாவது, நான்கும் ஆணாக, அல்லது நான்கும் பெண்ணாக— பிறக்கும் என்றும்; வெவ்வேறு பீஜங்களிலிருந்து ஜனித்து வெவ்வேறு பைகளுக்குள் வளரின், சில ஆணாகவும் சில பெண்ணாகவும் அதே பிரசவத்தில் பிறக்கலாமென்றும் கூறுகிறார். இந்த நியாயம் மனிதப் பிறவிக்கும் பொருந்துமாம். கால்டன் என்னும் அங்கிலேய சாஸ்திரஞ்ஞர், மனிதப்பிறப்பின் விநோதங்களை நன்கு ஆராய்ந்தவர். தலைமயிர் கண்களின் நிறம், உயரம், கனம், தேகபலம், சுபாவம், குரல், கையெழுத்து முதலிய அம்சங்களில் நெருங்கிய ஒற்றுமையையுடைய எண்பது இரட்டைப் பிறவிகளை மனிதர்க்குள் இவர் கவனித்து ஆராய்ச்சி செய்ததன் பலனாக, அதிசயமான சில விஷயங்களைக் கண்டறிந்தார்: ஒரு திருஷ்டாந்தத்தில், எழுதிய இரட்டையரே தங்களுள் யாரெழுதியது என்பதைப் பின்னால் அறியாத அளவு, கையெழுத்து ஒத்திருந்ததாம்; இரண்டு இரட்டைப் பெண்கள், ஒருத்திக்குப் பின் ஒருத்தியாக ஸங்கீதம் பயிலுவோர், தங்கள் உபாத்தியாயரை ஏமாற்றி, ஒருத்தி மற்றொருத்தியாக நடித்து, இரண்டு பாடங்களையும் ஒருத்தியே சில சமயங்களில் கற்பதுண்டாம்; பள்ளிக்கூட உபாத்தியாயர் ஒருவர், தன் மாணாக்கராயிருந்த இரட்டையருள் ஒருவன் தப்புச் செய்தால், இனமாறி ஏமாந்து போகாத வண்ணம், இருவரையுமே பிரம்பால் அடித்து வந்தாராம்; ஒன்பது திருஷ்டாந்தங்களில், இரட்டை


**SRINIVASA VARADACHARI & Co.,**

*Printers & Booksellers,*

**MOUNTROAD, MADRAS.**

**தமிழ்ப் பிரசுரங்கள்.**

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. V. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M. A. விலை அணா 10.

2. போஜ சரித்திரம்.—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B. A., B. L., ஸப்ஜட்ஜ், நாகபட்டணம். விலை அணா 10.

3. ராஜராஜசோழன் I.—ஆசிரியர் P. V. ஜகதீச ஐயர் அவர்கள், R. ரங்காசாரியாரவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணா 8.

4. இட்டார்க்கு இட்டபலன்.—ஆசிரியர் மிஸ்டர் J. பொன்னுஸாமி ராவ். விலை அணா 10.


(அடுத்த பக்கம் பார்க்க.)



யருள் ஒருவர், தன் பிரதிபிம்பத்தைக் கண்ணாடியில் கண்டு மற்றவரென மயங்கிப் பேசினதுண்டாம்; நாலைந்து திருஷ்டாந்தங்களில், விவாகமுகூர்த்த காலத்தில், கலியாணம் யாருக்கென்று தெரியாமல் திகைத்ததுண்டாம்; இம்மட்டோ: சரீர சுபாவ ஒற்றுமையினால், இருவருக்கும் ஒரே காலத்தில் ஒரே நோய் வருவதுண்டாம்: ஒரு திருஷ்டாந்தத்தில், இரட்டையர் இருவர்க்கும், 23 ஆவது வயதில் பல்வலி யுண்டாகி, இருவருக்கும் அதே பல்லைப் பிடுங்கவேண்டியதாயிற்றாம்! மற்றோர் இரட்டையர், நெருங்கிய காலத்தில் இருவரும் மூத்திர நோயினால் இறந்தனராம். சில வேளை, இவ்வொற்றுமை அதிநுட்பமாயிருக்கும்: உதாரணமாக, A.—B. என்ற இரட்டைப் பிள்ளைகள், ஒரு காலத்தில், A. ஸ்காத்லாந்திலும், B. இங்கிலாந்திலும் இருந்தனர். அப்பொழுது, தன்னுடன் பிறந்த B.க்கு இனாம் கொடுக்க வெண்ணி, A. என்பவன் ஸ்காத்லாந்தில் தன் மனத்துக்குப் பிடித்த இரண்டு பளிக்குப் பானபாத்திரங்களை ஒரு நாள் வாங்கினான்; அதே தினத்தன்று அதே வேளையில், B. என்பவனும் A. க்கு இனாம் கொடுக்க எண்ணி, அதே மாதிரியான இரண்டு பளிக்குப்பான பாத்திரங்கள், தன் மனத்துக்குப் பிடித்தவற்றை, இங்கிலாந்திலே வாங்கினானாம்! இடம் பயிற்சிகளால் விளையும் வித்தியாசங்களையும் இயற்கைக்குணம் வெகுவாய் வென்று விடும் என்பது இவர் கண்ட தத்துவம். —மா.


5. திலகவதி.—சகோதரி V. பாலம்மாள் எழுதியது. ராவ் ஸாஹெப், S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூடியது. விலை ரூ. 1–4–0.

6. தமிழ் வசன லக்ஷணம்.—G. தாமோதர முதலியார், B. A. எழுதியது. விலை அணா 12.

7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1-6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

8. இரகுவம்சம் இரண்டாம் பாகம்.—(7-12 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

9. சுகாதாரபோதினி.—(மூன்றாவது பாரத்திற்கு) K. வரதராஜ ராவ் இயற்றியது. விலை அணா 8.

## மதிப்புரை.

(469-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

30. சாரணர் விதிகளும் வாக்குறுதிகளும்—(R. லோகநாதன், 3, முத்தையா நாயக்கர் தெரு, புரசைபாக்கம், சென்னை. விலை அணா 6) தற்காலத்தில் நம் நாட்டுச் சிறுவர்களை உண்மை, அன்பு, ஆண்மை முதலிய நற்குணங்கள் நிறைந்த நல்ல பிரஜைகளாக்கும்படி முயலும் சாரணர் இயக்கம் (Boy Scout Movement) பலரும் அறிந்த விஷயம். சாரணர் சில விதிகளைக் கவனிக்கவும் சில வாக்குத்தத்தங்களைப் புரியவும் கடமைப்பட்டுளர். அவை இன்னவெனக் கூறுதலே இப்புத்தகத்தின் நோக்கம். நூலாசிரியர், இந்திய சரித்திரத்தினின்றும், சந்தர்ப்பத்திற் கேற்றவாறு, பல உதாரணங்களை ஆங்காங்கு எடுத்துக் கூறுகிறார். சுருங்கச்சொல்லின், சாரணவிதிகள் நம்பிக்கைக்குப் பாத்திரனாகுதல், விசுவாசம், உதவிபுரிதல், சகோதரத்தன்மையுடன் ஒழுகுதல், விநயம், இரக்கம், பணிவு, முகமலர்ச்சி, செட்டு, தூய்மை என்ற பத்து அங்கங்களுள் அடங்கும். இப்புத்தகம் இவ்வியக்கத்தின் நோக்கங்களை வற்புறுத்துவதால், பலர்க்குப் பயன்படும். —பா.

---

(1) முத்துமீனாக்ஷி (2) குசிகர் குட்டிக் கதைகள்— "லக்ஷ்மி" பத்திரிகை எழுதுவதாவது:—

அச்சுப் பொறிகள் மலிந்து காகித வர்த்தகம் பெருகி வரும் இக்காலத்தில் நாவல்களும் புற்றீசல்கள்போல் தோன்றத் தொடங்கி விட்டன. மக்களின் ஆசாரங்கள் சீர்பெறவும் பாஷை வளர்ச்சியுறவும் நாவல் பெரிதும் உதவிபுரியும் என்பது உண்மையே. ஆனால் தடியெடுத்தோரெல்லாம் வேட்டைக்காரர் என்றபடி தமிழுலகத்திலே இறகோட்டிகளெல்லாம் நாவல் ஆசிரியர்களாய் முன் வந்திருப்பதால், தற்கால நாவல்கள் பெரும்பாலனவற்றால் விளையும் தீமைகள் அற்ப சொற்பமன்று. ரகர றகரங்களைச் சரியாய் வழங்க அறியாதவர்களும் தமிழ் எழுத்தாளர்களாகத் துணிவு கொள்வதும் தமிழ்மொழியின் சனிதிசை என்றே கூறவேண்டும். ஒன்றோ இரண்டோ விட புருஷர்கள்,— இரண்டோ மூன்றோ நாணமற்ற கன்னியர்கள், ஒரு துப்பறியும் கோவிந்தன் அல்லது கோபாலன், ஒரு ஆகாவழி ஜமீன்தார்—தமிழ் நாவல் பூர்த்தியாகி விடுகிறது. தற்காலத்திய துப்பறியும் நாவல்களெல்லாம் பிற நாட்டுப் பழக்க வழக்கங்களையும் மனோபாவங்களையும் தமிழகத்தில் பரப்பித் தமிழ்மக்களை அநாசாரப் படுகுழியில் தலைகீழாக வீழ்த்துகின்றன. நாவல்களின் தன்மையின்னதென்றறியாத தமிழ் மக்களும் இந்த நாவல் புற்றீசல்களைக் கோழி விழுங்குவதுபோல் விழுங்கித் திருப்தியடைகின்றனர். (அடுத்த பக்கம் பார்க்க.)





31. உலக இரகஸ்யம்—(ஸ்ரீ. T. G. கிருஷ்ணசாமி பிள்ளை தொகுத்தது—சுதேசமித்ரன் பிரான்சு பிரஸ், சென்னை; விலை 1 ரூ) இப்புத்தகத்தில் சாஸ்திரஞானம், வைத்தியம், பூமியில் நடைபெறும் அதிசயங்கள், இவற்றைப்பற்றிய விஷயங்களும், துண்டு வியாசங்களும் திரட்டப்பட்டுள்ளன. நூலாசிரியர் இந்நூலை "ஆடிமாதக் காற்றில் அரை வயிற்றுக்குக்கூட உணவின்றி, கீழ்நழுவும் அரைஞாணைத் தூக்கித் தூக்கி மேலிழுத்துக்கொண்டு, மூன்றுபடி நெல்லுக்கு முழுப்பொழுதும் உழைத்து நம்மை ரக்ஷிக்கும் பறையர், பள்ளர்" முதலியோர்க்கு அர்ப்பணம் செய்திருப்பது கவனிக்கற் பாலது. பொழுதுபோக்கு நேரத்தில் இப்புத்தகம் விநோதத்தையும் அறிவையும் ஒருங்கே தரக்கூடியது. அடங்கியுள்ள பல கட்டுரைகளில் "பஞ்சாமிர்தத்தை"ப்பற்றியும் ஒன்றுளது. அடுத்த பதிப்பில் விஷய சூசிகை ஒன்று சேர்த்தல் நலமெனத் தோன்றுகிறது. —பா.

32. பாரதபாட புத்தகம்-பாலபோதினி—(ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி சர்மா எழுதியது-விலை 2 அணா-"ஞானபோதினி" பிரசுராலயம், 33, இருளப்பன் வீதி, சாவுகார்பேட்டை, சென்னை) புதுமுறைப்படி தமிழ் எழுத்துக்களைக் கற்கப்புகும் சிறுவர்க்கு இது பயன்படும். தேசபக்தியை நினைப்பூட்டும் வசனங்கள் பலவுள.

33. இஸ்லாம்—(தாருல் இஸ்லாம் பத்திராசிரியர் பா. தாவுத்ஷா சாஹிப் பகதூர், பி.ஏ. எழுதியது-விலை 14 அணா-

---

இங்கிலையில் அத்தி பூத்ததுபோல் ஸ்ரீமாந் அ. மாதவையர் ஒருவர் தமிழுலகத்தில் வாழ்வது, பெரும் ஆறுதலேயாகும். தமிழுலகத்தின் 'நாவல்' பஞ்சத்தை முதன்முதல் நீக்கியவர்கள், பத்மாவதி ஆசிரியரான ஸ்ரீமாதவையரும், கமலாம்பாள் ஆசிரியரான காலஞ்சென்ற ராஜமையருமே ஆவர். அதிர்ஷ்டவசமாய், பத்மாவதி நாலைந்து பதிப்பு வெளியாகிவிட்டது. மாதவையரவர்களும் அவ்வொரு நூலுடன் நின்றுவிடாமல், முத்துமீனாக்ஷி, குசிகர் குட்டிக் கதைகள் ஆகிய நூல்களையும் தமிழகத்தாருக்குதவி யருளியிருக்கின்றனர்.

கதை கூறுவது ஒரு தனிக்கலையே. அக்கலை இயல்பாகவே அமையும் பெற்றியது. ஸ்ரீமான் அ. மாதவையரவர்களின் கதைகளை வாசிக்கும் பொழுது உண்டாகும் மன எழுச்சி இணையற்றதே. முத்து மீனாக்ஷி ஒரு பிராமணப்பெண்ணின் சுயசரிதை. இந்திய விதவைகளின் கஷ்டங்களெல்லாம் இதில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. எத்தகைய கல்நெஞ்சனும் மனம் உருகிக் கண்ணீர் விடுவான். குசிகர் குட்டிக் கதைகள் எல்லாம் ஆசாரச்சீர்திருத்தச் சார்பானவை. ஒவ்வொரு கதையிலும்

(அடுத்த பக்கம் பார்க்க.)

82
m211 N24PM 207650

தபாற்பெட்டி நெ. 15-சென்னை) இந்நூலாசாரியர் தன் மதத்தைப் பற்றி இதுவரை எழுதியுள்ள சில புஸ்தகங்களின் (466-ம் பக்கம் நெ. 21-22-23 பார்க்க) தொடர்ச்சியாகும் இந்நூல். இது முஸ்லிம்களின் அனுஷ்டானங்களைத் தெளிவாய்ப் படங்களுடன் விளக்குவது. முஸ்லிம்களுக்கு மட்டுமேயன்றி, இஸ்லாம் மார்க்கத்தைப்பற்றி அறிய விரும்பும் தமிழர் பிறர்க்கும் பயன்படும். "ஏக தெய்வக்கொள்கையும் ஏக சகோதரத்துவத் தன்மையுமே இஸ்லாம் மார்க்கம் அதிகம் எடுத்தோதுகின்றது" என்பதைப் பலர் அறிந்திருப்பர். "சாந்தி"யே இம்மதத்தின் மெய்ப்பண்பென்றும், "எவனொருவன் சாந்தியுடன் நடந்து கொள்கிறானோ அவனே இஸ்லாத்துக்குரியவன்." என்றும் கூறியிருப்பது, இஸ்லாம் மதத்தையும் முஸ்லிம்களையும்பற்றி அநுபவசித்தியாக வழங்கும் பொதுஜனஅபிப்பிராயம் தவறானது என்பதை விளக்கும். உண்மைக்கு நேர் விரோதமாகப் பொது நம்பிக்கை இருப்பது விந்தையே. 'இவ்வுலகத்திலுள்ள மற்ற வேதங்களெல்லாம் நாளடைவில் மாறுதல்கள் அடைந்துள; குர் ஆன் மட்டும் 13 நூற்றாண்டுகளாக மாறுபடவில்லை' என்னும் கூற்றின் முற்பகுதி அநாவசியம்; அது மெய்யன்று என்பாரும் பலருளர். —மா.

ஒவ்வொரு அரிய படிப்பினையும் அமைந்துள்ளது. கதை முழுதும் மாதவ மணம் (மாதவய்யர் நாவல்களுக்குள்ள ஒரு தனியழகு) நன்கு வீசப்பெற்றுள்ளது. தமிழ் நடையின் சிறப்பை வர்ணிக்கவும் வேண்டுமா. அச்சுப் பிழையோ இலக்கண வழுவோ. மருந்துக்கும் காணக் கிடைக்கவில்லை. தமிழ் நடை கற்க விரும்பும் மாணவர்களுக்கு இந்நூல்களை விடச் சிறந்த ஆசிரியன் இல்லவே இல்லை. இந்நூல்களின் ஒவ்வொரு பிரதி நமது தமிழக இல்லங்களில் இடம் பெறுமாயின் தென்னிந்தியாவைக் கவிந்திருக்கும் அநாசார இருள் இருந்த இடம் தெரியாதொழியுமென்பது திண்ணம். முத்து மீனாக்ஷி விலை அணா 8. குசிகர் குட்டிக் கதைகள் முதல் எட்டு, அணா 10. இரண்டாம் எட்டு அணா 10. இரண்டையும் சேர்ந்து வாங்கினால் ரூ 1 தான். வேண்டுவோர் 'பஞ்சாமிர்தம்' ஆபீஸ், மயிலாப்பூர், சென்னை. என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

The Authors' Press & Publishing-House
ED. ELLIOT RD. MYLAPORE

தானே தானும்



தக்கடி தங்கம்

# 1. வடிவழகு




கடி தான் நாடறிந்த பட்டப் பெயர்; இட்ட பெயர், தங்கம்; மேலே குறித்த முற்றுமோனை முழுப்பெயர், தனக்குத்தானே அவன் கொடுத்துக்கொண்டது.

முதல் முதல் நான் அவனைக் காணும்போது, அவனுக்கு வயது நாற்பதிருக்கும். உயரம், சுமார் நாலரை அடி; இடுப்பைச்சுற்றி நாலரைக்குக் குறைவேயில்லை: சாப்பிடுமுன் 4½ என்றும், சாப்பிட்டான பின்பு 5½ என்றும் சொன்னால், அதிகம் பொய்யாகாது. ஆளே குள்ளம்; கை கால்களோ, ஆள் உள்ள ஆகிருதிக்குமே போதாதபடி, மிகக் குட்டையாயிருந்தன. அவன் கைகள், ரூபாய்க்கு 2 படி அரிசி விற்கும்போது மாதம் 8 ரூபாய்க்குச் சாப்பாடு போடும் ஹோட்டல் நெய்க்கரண்டியைப் போலிருக்கும்; பாதங்கள், சீன தேசத்துச் சீமாட்டியின் சிற்றடிகளையே ஒக்கும். தலை, சிறுத்துச் சூம்பித் தேரையுண்ட தேங்காய் போன்றிருக்கும். தலையில் செம்பாதியில்லை, முக்கால்வாசிக்குமேல் தாடைகளின் எல்லையே. தாடைகளின் பெருமைக்கு முக்கிய காரணம், ஓய்வொழிவின்றிப் பாடுபடும் தாடை எலும்புகள் மாத்திரமல்ல; இரட்டை வரிசையாகப் பெரிய சோகிகள் போற்காணும் பற்களும் கூடத்தான். பற்கள் முளைக்குமுன், கீழுதடும்

மேலுதடும் ஒரு காலத்தில் ஒத்து வாழ்ந்திருக்கலாம்; இது அநுமானம்; எனக்கு நேரில் தெரியாது. நான் காணும்பொழுதோ, ஹிந்துக்களும் முஸ்லிம்களும், அதிகாரிகளும் ஒத்துழையாதவரும், பிராமணரும் ஜஸ்டிஸ் கட்சியினரும், ஒருவேளை கூடிவாழ்ந்த போதிலும், தக்கடியின் உதடுகள், அவனுடைய தந்த மலைத் தொடரைத் தாண்டி, சேர்ந்து வாழ்வதில்லை; ஆனால், மேலே கூறிய எதிரிகள் கை கலந்து கலகஞ் செய்யும் காலங்களில், ஒருவரை ஒருவர் கிட்டித் தாக்குவதுபோல, தக்கடி பேசும்பொழுதும் பாடும்பொழுதும், அவன் இதழ்களும் குவிந்து கூடும். அவன் கண்கள், எலிகள் அணில்களின் கண்களைப்போலச் சிறுத்து, குண்டுமணிபோல் மினுமினுக்கும். புருவத்தில் மயிரின்மையால், புருவம் வேறு நெற்றி வேறென்று வரம்பில்லை. இரண்டு கண்களுக்கும் இடையே, திரண்டுருண்டு நீண்ட ஒரு பெரிய கொழுக்கட்டைபோல், அவன் மூக்குத் தளதளத்துக் கொலுவிருந்தது. அவன் செவிகள், குழிமுயலின் செவிகள்போல, முகத்தின் இருபுறமும் நீண்டோங்கி நின்றன; தூரத்தில் காணும் தீபஸ்தம்பங்களுக்கு அவைகளை ஒப்பிடுவாருமுண்டு. அவனுக்குத் தலைமயிரென்று சொல்லுதற்கில்லை; இரண்டு செம்பட்டைச் சடைகள் மட்டும் பின்புறம் தொங்கின. மனிதனானவன் மிருகங்களின் வழித் தோன்றினவனே என்பதை ருசுப்படுத்த, மேல்நாட்டுப் பரிணாமவாதிகள் பலர், அரிய பெரிய நூல்களை இயற்றியிருக்கின்றனர்: தக்கடியோ, தானே அக்கொள்கைக்குப் போதுமான தனிப் பிரமாணமாக விளங்கினான்.

அவன் நிறத்தை இவ்வண்ணமென்று கூறுவது சுலபமன்று: பிறந்தவுடன் அவன் சிவப்பாகவே இருந்தானாம்; பிறகு வரவரக் கறுத்து, முப்பதுக்குமேல் உண்டான வெண்குஷ்ட நோயால் மீண்டும் ஆங்காங்கு வெளுத்து, நான் காணும்பொழுது, சில குரோட்டன் செடிகளைப்போல, பல வர்ணமாய்த் தோன்றினான். தக்கடியின் பாதாதிகேச வருணனையை ஒருவாறு முடிக்குமுன், அவன் முதுகின் வலப்புறமட்டும் புடைத்துயர்ந்துள்ள கூனலையும், கப்புக் கால்களையும் கூறவேண்டும்.

இந்தச் சுந்தர புருஷனது நடை உடை பாவனைகளும் குதற்கமாகவே இருந்தன. அவன், தவளைபோல் குதிப்பான்; பூனைபோல் பதுங்குவான், பாய்வான்; ஆடுவான்,



சாடுவான், ஓடுவான்; ஹரிகோவிந்தம் உருளுவான்; சாதாரண மனிதரைப்போல நடப்பது மட்டுமில்லை. அவன் ஆடையை நான் எப்படி வருணிப்பேன்? அவனோ, பலகலை விநோதன்: காலை மாலை, முதல் நாள் மறுநாள், ஒன்றுபோல் ஆடை உடுப்பதில்லை. ஒருவேளை, கால்சராய், மேல்ங்கி, தொப்பி அல்லது குல்லாயுடன் இலங்குவான்; ஒருவேளை, கோவணமட்டும் பூண்டு, கும்மாளம் கொட்டுவான். இடுப்பில் தட்டு வேஷ்டியைத் தாறுபோட்டுத் தூக்கிக்கட்டி, தலையில் ஒரு கோமாளிக்குல்லா அணிந்து திரிவதே, மற்றெல்லாக் கோலங்களிலும் மிகச் சாதாரணமான கோலம் என்னலாம். சில வேளைகளில், இந்த மன்மதன், ஸ்திரீவேஷம் பூண்டு பவனி வருவதுமுண்டு: அப்பொழுது, தான் மோகினியின் அவதாரம் என்பதே அவன் முழு நம்பிக்கை. மனிதரின் சிரிப்பு, மன மகிழ்ச்சியைக் குறிப்பதாயின், அவனை அப்பொழுது கண்டவரெல்லாம், மோகினியையே கண்டவரினும் அதிகம் மகிழ்ந்தனரென்பது தகும். தன்னைவிட அழகரும் புத்திசாலிகளும் சமர்த்தரும் இல்லை என்னும் உட்கிடையே, அவனுடைய பாவனைகளினெல்லாம் மேலிட்டுத் தொனிக்கும். தக்கடியை முதல் முதல் நான் கண்ட வைபவத்தை, அடுத்த அத்தியாயத்தில் கூறுகிறேன். —கோணக்கோபாலன்.

(தொடரும்.)

## மது விலக்கு

இந்தியாவில் அபின் (Opium in India) என்னும் நூல் ஒன்று இன்றே (29–10–24) கிடைத்துள்ளது. அதன் சாராம்சத்தை அடுத்த மாதத்துக் காசில் வெளியிடுவேன்.

—ப-ர் ப-ம்.

**குசிகர் குட்டிக் கதைகள்—"சிந்தாமணி" பத்திரிகை கூறுவது—**

ஜன சமூகம் சீர்திருந்தும் வகையில் கதைகள் எழுதப்படுவதும் ஒன்று. குசிகர் குட்டிக் கதைகள் சமூக சீர்திருத்தத்தை உத்தேசித்து எழுதப்பட்டனவாகும். சீர்திருத்தத்திற்கென்று எழுதப்பட்டுப் பரிகசிக்கத்தக்க விதமாயும் அவமதிப்பேற்படும் வண்ணமும் எழுதப்படும் வீண் கதைகள் போலல்லாது, பரிதாபத்துடனும் நன்னோக்கத்துடனும் ஆசிரியர் எழுதியிருப்பது பாராட்டத்தக்கது. கதைகளைப் படிக்குங்கால், சிலவற்றில் அடக்கமுடியாத சிரிப்பு, மனம் சகியாத துக்கம், ஆழ்ந்த கருத்து இவைகள் உண்டாகின்றன. கதைகள் படித்துப் பொழுதுபோக்கக்கூடிய பெண்மக்கள், விகாரமான புத்தகங்களைப் படியாமல், இத்தகைய கதைகளைப் படிப்பார்களானால், தேச முன்னேற்றமும் சமூக சீர்திருத்தமும் கூடிய சீக்கிரமுண்டாய்விடத் தடையிராதென்பது நமது அபிப்பிராயமாகும்.




# மாதச் செய்திகள்

இந்திய வைஸ்ராய் கமிஷனராக இருந்த டாலால் என்பவர் தன் பதவியை ராஜிநாமா செய்து விட்டார். அவருக்கும் வெம்ப்ளிக் காட்சி இந்திய கமிஷனரான ஸ்ரீ. T. விஜயராகவாசாரியாருக்கும் உத்தியோக சம்பந்தமாய் நேர்ந்த மனஸ்தாபமே இதற்கு மூலமான காரணம் என்கின்றனர் சிலர்.

தொழிற்கட்சியார் தோற்றுப் பிரிட்டிஷ் பார்லிமென்டு கலைந்துவிட்டது. 29-ம் தேதியன்று புதிய தேர்தல் நடக்கும். தொழிற்கட்சி மீண்டும் உடனே அதிகாரம் பெறுதல் அரிது.

மகாத்மாகாந்தி உண்ணாவிரதமும், ஒற்றுமை மகா நாட்டின் கூட்டமும் முடிந்தன. இந்து-முஸ்லிம் கலகங்கள் முடிந்த செய்தி இன்னும் எட்டிலது.

சென்னைச் சட்டசபை பத்தாம்தேதி கூடிப் பல விஷயங்களை ஆலோசித்து வருகின்றது. நீர்ப்பாசன மசோதாவே முக்கிய விஷயம்.

வட இந்தியாவிலே கங்கை யமுனை நதிகள் பெருக்கெடுத்து, அளவற்ற வெள்ளச் சேதம் நிகழ்ந்தது. ஒரு தாலூகாவில் மட்டும் 175 ஊர்கள் மூழ்கிப் போயினவாம். உயிர்ச் சேதமும் கால்நடை நஷ்டங்களும் அதிகம்.

பிராம்மணரல்லாதார் வருஷாந்தரக் கூட்டம் சென்னையில் நிகழ்ந்தது. "ஜஸ்டிஸ்" கட்சிக்குள் ஒற்றுமையில்லை என்பதைத் தவிர, மற்றொன்றும் முடிவாகத் தீர்மானிக்கப்படவில்லையாம்.

ஆந்திரர் மகாநாடு சென்னையில் கூடியது. மேலையர் சம்பந்தமின்றி இந்தியா சுயேச்சாதிகாரம் வகிக்க வேண்டும் என்ற விஷயம் வாதிக்கப்பட்டு, சபாநாயகரின் இரண்டாவது வோட்டாலேயே தோற்றது. ஆந்திரர் அனைவரும் ஒரே மனதாய் விரும்பியிருப்பின், அச்சுவாதீனம் கிடைத்திருக்கும்போலும்!

வங்காளத்திலே துரைத்தனத்தார் கடினமான அடக்கு முறையைக் கையாளத் தொடங்கி விட்டனர். 25-10-24 அதிகாலையில், கல்கத்தா நகரில், 58 வீடுகள் வரை ஆங்காங்கு சோதனை செய்து, சுயராஜ்யக்கட்சிக் காரியதரிசியும் சட்டசபை மெம்பரும் உள்படப் பலரைச் சிறை செய்திருக்கின்றனர். அங்காத்துக் காங்கிரஸ் ஆபீசு போலீசார் கைவசமிருக்கின்றது. வங்காள மெங்கும் பலவிடங்களில் சோதனைகளும் சிறை செய்வதும் மும்மரமாய் நடக்கின்றன.



# பத்திராதிபர் குறிப்புக்கள்

(524-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நவீன நாகரிக தமிழ்ப் புத்தகங்கள்:—பேராசிரியர், அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர் முதலியோர் இயற்றிய உரைகள் தவிர, பழைய தமிழிலே வசன நடை நூல்கள் இல்லையென்றே சொல்லலாம். வசன நூல்கள், கடந்த ஐம்பது ஆண்டுகளுக்குள் தான் தோன்றத் தொடங்கி, நாளுக்குநாள் மிகுதியாக வெளிவருகின்றன. இத்தகைய நூல்களே, தமிழில் புலமையில்லாத சாதாரண ஜனங்களுக்கு, முக்கியமாய்ப் பெண்பாலார்க்கு, அதிகம் பிரயோசனப் படுமென்பது வெளிப்படை. இப்பொழுது வெளிவரும் உரைநடை நூல்களில், சாஸ்திர சம்பந்தமான நூல்கள், பொது விஷயங்களைப்பற்றிய வியாசங்கள் சிற்றுரைகள் முதலியன மிகச் சிலவும்; பிறமொழிப் பெயர்ப்புக்கள், சமய நூல்கள் முதலியன அவற்றினும் சிறிது மிக்கனவும்; நவீனகம் என்னும் நாவல்கள் மிகப் பலவுமாயிருக்கின்றன. இவ்வாறு பலதிறப்படும் வசன நூல்களில் எவை படித்தற் கேற்றன, இன்சுவையும் நற்பயனும் தரவல்லன, எவை பயன் தாரதன, அல்லது, தீமை விளைப்பன என்பதை, அவற்றைப் படித்துப்பார்த்து மதிப்பிடும் தகுதியுடையாரன்றிப் பிறர் அறியார். ஆயின், வாசிக்க வேண்டியவர், பொதுவாய்த் தாமே மதிப்பிடும் தகுதியில்லாத சாதாரண ஜனங்களும் ஸ்திரீகளுமாயிருத்தலால், சென்ற 50 வருஷங்களாக வெளிவந்துள்ள தமிழ் வசன நூல்களில், இன்ன இன்ன புஸ்தகங்கள் யாவரும் படிக்கும் பெருமை வாய்ந்தன வென்று ஒரு ஜாபிதா தயார் செய்து, பல பத்திரிகைகள் மூலமாயும் பகிரங்கப் படுத்தினால், அது, பொதுஜன உபகாரமாகு மென்பதிற் சந்தேகமில்லை. இவ்வேலையை எனது நண்பர் Dr. A. J. அப்பாசாமி மேற்கொண்டிருக்கிறார். அவர் வேண்டுகோளின்படி இக்குறிப்பை நான் எழுதலானேன். இவ்விஷயத்தில் அக்கரை

யுள்ள அறிவாளரும் படிப்பாளரும், தத்தம் அபிப்பிராயத்தில், தற்காலத்துத் தமிழ் வசன நூல்களில் மிகச் சிறந்த 50 புஸ்தகங்களைக் குறிப்பிட்டு, இப்பத்திரிகையின் விலாசத்துக்கு எழுதுவாராயின், இவ்வண்ணம் திரட்டப்படும் அபிப்பிராயங்களையெல்லாம் ஒப்பு நோக்கி ஒழுங்கு செய்து, முடிவில் ஒப்பேறிய ஜாபிதா பிரசுரஞ் செய்யப்படும். இதைப்பற்றி Dr. அப்பாசாமி பல இங்கிலீஷ் பத்திரிகைகளுக்கும் கூட எழுதுவார். இவ் வேண்டுகோளுக்கு இணங்கி நூல்களைப் பொறுக்கப் புகுவோர், "காமஞ் செப்பாது கண்டது மொழிதல்" அவசியமாகும்.

வங்காள அடக்குமுறை:—விசேஷ அதிகாரங்களை மேற்கொண்டு வங்காளத் துரைத்தனத்தார் தொடங்கியிருக்கும் கடினமான அடக்குமுறை, இந்தியர் யாவர்க்கும் பெருங்கவலையைத் தரும். உருக்க உருக்கப் பொன் ஒளிர்வது போலத் தேசபக்தியும் சுடச் சுடத்தான் புனிதமுற்று மேன்மையுறு மென்பது திண்ணம். துரைத்தனத்தாரின் அறிக்கையைப் பார்த்த பெரியர் சிலர், இது வீண் கிலி என்றே அபிப்பிராயப் படுகின்றனர். காலம்தான் உண்மையைத் துலக்கவேண்டும்.

திருக்குறள் நானூறு:—இவ்வேலை விரைவாக நடந்து வருகிறது. டிசம்பர் மாதத்திலோ, ஜனவரியிலோ புஸ்தகம் வெளிவரலாம். இப்பொழுது ஆர்டர் செய்துள்ளவர் தயைசெய்து அதுவரை பொறுத்திருக்க வேண்டுகிறேன். இந்நூலைப்பற்றி அடுத்தமாதக் குறிப்புக்களில் விவரமாய் எழுதுவேன்.

வெள்ளக் கஷ்ட நிவாரண நிதி:—524-ம் பக்கத்தில். சென்றமாதம் கூறிய ஏழுபேரன்றிப், பின்வரும் ஐவரும், இப்பத்திரிகை மூலமாகத் தலைக்கு ஒரு ரூபா, இந்நிதிக்கு உதவியிருக்கின்றனர்:—(8) கிருஷ்ணராயபுரம் ஸ்ரீ. மல்லீஸ்வரம் (9) டாடாநகரம் ஸ்ரீமதி Mrs. சாஸ்திரி (10) கொழும்பு ஸ்ரீ. குருநாதன் (11) மலேயா போர்ட் டிக்ஸன் ஸ்ரீ. சுந்தரேசையர் (12) அம்பாசமுத்திரம் ஸ்ரீ. ஸ்ரீநிவாசையங்கார்.

அ. மாதவையர்.



கன்னிகாதான வயது கழிந்துவிட்டது; இன்னும் தாமதிக்கலாகாது' என்று, அடிக்கடி நெருக்கிக் கொண்டே இருக்கிறார். உன்னிடம் இதைப் பற்றி நான் சொல்லவில்லை: வாரம் தப்பினாலும் அவர் கடிதம் தப்புகிறதில்லை.

நாரா:—ஆனால், ருதுவானபின்பே விவாகம் என்பதெல்லாம் வீண் கனவுதானோ?

கோபா:—அப்படித்தான் தோன்றுகிறது. அக்காளின் உபத்திரவமும் நாளுக்கு நாள் அதிகமாய்க் கொண்டே வருகிறது. என் மாமனார் எழுதுவது அவளுக்குத் தெரியாது; தெரிந்தால், இன்னும் என்னை விடமாட்டாள்.

நாரா:—குட்டிக்கு இப்பொழு தென்ன,—

கோபா:—பத்தாவது வயதே நடக்கிறது. ஆலைநல்லூர்ப் பண்ணையார் குமாரனைப் பற்றித்தான் என் மாமனார் முக்கியமாய் எழுதுகிறார். அவன் பங்குக்கு மட்டும் லகாரத்துக்குக் குறைவில்லையாம். வயது பன்னிரண்டே.

நாரா:—படிப்போ?

கோபா:—பண்ணையார் பிள்ளை, பன்னிரண்டு வயது என்றால் தெரியாதா? ஏதோ, முதல் பாரத்திலே உள்ளூரிலேயே வாசித்துக்கொண் டிருக்கிறானாம். கடைசியில் உருக்கூடுவது பிள்ளையாராய் முடியுமோ, குரங்காய் முடியுமோ, யார் கண்டது? நம்ம குட்டி இரண்டாம் பாரம், அவன் முதல் பாரம்! கலியாணம் ஆகிவிட்டால், பட்டணத்திலேயே அழைத்து வைத்துக்கொண்டு, செவ்வையாய்ப் படிப்பிக்கலா மென்று எழுதுகிறார். அதெல்லாம், சும்மா, என் கண்ணைத் துடைப்பதற்காகத் தான்; லகாரம்தான் அவருக்கு முக்கியம்.

நாரா:—ஜமாய் பின்னே! பண்ணையோடு பண்ணை பெரும்பண்ணை யாகட்டும். ஒருவேளை உன் மாப்பிள்ளை தலையெடுத்து ஒரு ஜமீனையும் வாங்கலாம்.

கோபா:—போடா, கேலிபண்ணாதே. என் மனோவிசாரத்தை அறிந்தால், நீ இப்படிப் பேசமாட்டாய். அவர்

எழுதுவதும் ஒருசமயத்தில், சில அம்சங்களில், சரி என்றே தோன்றுகிறது; சில சமயங்களில், வேறு சில விஷயங்களைக் கவனித்தால், அது முழு மூடத்தனம் என்றே தோன்றுகிறது. இது தீராத தர்ம சங்கடந்தான். இந்த இரண்டுங்கெட்டான் காலத்திலே வாழ்கின்றவர் பாடு கஷ்டந்தான்.

நாரா:—யார்தான் இரண்டுங்கெட்டான் காலத்திலே வாழாதவர்? ஒவ்வொரு தலைமுறையோரும், தலைமுறை தலைமுறையாக, இப்படியே நினைப்பதுதான் உலக வழக்கம். நம்முடைய முன்னோர்கள், இவ்வித தர்ம சங்கடங்கள் எதுவுமின்றி, அலையில்லாத குளம்போல அமைதியாய், ஒரே ரீதியாய் வாழ்ந்து வந்தார்கள் என்று, நாம் எண்ணுகிறோம். நம்முடைய பின்னோர்கள், நம்மையும் அப்படியே மதித்து, தாமே தர்ம சங்கடங்களுக் குள்ளாகி வாழ்வதாகவும், தம் காலமே இரண்டுங்கெட்ட காலமென்றும் நினைப்பார்கள் என்பது, நிச்சயம். உலகம் நாளுக்கு நாள், தலைமுறைக்குத் தலைமுறை, அபிவிருத்தி யடைந்து வருகிறது என்பதற்கு, இதுவே சாக்ஷி.

கோபா:—உலகம் எக்கேடும் கெடட்டும்! என்பாடு இப்பொழுது பெரிய சங்கடமா யிருக்கிறது. என் மாமனார் அலட்டுதலுக்கும் அக்காள் இம்சைக்கும் இணங்கி, இப்பொழுதே, வருகிற தைமாதத்திலே, குட்டியின் கலியாணத்தை நடத்தி விடலா மென்றே, அநேக வேளைகளில் தோன்றுகிறது.

நாரா:—மனசு எந்தப்பக்கம் சாய்கிறதோ அந்தப் பக்கத்துக்கு அநுகூலமான காரணங்களும் சாக்ஷிகளுமே அதிகம் கிடைக்கும் என்பது நிச்சயம். இதற்கும் உன் புனர் விவாவக விஷயத்துக்கும் ஏதாவது சம்பந்த முண்டோ? என்ன, பதில் ஒன்று மில்லை?

கோபா:—என்ன பதில் சொல்கிறது? என் மனசே





எனக்குத் தெளிவாயில்லை. நானும் தான் எத்தனை நாள் இப்படியே இருப்பேன்?

"இந்த ஜன்மத்திலே விடுதலை உண்டு!"

என்று ஒருவன் பாடவில்லையா? எனக்கு மட்டும் இந்த ஜன்மத்திலே விடுதலை இருப்பதாகத் தெரியவில்லை."

கடைசி வார்த்தைகளைப் பேசும்பொழுது, கோபாலையர், மிக்க விசனத்தோடு, திடீரென்று கண்ணீர் தேக்கிய குரலிலே பேசினதால், நாராயணையர் சிறிது திடுக்கிட்டுப் பிற்பாடு: "ஏன், ஏன் கோபு, உனக்கென்ன குறை? தெய்வ சங்கல்பம், அவள் தவறிப் போய்விட்டாள். மீண்டும் ஒருத்தியை உன்மனம்போல மணந்துகொண்டு, நீ ஸந்தோஷமாய் வாழவேண்டு மென்றே நாங்கள் எல்லோரும் ஆசைப்படுகிறோம். அதைப்பற்றி உன்னிடம் வற்புறுத்திப் பேசவேண்டு மென்று சாவித்திரி சொன்னதனால்தான், இன்று நான் அந்தப் பேச்சை மீண்டும் எடுத்தேன். நீயோ, இந்த விஷயத்தைப் பற்றி மட்டும் தாராளமாய் மனந்திறந்து பேசுவதில்லை. உன் மனத்துக்குள்ளிருந்து ஏதோ உறுத்துவது மாத்திரம் தெரிகிறதே ஒழிய, அது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை. நீ சொன்னால், எங்களால் கூடியவரை உன் ஸந்தோஷத்தையே கோரிநடப்பதில் என்ன சந்தேகம்?" என்றார்.

கோபா:—நீ ஒரு கதை கேட்டிருக்கிறாயா, நாணு?

நாரா:—நானா? எத்தனையோ கதை கேட்டும் இருக்கிறேன்; சொல்லியும் இருக்கிறேன். நீ சொல்ல வரும் இந்தக் கதை என்ன? சொல்லு, கேட்போம்.

கோபா:—ஒருவன் இறந்தபின், ஸ்வர்க்கத்திற்குள் நுழைய விரும்பி, வாசற் காப்போனுடன் மன்றாடினானாம். 'நீ பாபி; உன்னை உள்ளே விடமுடியாது' என்றான், வாசற்காப்போன். 'நான் பாபி என்பது உண்மைதான்; ஆனால், வேண்டுமென்று நான் பாபங்களை விரும்பிச்

செய்யவில்லை. என் கஷ்டங்களினால் அவற்றைச் செய்ய நேர்ந்தது. நான் சம்சாரத்தில் பெண்டு பிள்ளைகளுடன் வாழும்பொழுதும், அவர்களின் நிமித்தம் அதிகம் கஷ்டப் பட்டேன்; என் பெண்டாட்டி இறந்த பின்னும் அதிகக் கஷ்டப்பட்டேன். அதனால் நான் பட்ட கஷ்டங்களுக்கு இரங்கியேனும், என்னை உள்ளே விடவேண்டும்' என்று, அவன் மீண்டும் மன்றாடவே, வாசற்காப்போன் அவனை உள்ளே விட்டுவிட்டான். பிறகு, மற்றொரு பாபாத்மா, 'என்னையும் உள்ளே விடு' என்றான். 'நீயும் பாபி, உன்னை உள்ளே விடமுடியாது' என்றான் ஸ்வர்க்க வாசல் காவலாளி. 'அவனை மட்டும் விட்டாயே; அவன் ஒரு முறையே கலியாணம் செய்து கொண்டு கஷ்டப் பட்டான். நானோ, ஒன்றின் பின் ஒன்றாக மூன்று முறை கலியாணம் செய்து கொண்டு, மிகவும் கஷ்டப்பட் டிருக்கின்றேன்'' என்றான் இவன். இதைக்கேட்ட வாசற்காப்போன், கதவைப்பூட்டி விட்டு: ''போ! போ! இதென்ன ஸ்வர்க்கம் என்று நினைத் தாயா? அல்லது பயித்தியக்காரரை அடைத்து வைக்கும் ஆசுபத்திரி என்று நினைத்தாயா?'' என்றுசொல்லி அவனைத் துரத்திவிட்டான். இதுதான் என் கதை. ஒரு முறை பட்டும், அநுபவித்தும், புத்திவராதவன் பயித்தியக்காரனே.

நாரா:—நீ ஒரு பாட்டுக் கேட்டிருக்கிறாயா, கோபு?

கோபா:—சொல்லு, கேட்கிறேன்.

நாரா:—''பர்த்தாவுக் கேற்ற பதிவிரதை யாமாகில்
எத்தாலும் கூடி இருக்கலாம்——,''

கோபா:—போதும் போதும்; கேட்டிருக்கிறேன் நான். ஆனால், ''ஏற்ற பதிவிரதை'' வாய்ப்பதற்கு யார் பொறுப்பாளி? முதல்தாரமே அப்படி யொரு பெண்டாட்டி கிடைத்து, அவளுடன் உண்மைக் காதலின்பத்தை அநுப வித்தவன், அவள் இறந்து விட்டால், மற்றொருத்தியை நாடவேமாட்டான். அப்படிக்கின்றி, முதலிலேயே 'ஏறு





மாறான' ஒருத்தி வாய்த்திருந்தால், மீண்டும் பரீக்ஷை பார்க்க விரும்புப்வன் பயித்தியக்காரனே யாவான்.

நாரா:—இரண்டாம்முறை ஏற்றவளாகக் கிடைத்துவிட லாகாதா?

கோபா:—என்ன, நாணு, நீயும் இப்படிப் பேசுகிறாய்? நீ என்னவோ, பாக்கியசாலி; உன் இஷ்டம்போல் உனக்கு வாய்த்து விட்டாள்; நீ ஸந்தோஷமாயிருக்கிறாய். நீயும் நானும் அறிந்த பேராக, உன்னையும் என்னையும்போல் படித்தவர்களுடைய குடும்பங்களை ஆராய்ந்துபார். ஒன்று, புருஷர்களுடைய படிப்பே பயன்படாமல், குங்குமம் சுமந்த கழுதைகள்போல, படியாத மூடர்களைப் போலவே வாழ்கிறார்கள்; அல்லது, புருஷருக்கு ஒரு நீதி பெண்களுக்கு ஒரு நீதி என்று நம்பி, தங்கள் சுக சௌகரியங் களையே பாராட்டிக் கொண்டு, கர்நாடக மாதிரியாகத் தங்கள் ஸ்திரீகளை நடத்திவருகிறார்கள்; அல்லது, படிப்புக் கேற்ற லக்ஷியங்கள் உடையவர்களாயிருந்தால், பூனையும் நாயும் போல ஓயாது சண்டையிட்டு, தர்ம சங்கடங்களில் கிடந்துழன்று தவிக்கின்றார்கள். உயர்ந்த லக்ஷியங்க ளோடு மனமொத்தவர்களாய், ஸ்திரீ புருஷர் இசைந்து வாழும் வாழ்க்கையை எத்தனை குடும்பங்களில் காணலாம்? உன் குடும்பத்திலேயுமே பார்: பத்மாவதி படித்தவள் தான், பல விஷயங்களில் உன்னைப்போல் நினைப்பவள் தான் என்றாலும், உங்கள் வாழ்க்கை ரீதி மனம் பிடியாமல், உன் மாமனும் மாமியும் ஊருக்குப் போய்விட்டதனால், உன்னி னும் எவ்வளவு அவள் வருந்துகிறாள்? அந்த விஷயத்தில் உங்கள் இருவர் மனமும் ஒத்துப்போகிறதா பார்? உங்கள் பாடே இப்படியானால், என் போல்வார் பாடு சொல்ல வேண் டுமோ? அது தான் இரண்டும் கெட்ட காலம் என்றேன்.

நாரா:—ஆனால் உன் கருத்துத்தான் என்ன? உன்னால் இப்படியே இருந்துவிட முடியுமோ? முடிந்தாலுமே இருப்பது சரியோ? இப்பொழுதே உன்னைப்பற்றிப் பலர் பலவாறு பேசுகிறார்கள்; உன் காதிலும் விழுந்திருக்கலாம்.

கோபா:—என்ன பேசுகிறார்கள்?

நாரா:—நீ என்னிடத்தில் இதைப்பற்றிப் பேசாததால், எனக்குப் பிறர் சொல்வதைச் சொல்லவும் கூசுகிறது.

கோபா:—இதிலென்ன, சும்மா சொல்லு.

நாரா:—உன்னுடன் வாசித்த ஒரு சட்டைக்காரப் பெண்ணை நீ வைத்துக் கொண்டிருக்கிறாயாம். குட்டிக்குக் கலியாணமான பின்பு, அவளையே நீ கலியாணம் செய்து கொள்ளப் போகிறாயாம். அதனால் தான் இப்பொழுது கலியாணம் வேண்டாமென்று, வந்த பெண்களை யெல்லாம் தள்ளி விடுகிறாயாம். இன்னும் பலர் பலவாறு பிதற்றுகிறார்கள். அதையெல்லாம் நான் நம்பவில்லை.

கோபா:—ஆனால் இதை நீ நம்புகிறாயா?

நாரா:—அப்படியில்லை. இதில் ஒன்றும் அசம்பாவிதமாகத் தோன்றவில்லை. இந்த விஷயத்தில் உன் அபிப்பிராயமும் என் அபிப்பிராயமும் வேறென்பது தெரிந்த விஷயமே. முன்பு, நீ உன் மனைவி உயிரோடிருக்கும் பொழுதே, சாலாவை வைத்துக்கொண்டிருந்தது நான் அறிந்த விஷயமே. எனவே, இது ஒருவேளை உண்மையா யிருக்கலாமென்றே எண்ணினேன்.

கோபா:—அக்காள் காதுவரை இந்த சங்கதி எட்டியிருக்குமோ?

நாரா:—ஆம், அவளுக்கும் தெரியும்.

கோபாலையர், பெருமூச்சுவிட்டு விட்டுக்கொஞ்சநேரம் ஒன்றும் மேல்பேசாது மௌனமா யிருந்தார். நாராயணையர், தான் அழுத்திக்கேட்கக் கூசினவராய், அவர் பதிலை எதிர்பார்த்துச் சும்மா இருந்தார். இதற்குள், கோபாலையர் மகனும் மகளும், "தாத்தா வந்து விட்டார்!" "தாத்தா வந்து விட்டார்!" என்று சந்தோஷக் கூக்குரலிட்டுக் கொண்டு, இவர்கள் பேசிக்கொண்டிருந்த அறைக்குள் ஓடி வந்தார்கள். உடனே கோபாலையரும் நாராயணையரும் எழுந்து பண்ணை முத்தையரை வரவேற்கச் சென்றனர்.

807650